# தமிழரசு

ஆகஸ்ட் - செப்டம்பர் 2008

விலை ரூ.20/-

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு








சுதந்திரத் திருநாள் விழா
15-08-2008

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039

ஆடி - ஆவணி - புரட்டாசி /

ஆகஸ்ட்-செப்டம்பர் 2008

மலர் : 40 இதழ் : 2 & 3



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**
**இரா. சுரேஷ்**
**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.



தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
தொலைநகல் : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம்: www.tn.gov.in




**அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ**
**டைந்துசால் பூன்றிய தூண்.**

அன்பு கொள்ளுதல், பழிபுரிந்திட நாணுதல்,
உலக ஒழுக்கம் போற்றுதல், இரக்கச் செயலாற்றுதல்,
வாய்மை கடைப்பிடித்தல் ஆகிய ஐந்தும்
சான்றாண்மையைத் தாங்கும் தூண்களாகும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...



## இந்த இதழில்...


பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு ............ 9

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் நிகழ்ச்சிகள்

- தமிழக அரசு ஆக்கப்பூர்வமான பல செயல் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது ............................................ 2
- இதயத்தைத் தந்திடு அண்ணா .................................. 17
- ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி அண்ணாவின் கனவு நிறைவேறியது ............................ 30
- சின்னத்திரை இல்லாமல் பெரியதிரை இல்லை ............. 45
- விலைமதிப்பில்லா மனித உயிர்களைக் காக்கும் அவசர மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம் ......................... 52
- மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்து 1,500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.8.50 கோடி சுழல்நிதி மற்றும் கடனுதவிகளை வழங்கினார்.................................. 61


### 4ஆம் பக்க அட்டை

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டையொட்டி
தமிழக அரசின் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி
வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்,
சென்னையில் தொடங்கிவைத்தார். (15.09.2008)



# தமிழக அரசு ஆக்கப்பூர்வமான பல செயல் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது

61-ஆவது சுதந்திர தினத்தையொட்டி தமிழக அரசின் கோட்டைக் கொத்தளத்தில்
தேசியக்கொடியை ஏற்றி வைத்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை (15.8.2008)

அன்புக்குரிய பெரியோர்களே!

அருமைத் தாய்மார்களே!

என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும், என் வணக்கமும் நல்வாழ்த்துகளும் உரித்தாகுக!

சுதந்திரத் திருநாளில் தேசியக் கொடியேற்றும் உரிமை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனக் குரல் கொடுத்து - அந்த உரிமை பெற்றுத் தந்தவன் என்ற உணர்வோடு, இந்தக் கொத்தளத்தில் 12ஆவது முறையாக இன்று சுதந்திரத் திருநாளில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மகிழ்கிறேன்.

**தியாகமாமணிகளை தமிழக மக்கள் சார்பில் நன்றியுடன் நினைத்து போற்றி வணங்குகிறேன்**

இக்கோட்டையின் எதிரில் திரளாகக் கூடியுள்ள, உங்களையெல்லாம் காணும் வேளையில்; இதே கோட்டை கொத்தளத்துக் கொடிமரம் ஏறி - ஆங்கிலேயர் கொடியை இறக்கி - நமது நாட்டுத் தேசியக் கொடியைப் பறக்கவிட முயன்று, கைதாகி - இன்று கிண்டி தியாகிகள் மணிமண்டப முகப்பில் நமது ஆட்சியில் சிலையாக வடிக்கப்பட்டிருக்கும் ஆர்யா என்ற பாஷ்யம் என்னும் வீரத்திருமகனை நினைவு கூர்கிறேன்.

நமது நாட்டை இந்தக் கோட்டையிலேயிருந்து ஆண்டு கொண்டிருந்த ஆங்கிலேயர்களை விரட்டிட - ஜெர்மனி நாட்டுக் கப்பல் படையில் சேர்ந்து - அந்நாட்டு எம்டன் கப்பலில்

அண்ணா 100



## அறிவும் ஆற்றலும்

அறிவாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை; அறிவும், ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

சென்னைக்கு வந்து - இக்கோட்டையை நோக்கிக் குண்டுகளை வீசிய தீரன் செண்பகராமன் - என் சிந்தையில் நிழலாட - அண்மையில் 17.7.2008 அன்று அந்த மாவீரனைப் போற்றி - கிண்டி தியாகிகள் மணிமண்டபம் எதிரே அவரது முழு உருவ வெண்கலச் சிலையைத் திறந்து வைத்த நினைவோடு,

வெள்ளையரை எதிர்த்துப் போராடி தூக்குக் கயிறை முத்தமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன்! தியாக வேங்கை சுந்தரலிங்கம்! மருதுபாண்டிய சகோதரர்கள்! தீரன் சின்னமலை! நெற்கட்டும் செவல் பூலித் தேவன்! சிவகங்கை வேலுநாச்சியார்! அரிமா நெஞ்சன் அழகுமுத்துக்கோன்! செக்கிழுத்துச் சித்திரவதைக்காளான கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார்! கொடி காத்த குமரன்! வீரத்தியாகி விசுவநாத தாஸ்! விடுதலைப் போரில் வெள்ளையரை விரட்டிட "சத்தியாக்கிரகம்" என்னும் புதிய அறப்போர் முறை வகுத்தவராம் - அண்ணல் காந்தியடிகள் - அவர் புகழ்ந்த வீரத் தமிழ்மங்கை தில்லையாடி வள்ளியம்மை! பயமறியா இளைஞன் பகுத்தறிவுச் சிங்கம் பகத்சிங்! வீரப்போர் புரிந்த நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் அவர்களின் அடியொற்றி முரசொலித்த தென்னகத் திருச்சுடர் முத்துராமலிங்கத் தேவர்! மூதறிஞர் இராஜாஜி! தந்தை பெரியார்! பெருந்தலைவர் காமராசர் உள்ளிட்ட தியாக சீலர்களையும், தேசியக் கவி பாரதியார், நாமக்கல்லார் போன்ற எண்ணற்ற தியாகமாமணிகளையும் தமிழக மக்கள் சார்பில் இன்று நன்றியுடன் நினைந்து போற்றி வணங்குகிறேன்.

1947, ஆகஸ்டு 15 - விடுதலை நாளை, வெள்ளையருடன் கணக்குத் தீர்த்த நாள் எனக் கொண்டாடிய நாம், இப்போது ஒவ்வொரு ஆண்டும் நமது சாதனைகளைக் கணக்குப் பார்க்கும் நாளாகக் கொண்டாடுகிறோம் எனக் குறிப்பிட்ட - பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா தொடங்குவது இந்த ஆண்டில்தான்.

சமூக நீதியுடன் இணைந்து தொடரும் வளர்ச்சியை உறுதி செய்தல்; மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல்; கிராமப்புற, நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை இந்தப் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்களாகத் தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த குறிக்கோள்களை ஒட்டியே கடந்த இரண்டு ஆண்டுகளாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு வேளாண் துறை, தொழில் துறை, நற்பணிகள் துறை (Services Sector) ஆகிய துறைகளில் விரைந்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கோடு, ஆக்கபூர்வமான பல செயல்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

**தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் டன்களாக உயர்வு**

தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தி, 2006இல் 60 இலட்சம் டன்களாக இருந்த நிலை மாறி, 2008ஆம் ஆண்டில் 100 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வேளாண் துறையின் வளர்ச்சி இலக்கு ஆண்டுக்கு 4 விழுக்காடு என்று நடுவண் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தமிழக அரசு விவசாயிகளுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து, கூட்டுறவு விவசாயக் கடன்களுக்கான வட்டி வீதத்தை 9 சதவீதத்தில் இருந்து 4 சதவீதமாகக் குறைத்து, 103 உழவர் சந்தைகளைப் புதுப்பிக்கவும், புதிதாக 50 உழவர் சந்தைகளைத் தொடங்கிடவும் ஊக்கமளித்து,

1 இலட்சத்து 61 ஆயிரத்து 329 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கி,

5 இலட்சத்து 40 ஆயிரத்து 421 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி,

அண்ணா 100



## பிள்ளைப்பேறு

ஒரு காலம் இருந்தது; குழந்தைகளைச் செல்வம் என்ற காலம். அதுவும் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் வரைதான். அதற்கும் மேலிருந்தால் குழந்தை எத்தனை என்று கேட்பதில்லை. குழந்தை குட்டி எத்தனை என்று தான் கேட்கிறோம்.

ஆகையால் குட்டி வேண்டாம், குழந்தை என்ற அளவோடு குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். ஒரு குழந்தைக்கும் இரண்டாவது குழந்தைக்கும் நடுவில் இடைவெளி இருக்கவேண்டும். நாம் சினிமாவுக்குப் போகிறோம். மூன்று மணி நேரம் நடக்கக்கூடிய அந்தச் சினிமாவிலும் 15 நிமிடம் இடைவெளி விடுகிறார்கள். ஆனால் பிள்ளைகளைப் பெறுவதில் மட்டும் இடைவெளியே இல்லாமல் செய்கிறோம்.



பயிர்க் காப்பீடு செய்துகொள்ள வசதியாக, 25 இலட்சம் விவசாயிகளுக்கு, காப்பீட்டுத் தொகையில் 50 சதவீதத்தை அரசே வழங்கிடும் திட்டத்தைச் செயல்படுத்தி,

விவசாயத் தொழிலார்கள் - விவசாயிகள் சமூக நலப்பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், கடந்த 27 மாதங்களில் 2 இலட்சத்து 84 ஆயிரம் விவசாயக் குடும்பங்களுக்கு 160 கோடி ரூபாய் உதவித் தொகை வழங்கி,

இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக ஏழை எளிய சிறு, குறு விவசாயிகள் கடனுதவிகளும் அதிநவீன தொழில்நுட்ப உதவிகளும் பெறும் வகையில் குழுவிற்கு 10 பேர் வீதம் 10 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் மூலம் விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்களை உருவாக்கி, நிதியுதவிகளை நல்கி,

நெல் கொள்முதல் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரத்து 50 ரூபாய் என உயர்த்தி,

இந்த அரசு விவசாயிகளுக்கு வழங்கிவரும் வரலாறு காணாச் சலுகைகள் காரணமாக,

2007-2008ஆம் ஆண்டில் வேளாண் வளர்ச்சி அகில இந்திய சராசரி வளர்ச்சி விழுக்காடான 2.6 என்ற அளவைவிட வளர்ந்து, 6.5 விழுக்காடு என உயர்ந்து, தமிழக வேளாண் துறை ஒரு மகத்தான சாதனையைப் படைத்துள்ளது.


தமிழகத்தில் தொழில் வளத்தைப் பெருக்கி வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்தில் 2006க்குப்பின், 25 ஆயிரத்து 683 கோடி ரூபாய் முதலீட்டில், ஏறத்தாழ ஒரு இலட்சத்து 74 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் வகையில், 19 புதிய பெரிய தொழிற்சாலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 6 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன; மேலும், 10 தொழிற்சாலை களுக்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன;

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மூலமாக மென்பொருள் ஏற்றுமதி 2005-2006இல் 14 ஆயிரத்து 400 கோடியாக இருந்தது, 2007-2008ஆம் ஆண்டில் 28 ஆயிரத்து 295 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. அத்துடன் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது.

கடந்த ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பணிநியமனத் தடை ரத்து செய்யப்பட்டு, அரசின் பல்வேறு துறைகளிலும் புதிதாக, ஏறத்தாழ 3 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

கிலோ 2 ரூபாய்க்கு தரமான அரிசி வழங்கப்பட்டு வருவதுடன், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்திடும்

அண்ணா 100



## அறிவு

மனிதருக்குள் பேதத்தையும் அச்சத்தையும் மூட்டக்கூடிய வளர்க்கக்கூடிய எந்த ஏற்பாடுகளும் சுதந்திரத்தின் பரம விரோதிகளே! மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதைப்போல அறிவை வளர்த்துக் கொண்டு பலன் பெற வேண்டும்.

நோக்கில்; சிறப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, நியாய விலைக் கடைகளில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், மைதா, ரவை போன்ற பொருள்கள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத குடும்பங்களே இல்லை எனும் நிலையை உருவாக்கிட 1,517 கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 62 இலட்சத்து 80 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட ஆணைகள் இடப்பட்டு, இவ்வாண்டில் மேலும் 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிடத் திட்டமிடப்பட்டு, தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

220 கோடி ரூபாய் செலவில் 11 இலட்சம் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டு, மேலும் 160 கோடி ரூபாய் செலவில் 8 இலட்சம் ஏழைத் தாய்மார்களுக்கு இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஐம்பது வயது கடந்தும் திருமணமாகாத ஏழை மகளிருக்கு உதவித்தொகை**

அரவாணிகள் நல வாரியம், தூய்மைப் பணி புரிவோர் நல வாரியம் உள்ளிட்ட 24 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்கள் மூலம் 5 இலட்சத்து 82 ஆயிரத்து 774 அமைப்புசாராத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 239 கோடி ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஐம்பது வயது கடந்தும் திருமணமாகாமல் உழைத்து வாழ முடியாத நிலையில் வாடும் ஏழை மகளிர்க்கு மாதம் 400 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கும் புதிய திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 145 சமத்துவபுரங்களுடன், மேலும் 95 புதிய சமத்துவபுரங்கள் பெரியார் சிலைகளுடன் நிறுவிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டத்தின்கீழ் ஏழைப் பெண்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவி;

ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி;

**வருமுன் காப்போம் திட்டம்**

விவசாயிகளுக்கு வழங்கப்படுவது போல் நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம்;

படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் - ஆகியன சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

6 ஆயிரத்து 500 புதிய பேருந்துகள் விடப்பட்டு; மேலும் 3 ஆயிரத்து 500 புதிய பேருந்துகள் விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


இத்தகைய பல்வேறு நடவடிக்கைகளால் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் விழுக்காடு தமிழகத்தில் பெருமளவில் குறைந்து வருகிறது.

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

இதுவரை வரலாற்றில் இல்லாத அளவில் மாநில அரசின் முழு நிதியில் நிறைவேற்றப்படும் ஒரு மாபெரும் திட்டமாக, ஒரு கிராம ஊராட்சிக்கு 20 இலட்சம் ரூபாய் வீதம் 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகளுக்கு ஐந்து ஆண்டுகளில் 2 ஆயிரத்து 524 கோடி ரூபாய் நிதி வழங்கி, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளை நிறைவேற்றி, நகரங்களுக்கு இணையான அடிப்படை வசதிகள் அனைத்தும் உருவாக்கும் பணியில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது.

அதேபோல, அனைத்துப் பேரூராட்சிகளிலும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளை நமது அரசு நிறைவேற்றி வருகிறது.

அண்ணா 100



**மூடநம்பிக்கை**

**நா**ம் அறிவுத் துறையில் முன்னேற்றமடைந்தால்தான் நம்மிடம் உள்ள பழைய கருத்துக்கள் அகலும்; பாசி பிடித்துப் போன கண்மூடிப் பழக்கங்களும் தொலையும். மற்ற மூட நம்பிக்கைகள் முறியடிக்கப்படும்.

இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட குடிநீர்த் திட்டங்களிலேயே மிகப்பெரிய திட்டமாக, 616 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் முடிவடையும் வகையில் நடைபெற்று வருகின்றன.

**ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் முழுவதும் பயன்பெறும் வகையில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம், ஆயிரத்து 334 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படுவதற்கு 6.2.2008 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்**

சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கும் வகையில் - கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டங்கள் சென்னைக்கருகே உள்ள மீஞ்சூரிலும், நெம்மேலியிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வியை வளப்படுத்திட சத்துணவுடன் வாரம் மூன்றுமுறை முட்டையும், முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தொடக்கப் பள்ளிகளில் 100 விழுக்காடு குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அடுத்த ஐந்தாண்டுகளில் இடைநிலைக் கல்வி 100 விழுக்காடு இலக்கினை எய்திடும் வகையில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

உயர்கல்வியைப் பொறுத்தவரை, தொழிற்கல்விக்கான நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது.

அரசு, அரசு உதவி பெறும் கலை அறிவியல் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக் நிறுவனங்களிலும் கல்விக் கட்டணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

**6 இடங்களில் புதியதாக அரசு பொறியியல் கல்லூரிகள்**

மேட்டூர், வால்பாறை, பெரம்பலூர், ஒரத்தநாடு, சுரண்டை, குளித்தலை ஆகிய 6 இடங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும்; விழுப்புரம், பண்ருட்டி, திண்டிவனம், திருக்குவளை, இராமநாதபுரம், அரியலூர் ஆகிய 6 இடங்களில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரிகளும் தொடங்கப்படுகின்றன.

**புதியதாக 5 அரசு மருத்துவக் கல்லூரிகள்**

விழுப்புரம், தருமபுரி, திருவாரூர், சிவகங்கை, பெரம்பலூர் ஆகிய 5 இடங்களில் அரசு மருத்துவக் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்படுகின்றன.

திருச்சி, கோவை, நெல்லையில் மூன்று புதிய அண்ணா பல்கலைக்கழகங்களும்;

கல்வி இயலுக்காக தனியே ஒரு பல்கலைக்கழகமும் தொடங்கப்பட்டுள்ளன.

**திருவாரூர் மாவட்டத்தில் மத்திய பல்கலைக்கழகம்**

திருவாரூர் மாவட்டத்தில் மத்திய பல்கலைக்கழகம் ஒன்றும்; கோவையில் உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகம் ஒன்றும்; திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் ஒன்றும்; தொடங்கிட மத்திய அரசு இசைவளித்துள்ளது.

**ரூ.200 கோடி செலவில் புதிய தலைமைச் செயலக வளாகம்**

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 200 கோடி ரூபாய் செலவில் புதிய சட்டமன்றமும் தலைமைச் செயலக வளாகமும் கட்டப்படுகின்றன. சென்னை-கோட்டூர்புரத்தில் 120 கோடி ரூபாய் செலவில் உலகத் தரத்திலான அரசு நூலகம் அமைக்கப்படுகிறது. சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 11 ஆயிரத்து 124 கோடி ரூபாய் செலவில் மெட்ரோ ரயில் திட்டம் தொடங்கப்படுகிறது.

அண்ணா 100



**ஜனநாயகம்**

ஒவ்வொரு சர்க்கார் அலுவலகமும் ஜனநாயகத்தின் பயிற்சிக் கூடமாக ஆக வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் வளரும்.



**சத்துணவுப் பணியாளர்களுக்கு தனியாக ஒரு காலமுறை ஊதியம்**

இவற்றையன்னியில், இந்த சுதந்திரத் திருநாளில் முக்கிய அறிவிப்பொன்றை வெளியிட விரும்புகிறேன். ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்குவதற்கான குழந்தைகள் நல மையங்களிலும், பள்ளிகளில் பயிலும் சிறார்களுக்கு மதிய உணவு அளிப்பதற்கான சத்துணவு மையங்களிலும், மொத்தம் சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரம் சத்துணவுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்களில், அங்கன்வாடி உதவியாளர்கள், சத்துணவு சமையலர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் உள்ளிட்ட சுமார் 1 இலட்சத்து 30 ஆயிரம் பணியாளர்கள் தொகுப்பூதியத்தின் கீழ் (Consolidated Pay) நீண்டகாலமாக இருந்து வருகின்றனர். இவர்களுக்கான தொகுப்பூதியத்தை தி.மு.கழக அரசு 1.9.2006 முதல் உயர்த்தி வழங்கியது. எனினும், இவர்கள் அனைவருக்கும் காலமுறை ஊதியம் (Time Scale of pay) வழங்க வேண்டுமென பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதை நிறைவேற்ற வேண்டுமென்ற அக்கரையும் ஆர்வமும் இருப்பினும்; உற்றார் உறவினர்போல் இருந்து தாய்மை உணர்வுடன் இளம் சிறார்களை ஊட்டி வளர்க்கும் பணியில் இருக்கும் சத்துணவுப் பணியாளர்களுக்கு அதே விதமான பரிவுகாட்டி அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு நீண்ட காலமாக உண்டு. இப்போது, இந்தக் கோரிக்கையை ஏற்று, இவர்கள் அனைவருக்கும் தனியாக ஒரு காலமுறை ஊதிய விகிதத்தில் (Special Time Scale of Pay) ஊதியம் வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை பூரிப்புடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்து ஆண்டு காலத்திற்கு ஒரு ஊதிய உயர்வு வீதம் பணிமூப்பு அடிப்படையில் ஊதியத்தை உயர்த்த முடிவு.

**அண்ணா 100**

## மக்களிடம்...

சட்டம்–ஒழுங்கு பற்றிய பழைய தத்துவத்தோடு புதிய காலமும் மக்களிடம் உணர்வுகளும் பொது மக்கள் தேவைகளும் இணைக்கப்பட வேண்டும்.



அஃதன்னியில், சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்ட சுமார் 90 ஆயிரம் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தனி காலமுறை ஊதிய விகிதத்தையும் 1.9.2006 முதல் இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. இவர்களில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்து வருவோரும், தற்போது பணியில் சேர்ந்தோரும், ஒரே ஊதியம் பெறும் நிலை உள்ளது. இந்நிலையை மாற்றி, பணிமூப்பு அடிப்படையில் பணியில் மூத்தோருக்கு ஊதியம் உயர்த்தப்பட்டு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் கோரி வருகின்றனர். இக்கோரிக்கையை ஏற்று, பணியில் பத்தாண்டு காலத்திற்கு ஒரு ஊதிய உயர்வு வீதம் வழங்கி, பணி மூப்பு அடிப்படையில் ஊதியத்தை உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

இதுமட்டுமன்றி, குழந்தைகளுக்கு அன்னமிட்டு அரும்பணியாற்றிடும் இந்த சிறப்புப் பணியாளர்கள் ஓய்வுபெற்ற பின்னரும் அவர்களது வாழ்வாதாரத்திற்கு வழிசெய்யும் வகையில், இவர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் (Special Pension) அளிக்கப்படும்.

சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரம் பணியாளர்களுக்கு பயன் தரும் இந்த முடிவுகளால், அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் 200 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு கொண்டாடப்படுகின்ற இந்த நிதியாண்டில், செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் முதல் இந்த அறிவிப்புகள் நடைமுறைக்கு வரும்.

இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதின் வாயிலாக; பல ஆண்டுகளாக சத்துணவுப் பணியாளர்களின் ஊதியம் குறித்த என்னுடைய ஏக்கம் ஓரளவு நீங்கியது என்பதையும் - புதிய ஊக்கம் பிறந்து இன்றைய மழலையர் நாளைய நாட்டின் அறிவு மேதைகளாக வளர்ந்திட அவர்களை ஆளாக்கும் அரும்பணியில் இந்த இரண்டு இலட்சத்து 20 ஆயிரம் சத்துணவுப் பணியாளர்களும் ஈடுபடுவார்கள் என்பதையும் மகிழ்ச்சி பொங்க இந்த விடுதலை நாள் விழாவில் அறிவிக்கிறேன்.

மேலும், அரசு நிறைவேற்றிடும் திட்டப் பணிகளிலும் வளர்ச்சிப் பணிகளிலும் அரசு அலுவலர்களின் ஒத்துழைப்பும் கணிசமான பங்காக இருப்பதால் அந்தப் பங்கின் விகிதத்தையே அவர்களுக்கு பகிர்ந்து தருகிறோம் என்ற கொள்கையுடைய இந்த அரசு - மத்திய அரசு அலுவலர்களுக்கான ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மத்திய அரசு அறிவித்துள்ள ஆணைகளையொட்டி, அந்த ஊதிய உயர்வினை, பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழக அரசு அலுவலர்களுக்கும் மனநிறைவளிக்கும் வகையில் நடைமுறைப்படுத்துவதற்கான ஆணைகளை விரைவில் வெளியிடும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2006 மே திங்களில் இந்த அரசு அமைந்து 27 மாதங்கள் ஆகின்றன;

27 மாதங்களில் இதுவரை 29 முறை தமிழக அமைச்சரவைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, தமிழகத்தின் முன்னேற்றம் குறித்து விவாதித்துத் திட்டங்களுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டு அவை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**பணிகளை நிறைவேற்றுவதில் நொடிப்பொழுதும் வீணாக்காமல் உழைத்து வருகிறேன்**

இத்தகைய பல்வேறு நடவடிக்கைகள் மூலமாக - என் உயிரனைய தமிழ்ச் சமுதாயத்தை உயர்த்தி நிறுத்திடும் பணிகளை நிறைவேற்றுவதில் நொடிப்பொழுதையும் வீணாக்காமல் உழைத்து வருகிறேன் - வளமாக வாழ்வார்கள்; வெற்றி குவிப்பார்கள் என் தமிழ் மக்கள்! வரலாறு படைத்திடும் என் தமிழகம் எனும் நம்பிக்கையோடு! தமிழக மக்களுக்கு என் இதயங்கனிந்த சுதந்திர தின நல்வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

வாழ்க தமிழகம்!

நன்றி: வணக்கம்!

★

அண்ணா 100

## தமிழர்கள்


**த**மிழுக்கு ஆபத்து வருகிறது என்று அறிகிறபோது–ஆபத்து வருமோ என ஐயம் தோன்றும் போது–ஆபத்து வரக்கூடுமோ– என்ற சந்தேகம் வரும்போது தமிழர்கள் ஆர்த்தெழுகிறார்கள்.






# பேரறிஞர் அண்ணா

## வாழ்க்கைக் குறிப்பு



எளிய குடும்பத்தில் பிறந்து, நல்ல மாணவராக, ஆற்றல்மிகு பேச்சாளராக, சிறந்த எழுத்தாளராக, உள்ளம் கவர்ந்த பத்திரிகை ஆசிரியராக, நல்ல நூலாசிரியராக, நாடக ஆசிரியராக, நாடக நடிகராக, பண்பட்ட அரசியல்வாதியாக, உத்தமத் தலைவராக, ஒப்பற்ற வழிகாட்டியாக, நாடு போற்றும் முதல் அமைச்சராக, பல்துறை ஆற்றல் நிரம்பப் பெற்ற அறிவுலக மேதையாக ஓங்கு புகழ் எய்தியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இவர், ஏழை எளிய மக்களிடையே தம் பேச்சாற்றலால் அறிவுப் புரட்சியை உருவாக்கியவர். தமிழ்ச் சொற்றொடர் அமைப்பிலே புதிய நடை கண்டு, எழுச்சிமிகு எழுத்தால், இலட்சக்கணக்கான இளைஞர்களின் இதயங்களைக் கவர்ந்து, எழுத்துலகில் புரட்சியை உண்டாக்கிய மேதை. அடக்கத்தின் வடிவம். **கடமை, கண்ணியம், கட்டுப்பாடு** என்னும் தாரக மந்திரத்தை நாட்டு மக்களுக்கு நல்கியவர்; முதன்முதலாக, அரசியலில் குடும்பப் பாச உணர்வை ஊட்டியவர்; மாற்றாரையும் மதிக்கக் கற்றுத் தந்த ஆசான்; மாபெரும் ஜனநாயகத் தலைவர்.

திரைப்படங்களுக்குக் கதை வசனம் எழுதி, சுயமரியாதைக் கொள்கைகளை, சீர்திருத்தக் கருத்துகளை மக்களிடையே பரப்பினார். ஏழை எளியவர்களின்

நல்வாழ்வுக்காக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டுப் பலமுறை சிறைவாசம் ஏற்றார். தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, சுயமரியாதைத் திருமணச் சட்டத்தை நிறைவேற்றி, சுயமரியாதை இயக்கத் தலைவர் தந்தை பெரியாருக்கு அன்புப் பரிசு என்று அறிவித்தார். தமிழ் மக்களின் சிந்தனையில் படிந்துகிடந்த அழுக்குகளை அகற்றி தமிழகத்தை மாற்றியமைக்க தம் நாவையும், எழுதுகோலையும், இறுதி மூச்சு வரை பயன்படுத்தினார்.

## வாழ்க்கைக் குறிப்பு

**1909** – காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில், எளிய நெசவாளர் குடும்பத்தில், நடராசன்–பங்காரு அம்மாள் தம்பதியருக்கு செப்டம்பர் 15 அன்று பிறந்தார். இவரது வளர்ப்புத் தாய், சிற்றன்னை இராசாமணி அம்மையார்.

**1914** – காஞ்சிபுரம், பச்சையப்பன் தொடக்கப்பள்ளியில் சேர்ந்தார். பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரை பயின்றார்.

**1927** – காஞ்சிபுரம் நகராட்சியில் எழுத்தராக சில மாதங்கள் பணிபுரிந்தார்.

**1928** – சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இன்ட்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்து படித்தார்.

**1929** – பிப்ரவரி 17, 18 தேதிகளில் செங்கல்பட்டு நகரில் நடந்த, முதல் மாநில சுயமரியாதை மாநாட்டில் பார்வையாளராகக் கலந்துகொண்டார்.

**1930** – பச்சையப்பன் கல்லூரி முதல்வரின் உதவியால், உதவித்தொகை பெற்று பி.ஏ.(ஆனர்ஸ்) வகுப்பில் சேர்ந்து படித்தார். கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே, பெற்றோர் விருப்பப்படி, காஞ்சிபுரத்தில் அண்ணாவுக்கும், இராணி அம்மையாருக்கும் திருமணம் நடந்தது.

**1931** – மார்ச் 19ல் தமிழ் மருத்துவர் மாசிலாமணி முதலியார் நடத்திய "தமிழரசு" என்ற ஏட்டில் "மகளிர் கோட்டம்" என்னும் கட்டுரையே இவர் எழுதி வெளிவந்த முதல் கட்டுரையாகும்.

**1932** – நீதிக்கட்சி அரசின் முதலமைச்சரான பொப்பிலி அரசர் தொடர்பு அண்ணாவுக்கு ஏற்பட்டது.

**1934** – திருப்பூரில் நடந்த ஒரு மாநாட்டில் முதன் முதலாக தந்தை பெரியாரைச் சந்தித்து உரையாடினார். அன்று முதல் பெரியாரைத் தனது ஒரே தலைவராக ஏற்றார். பி.ஏ.(ஆனர்ஸ்) பட்டம் பெற்றதும், சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். பொருளாதார வசதி இன்மையால் மூன்று மாதங்களுக்கு மேல் சட்டப்படிப்பைத் தொடர முடியவில்லை.

**1935** – சென்னையில் உள்ள தொண்டை மண்டல துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகச் சில மாதங்கள் பணியாற்றினார்.

நீதிக் கட்சித் தலைவர் சி. பாசுதேவ் அவர்களோடு சேர்ந்து தொடங்கிய 'பால பாரதி' என்ற வார ஏட்டிற்கு ஆசிரியராக இருந்து தொழிலாளர் நலம் பேணும் கட்டுரைகளை வரைந்தார்.

1936 – சென்னை மாநகராட்சித் தேர்தலில் பெத்துநாயக்கன் பேட்டையில் நீதிக்கட்சி சார்பில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார்.

1938 – 'விடுதலை', 'குடியரசு' ஏடுகளின் துணை ஆசிரியர் ஆனார். 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில ஏட்டிற்கும் துணை ஆசிரியராக இருந்தார். செப்டம்பர் 26ல் பெரியார் தலைமையில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று நான்கு மாதம் சிறைவாசம் ஏற்றார்.

1939 – நீதிக்கட்சியின் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1940 – மும்பையில் (பம்பாய்) தந்தை பெரியார் – டாக்டர் அம்பேத்கர் சந்திப்பின்போது, மொழிபெயர்ப்பாளராக இருந்தார்.

1942 – மார்ச் 7 : 'திராவிட நாடு' வார ஏட்டின் ஆசிரியர் ஆனார்.

1944 – சேலம் நீதிக்கட்சி மாநாட்டில், அண்ணா தீர்மானம் மூலம், நீதிக்கட்சி திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றது.

1945 – டிசம்பர் : "சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்" என்னும் நாடகம் அரங்கேற்றம். இதை அண்ணா அவர்களே எழுதி அதில் 'காகபட்டர்' பாத்திரம் ஏற்று நடித்தார்.

1946 – ஜூலை 29 : நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பாவேந்தர் பாரதிதாசனுக்கு அண்ணா பொற்கிழி அளித்தார்.

1947 – ஆகஸ்ட் 15 : இந்நாளை பெரியார் துக்க நாள் எனல் பொருந்தாது என்றும், இந்நாள் திருநாளே என்று திராவிடநாடு ஏட்டில் அண்ணா எழுதினார்.

1948 – ஜூலை 17 : இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறைவாசம் ஏற்றார்.

1949 – ஜூலை 9 : தந்தை பெரியார் – மணியம்மையார் திருமணம் நடந்தது.

அண்ணாவும் மற்றும் பலரும் திராவிடர் கழகத்தை விட்டுப் பிரிந்து செப்டம்பர் 17இல் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற புதிய அமைப்பைத் தோற்றுவித்தனர்.


பேரறிஞர் அண்ணா – இராணி அம்மையார்

தி.மு.க.வின் முதல் பொதுச் செயலாளராக அண்ணா பொறுப்பேற்றார்.

1950 – "ஆரியமாயை" என்னும் நூல் எழுதியதற்காக ஆறு மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

1952 – இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஈடுபட்டு – இந்தி எழுத்துகளை அழித்தார்.

1953 – ஜூன் 15 : 'நம்நாடு' நாளிதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

ஜூலை 15 : மும்முனைப் போராட்டத்தில் முன்னதாகவே கைது செய்யப்பட்டு மூன்று மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

1955 – ஜனவரி 14 : அண்ணா, கதை வசனம் எழுதிய 'சொர்க்கவாசல்' என்னும் திரைப்படம் வெளிவந்தது.

1956 – மே 17–20 : திருச்சிராப்பள்ளியில் நடந்த தி.மு.க. இரண்டாவது மாநில மாநாட்டில் பொதுத்தேர்தலில் பங்கேற்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தி தி.மு.க. பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பொதுமக்கள் அனுமதியைப் பெற்றார்.



1957 – காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜூன் 9 : 'ஹோம்லேண்ட்' ஆங்கில வார ஏட்டின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

1958 – ஜனவரி 3 : பிரதமர் நேரு அவர்கள், ஜனவரி 6ல் சென்னைக்கு வரும்போது, கருப்புக் கொடி காட்டத் திட்டமிட்டதால் கைது செய்யப்பட்டு சிறைவாசம் ஏற்றார்.

1962 – காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதித் தேர்தலில் தோல்வியடைந்தார். பின்னர், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் ஆனார்.

'ஹோம் ரூல்' ஆங்கில வார இதழ் ஆசிரியர் ஆனார்.

ஜூலை 19: விலைவாசி உயர்வு எதிர்ப்பு மறியல் போராட்டத்தில் கைதாகி, வேலூர் சிறையில் பத்து வாரம் கடுங்காவல் தண்டனை பெற்றார். இந்தியா மீது சீனா போர் தொடுத்தது. விடுதலையான அண்ணா நாட்டின் யுத்த முயற்சிகளுக்குப் பல உதவிகள் செய்தார்.

1963 – ஜனவரி : கட்சியின் கோரிக்கை பிரிவினை அல்ல என்பதற்கேற்ற மாற்றம் செய்து கட்சியைக் காப்பாற்றினார்.

நவம்பர் 17 : கட்டாய இந்தி 17ஆவது மொழிப் பிரிவுச் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் நவம்பர் 16 அன்றே கைதாகி, ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

1964 – ஜூலை 26 : ஆசிரியர் பொறுப்பேற்று 'காஞ்சி' வார ஏட்டைத் தொடங்கினார்.

1965 – ஜனவரி 26 முதல், இந்தியை, இந்திய யூனியன் ஆட்சி மொழியாக்க நாடாளுமன்ற ஆட்சி மன்றக்குழு பரிந்துரை செய்ததை எதிர்த்து, 'ஜனவரி 26 துக்க நாள்' என தி.மு.க. அறிவித்தது தொடர்பாக அண்ணா சிறைவாசம் ஏற்றார்.

ஜூலை : சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, ஹாங்காங், கம்போடியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தார்.

1967 – பொதுத் தேர்தலில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பொதுத் தேர்தலில் சட்டமன்றத்தில் தி.மு.க. பெரும்பான்மை இடங்களை வென்றது.

மார்ச் 6 : நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிவிட்டு தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

ஏப்ரல் 26 : தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பதவி ஏற்றார்.



முதலமைச்சராகப் பதவியேற்கும் அண்ணா

மே 15 : ரூபாய்க்குப் படியரிசித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

ஜூலை 18 : சென்னை மாநிலத்தை **'தமிழ்நாடு'** என்று அழைக்க அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்திடும் பெயர் மாற்றத் தீர்மானத்தைச் சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றச் செய்தார்.

ஜூலை 23 : சேலம் உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்ற, மைய அரசை வற்புறுத்தி, தமிழ்நாடெங்கும் 'சேலம் எழுச்சி நாள்' நடத்தினார்.




'சீரணி' துவக்க விழாவில் அண்ணா

ஆகஸ்ட் 16 : சீரணி என்னும் அமைப்பினை உருவாக்கினார்.

செப்டம்பர் 19 : சென்னையில் கூவம் சீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

1968 – ஜனவரி 1 : உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் வழங்கப்பட்ட பேரறிஞர் அண்ணாவின் முழு உருவச்சிலை சென்னை மவுண்ட் சாலையின் (தற்போதைய அண்ணா சாலை) மையத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஜனவரி 2 : தமிழ் வளர்த்த சான்றோருக்கு, சென்னை கடற்கரைச் சாலையில் சிலைகள் அமைத்துப் போற்றினார்.

ஜனவரி 3 : உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தை, சென்னை மாநகரில் நடத்தினார். திருக்குறள் ஆராய்ச்சிக்காக ரூ.9 இலட்சம் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தார்.

ஜனவரி 23 : தாய்மொழி தமிழ், உலக மொழி ஆங்கிலம் ஆகிய இருமொழித் தீர்மானத்தைச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றச் செய்தார்.

ஏப்ரல், மே : அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் சென்று வந்தார். அமெரிக்காவில் யேல் பல்கலைக்கழகத்தில் "சப்–பெலோஷிப்" விருது பெற்றார். வாட்டிகன் நகரில் போப் அவர்களைச் சந்தித்தார்.


போப் அவர்களுடன் அண்ணா

செப்டம்பர் 8 : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், அண்ணாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

செப்டம்பர் 16 : அமெரிக்காவில் உலகப்புகழ் பெற்ற புற்றுநோய் மருத்துவமனையான மெமோரியல் மருத்துவமனையில், டாக்டர் மில்லர் என்பவரால் அண்ணாவுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

நவம்பர் 6 : சிகிச்சை முடிந்து அண்ணா சென்னை திரும்பினார்.

டிசம்பர் 1: உடல்நலம் கெட்டிருந்தும் மருத்துவர்களின் ஆலோசனையை மீறி, சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டும் விழாவில் கலந்துகொண்டு பேசினார்.


1969 – ஜனவரி 14 : பொங்கல் தினத்தில் சென்னை தியாகராய நகரில், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் சிலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசினார். அதுதான் அண்ணா கலந்துகொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி.

ஜனவரி 25 : அமெரிக்க டாக்டர் மில்லர் சென்னை வந்து அண்ணாவுக்கு அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்தார்.

பிப்ரவரி 3 : (பிப்ரவரி 2 நள்ளிரவு 12–20 மணி) சென்னையில் இயற்கை எய்தினார். அண்ணாவின் உடல், பொதுமக்கள் அஞ்சலிக்காக இராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

பிப்ரவரி 4 : அண்ணாவின் உடல் அரசு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, சென்னைப் பல்கலைக்கழகக் கட்டடத்திற்கு எதிரில் மெரினா கடற்கரையில் காலை 11.30 மணிக்கு சந்தன மரப்பெட்டியில் வைக்கப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டது.






அறிஞர் அண்ணா அவர்களுடன்
மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்

# பேரறிஞர் அண்ணா நினைவாக தமிழக அரசு செய்த பணிகள்



தமிழக அரசு, அண்ணா துயிலும் சென்னை, மெரினா கடற்கரையில் நினைவிடம் எழுப்பி, "எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது" என எழுதிவைத்து, அணையா விளக்கை ஏற்றிவைத்து, அண்ணா சதுக்கத்தை உருவாக்கி இருக்கிறது. அங்கு அண்ணாவின் அழகு தமிழைக் கேட்க, ஒலிச்சாதன வசதி அமைக்கப்பட்டுள்ளது. அண்ணா நூலகமும், அண்ணா நூல்கள் விற்பனைக்கூடமும் அண்ணா சதுக்கத்தை அணி செய்கின்றன.




அறிஞர் அண்ணா நினைவு அஞ்சல் தலை

**1969** – தமிழக சட்டப்பேரவையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டது.

**1970** – பிப்ரவரி 3 : மைய அரசு அண்ணா நினைவாக 20 காசு அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது.

**1971** – சென்னை மாநகரில் மவுண்ட் ரோடுக்கு "அண்ணாசாலை" என்று பெயர் சூட்டப்பட்டது.

தமிழக அரசு வாங்கிய இரண்டு கப்பல்களுக்கு 'எம்.வி. தமிழ் அண்ணா' என்ற பெயரும், 'தமிழ் அண்ணா' என்ற பெயரும் சூட்டப்பட்டன.

**1978** – சென்னை, கிண்டியில் தமிழக அரசால் தொடங்கப்பட்ட தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு 'அண்ணா பல்கலைக்கழகம்' என்ற பெயர் சூட்டப்பட்டது.

**1980** – காஞ்சிபுரத்தில், பேரறிஞர் அண்ணா பிறந்த இல்லத்தை தமிழக அரசு செப்டம்பர் 16 அன்று 'அண்ணா நினைவு இல்லமாக' மாற்றியது.



பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம்

**1990** – சென்னை பன்னாட்டு விமான நிலையத்துக்கு "அண்ணா பன்னாட்டு விமான நிலையம்" எனப் பெயர் சூட்டப்பட்டது.

**1994** – பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியங்கள் அரசுடைமை ஆக்கப்பட்டன.

**1997** – அனைத்து வசதிகளையும் கிராமங்களுக்கு அளித்திடும் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்", மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களால் உருவாக்கப்பட்டது.

ரூ.36.39 இலட்சத்தில் அண்ணா அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களால் திறந்துவைக்கப் பட்டது.


ஒரு கிலோ அரிசி ரூ.1க்கு வழங்கும் திட்டம்

**1997–98** : அண்ணா சதுக்கம் ரூ.294.20 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது.

**2007** – அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தொடங்கிவைத்தார்கள்.

**2008** – செப்டம்பர் 15 : அண்ணா நூற்றாண்டையொட்டி **ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தொடங்கிவைத்தார்கள்.

❖ ❖ ❖



# இதயத்தைத் தந்திடு அண்ணா

(9.2.1969 அன்று சென்னை வானொலியில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் அளித்த கண்ணீர்க் கவிதாஞ்சலி)

பூவிதழின் மென்மையினும் மென்மையான
புனித உள்ளம் – அன்பு உள்ளம்
அரவணைக்கும் அன்னை உள்ளம்! – அவர்
மலர் இதழ்கள் தமிழ் பேசும் –
மா, பலா, வாழையெனும் முக்கனியும் தோற்றுவிடும்!
விழிமலர்கள் வேலாகும் – வாளாகும்
தீங்கொன்று தமிழ்த் தாய்க்கு வருகுதென்றால்!
கால் மலர்கள் வாடிடினும் அவர் கடும் பயணம் நிற்காது;

கைமலர்கள் பிணைத்து நிற்கும், தம்பியரை, கழகத்தை
அம் மலரே எதிரிகளை மன்னித்து
நெற்கதிர் போல் தலை நாணச் செய்துவிடும்
மக்களாட்சி மலர் குலுங்க
சமதர்மப்பூ மணக்க
தாய்மொழித் தமிழே வாழ்வுப் பொழிலாக
ஆடிவரும் தென்றல்
நாடிவரும் பூமுடியே! புகழ் முடியே! உமைத்
தேடிவரும் வாழ்த்துக் குவியலிலே – தினம்,

பாடிவரும் வண்டாக நான் பறப்பேன்
உனைக் காக்க எனைத் துறப்பேன்—என்,
ஒரு கோடி தமிழ் இளைஞர்
பாடிநின்ற பாட்டுக்குப் பெருந்தலைவன்.

முடுகிற் செறிந்த தமிழார்வம்
முதிரா இளைஞர் ஆருயிராய்ப்
பெருகச் செய்த செயல் மறவர்
சிறப்பைப் பாடக் கேண்மினோ!
தங்கு கண் வேல் செய்த புண்களை
அன்பெனும் வேது கொண்டொற்றியுஞ்
செங்கனி வாய் மருந்தூட்டுவார்
சீர்மையைப் பாடக் கேண்மினோ!
பொரு தடக்கை வாளெங்கே; மணிமார் பெங்கே;
போர் முகத்தின் எவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே யெங்கேயென்று
தம்பியரைக் கேட்டானைக் கேண்மின்! கேண்மின்!
காஞ்சியிருக்கக் கலிங்கம் குலைந்த
கலவி மடவீர் கழற் சென்னி
காஞ்சியிருக்கக் கலிங்கம் குலைந்த
களப்போர் பாடத் திறமினோ என்று

மையல் கொண்ட மாதர் தமைத் துயில் எழுப்பச்
செயங்கொண்டார் பாடினார்,
களப்பரணி.. கலிங்கத்துப் பரணி –
அளப்பரிய வீரத்தின் புகழ்ப்பரணி – யான்
கவிப் பரணியேறி, காஞ்சிபுரப் பரணி பாடி நின்றேன்
அவலப் பரணி பாடுகின்றேன் இன்று...!

கவியினில் பொருளெனக் கரும்பினில் சுவையெனக்
கதிரினில் ஒளியெனக் காவினில் மலரென
நிலவினில் குளிரென நிலமிசை வளமென
குலவிடும் அருவி குழறிடும் மொழியென
உலவிடும் காற்றில் ஏறிடும் இசையென
அலையெழுங் கடலில் ஆடிடும் நுரையென
கலைமணங் கமழக் கூடிய கவிஞர்
தலைமகன் அண்ணா திருப்புகழ் பாடிட
நிலமகள் வடிக்கும் கண்ணீர் அந்தோ! வெள்ளம்! வெள்ளம்!
மாபெரும் வெள்ளம்!
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து எட்டாம்
தாயகத்தில் மொழிப்புரட்சி தோன்றுதற்கு
வித்திட்டார் சிலபேர் என்றால், ஈரோட்டு

நாயகத்தின் இணையில்லாத் தலைமை வீரர்
எங்களண்ணன் களம் புகுந்தார் காஞ்சிபூண்டு!
இருமூன்று திங்கள் வரை சிறையில் வாடி,
தரும் ஊன்று கோலாகத் தமிழைத் தந்து
அருமூன்று எழுத்தாலே அண்ணா வானார்!
அன்றொரு நாள் அய்ம்பத்திரண்டுதனில்
சென்னையிலே சொன்னேனே நினைவுண்டா உங்களுக்கு?
மூன்றெழுத்திலே ஒரு சிறப்புண்டு, முத்தமிழ் மணமுண்டு!
மூவேந்தர் முக்கொடி முக்கனியென
மும்முர சார்த்தவர் தமிழர் – அவர் வாழ்ந்த
தமிழ் "வாழ்வு"க்கு மூன்றெழுத்து – அந்த
வாழ்வுக்கு அடிப்படையாம் "அன்பு"க்கு மூன்றெழுத்து..
அன்புக்குத் துணை நிற்கும் "அறிவு"க்கு மூன்றெழுத்து
அறிவார்ந்தோர் இடையிலெழும், "காதலு"க்கு மூன்றெழுத்து..
காதலர்கள் போற்றி நின்ற கடும் "வீரமோ" மூன்றெழுத்து..
வீரம் விளைக்கின்ற "களம்" மூன்றெழுத்து...
களம் சென்று காணுகின்ற "வெற்றி" மூன்றெழுத்து
அந்த வெற்றிக்கு நமையெலாம் ஊக்குவிக்கும்
அமைதி மிகு "அண்ணா" மூன்றெழுத்து அறிந்திடுவீர் எனச் சொன்னேன்!

திக்கெட்டும் தமிழ் முழக்கம்
திசையெங்கும் சொன் மாரி
வக்கற்றோர் வகையற்றோர்
வாழ்வதற்குத் திட்டம் கோரி
வண்டாகச் சுற்றுகின்றார் மேடையேறி!
எழுதுகின்றார் அண்ணா
ஏடெல்லாம் வீடெல்லாம் தமிழ்
நாடெல்லாம்... புதுமை மணக்குதங்கே...
"ஏடா தம்பி! எடுடா பேனா"
எத்தனை உணர்ச்சி! எத்தனை எழுச்சி!
"கத்தியைத் தீட்டாதே
புத்தியைத் தீட்டு"
கருத்துப் பேழை–கற்பூரப் பெட்டகம்!
"மரக்கிளையிலே பிணம் –
வெந்த புண்ணிலே வேல்!"
மறந்திடப் போமோ; மனங்கவர் வாசகம்?
"சாலை யோரத்திலே வேலையற்றதுகள்
வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள்
வேந்தே! அதுதான் காலக்குறி!"
அண்ணனுக்கன்றி யாருக்கு வரும் இந்த அழகு நடை?
அறிவு நடை?

கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது
தமிழகம் மறவாத் தலையங்கமன்றோ?
இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?
தம்பியுடையான் படைக்கஞ்சான்
ஒப்பில்லா வரிகள் உரைத்திடும் பனுவல்
மனோன்மணீயம் எனினும் – நம்
மனதில் பதித்தவர் அண்ணா வன்றோ!

"மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்"
அரசியல் பண்பினை போதிக்கும் அழகே!
"மறப்போம் – மன்னிப்போம்"
மாற்றார் ஏசல் தாங்கிடும் மாண்பே!
எவர் கற்றுத் தந்தார் இதனை?
சுவர் வைத்துச் சித்திரம் எழுதுதல்போல்
நயமிகு பண்புடன் அரசியல் நடாத்தல்
நன்றென்றார் அண்ணா அதை மறுத்து
நாலைந்து பேர் குதித்திட்டார் என்றால்
அவர் கண்டு சிரித்திட்டார் அண்ணா –
அனைவரையும் ஓர் அன்னை பெற்றெடுக்க
வயிறு தாங்காக் காரணத்தால்
தனித்தனித் தாய் ஈன்றெடுத்த தம்பிகளே! என அழைத்து
கனிச் சுவையாய்க் கற்கண்டாய்த் தேன் பாகாய் அன்பு காட்டி
பனிமலர் வீழ் தும்பியதாய்த் தழுவிக்கொண்டார்;
சொலல் வல்லார் சேதுப்பிள்ளைதனை
சோமசுந்தர பாரதியைச் சொற் போரில்
சொக்க வைத்தார் – பாவம்; சிக்க வைத்தார்!
நீதிக் கட்சியென்று நெடியமதில் சுவருக்குள்ளே – பணச்
சாதிக்குக் கட்சியாய் இருத்தலாகாதெனும்
கொள்கையாலே அதனை
வீதிக்குக் கொண்டு வந்தார்;
வீசிடுக வெள்ளையர்கள் பட்டத்தையென்று
சேலத்து மாநாட்டில் தீர்மானம் போட்டுவிட்டார் –
அண்ணாவின் போர்க்
கோலத்தை எதிர்க்க மாட்டாமல்,
கோலற்ற குருடர்போலக் கொள்கையற்றோர்
வீழ்ந்துபோனார்!
தீரர் அண்ணா திராவிடர் கழகமெனும்
பெயர் மாற்றத் தீர்மானம்
வீரர் கூடிய மாநாட்டில் கொண்டு வந்தார்
அண்ணல் காந்தியார் அறவழி கண்டு
ஆங்கில ஆட்சியை அகற்றிய போது

துன்ப நாளெனும் பெரியார் அறிக்கையை மறுத்துத்
தொடங்கினார் போரை!
இன்ப நாளிது! இனிய நாளிது!
என்பு தோலாய் ஆன இந்தியர்
அன்புறு காந்தியின் அருளால் இன்று
எழுந்தனர் அடிமைத் தளையினை அறுத்து
முழங்குவோம் விடுதலை முரசினை எடுத்து
என்றே அண்ணா, அன்றே சொன்னார்...
அன்று முதல் அண்ணன் அய்யா உறவினிலே கீறல் விழ
அது நாற்பத்தொன்பதாம் ஆண்டினிலே பிரிவாய் மாறி
முகில் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதியாய்
முன்னேற்றக்கழகத்தை முகிழ்க்கச் செய்தார்.
தலைவருடன் கூடி வாழ முடியாமல்
பெரும்பான்மைத் தோழருடன் வெளியே வந்தும்,
நிலைகுலையா நம் அண்ணன் அன்று சொன்னார்
அது,
நேற்று சொன்னது போல் இருக்குதம்மா!
தலைவரில்லை முன்னேற்றக் கழகத்துக்கு – என்
தலைவர் இருந்த நாற்காலி காலியாக இருக்கும் அதில்
தலைவர் அவர் என்றேனும் வந்தமர்வார்
அதுவரையில் காத்திருப்பேன் என்றார்.
பூத்திருக்கும் மலர்த் தோட்டம்
காலைப் பனிநீர் வடிப்பது போல்
காத்திருந்து கூட்டம் கேட்டோர்
கண்ணீர் வடித்தார்
கண்ணீர்த் துளிகளே! நாட்டின் கண்மணிகளே! என அழைத்துச்

செந்நீர் சிந்துதற்கு அணிவகுத்தார்.
யாரேனும் பகர்ந்ததுண்டா?
யாரேனும் கேட்டதுண்டா?
பதினெட்டு ஆண்டுக்குள் ஓர் இயக்கம்
பதுங்கிப் பாயும் வேங்கையெனப் – பாராள வந்த கதை?
ஈராண்டு முடியவில்லை எம் அண்ணா ஆட்சியேற்று
சீரார்ந்த செயல் பலவும் செய்தலுற்றார்,
ஏராந்த உழவர்க்கெல்லாம் ஏற்றம் தந்து
எழில் வாழ்வு குவிப்பதற்கு எடுத்தார் முயற்சி
உலகத் தமிழ் மாநாடு துவக்க வந்த
ஓங்கு புகழ்க் குடியரசுத் தலைவரவர்
இணையற்ற காட்சி கண்டேன் மாட்சி கண்டேன்.
இதுபோல வாழ்வில் என்றும் கண்டதில்லை யென

ஊர் மெச்சப் புகழ்ந்துரைத்தார் அண்ணன் கீர்த்தி!
ஆந்திரத்துப் பிரும்மானந்த ரெட்டிகாரும்
ஆகா – நீதானே அசல் காந்தீய வாதியென்று
ஆராதனை செய்திட்டார் – ஆண்டொன்று கழியவில்லை!

மதுவிலக்கைத் தீவிரமாய் ஆக்குகின்றீர் பல
மாநிலத்தில் கை கழுவி கலயம் கட்டிவிட்டார் மரங்களிலே!
மகாத்மாவின் தோன்றல் நீர்தான் என்று!
கிரியென்றால் மலையன்றோ – அந்த
மலை தழுவும் முகிலானார் நம் அண்ணா!
வி.வி. கிரி தந்த வாழ்த்துக்கு விளக்கமிது.
பன்னாட்டுப் பேரறிஞர் வாழ்த்தி நின்றார் – அன்று
தென்னாட்டுச் சிகரமாக
இருந்திட்டோர் அண்ணன் பற்றி
என்ன சொன்னார்?
பழந்தமிழ் வித்தகர் பல்லாவரத்தார் – அண்ணா,
பழந்தமிழ்ப் பேச்சால் மயங்கி நின்றார். அந்த
மறைமலை தந்த புகழ்மொழி ஆயிரம்
பசுமலை பாரதி – பாண்டியன் தோற்றம் – அவரை
நாவலர் என்று நாடே அழைக்கும் – அவர்
சழக்கரால் வீழ்ந்த தமிழ்நிலம் காக்க – மன
அழுக்கில்லாத் தலைவன் கிடைத்தான் என்றே
அண்ணன் பெருமை சொன்னார் அன்று!
ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்றுபோல்
இளையவளாய் இருந்திட்ட தமிழாம் அன்னை
நூறாயிரம் கோடி என ஆண்டு பல வாழ்வதற்கு
நூலாயிரம் செய்திட்ட புலவர்களை ஈன்றாள் எனினும்;
கலைமகளாம் நம் அன்னை வள்ளுவனைத்
தலைமகனாய்ப் பெற்றெடுத்தாள்.

மலர் என்றால் தாமரை தான்
மன்னன் என்றால் கரிகாலன்
நூல் என்றால் திருக்குறளே அளித்திட்டான் எனப்போற்றும் அறப்பனுவல்
அளித்திட்டான் – மாந்தரெல்லாம் களித்திட்டார்!
விண்முட்டும் மலையோரம் – நம்
கண் பட்டும் படாமலும் எழுகின்ற நச்சுமரம் போல
பண்பட்ட தமிழர் வாழ்வில் – முதுகில்
புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்டதந்தோ
சாதிகளைக் காணாது குறள் ஒலித்த தமிழ் மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகளும்!

அறிவு மணங் கமழுகின்ற ஆலயங்கள் அற்றுப் போய்
ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோவில்கள் கண்டுவிட்டார்.
மொழியுணர்வே இல்லாத வாயுணர்வின் மாக்கள் – தமிழ்
அழியினும் வாழினும் என்னென்று இருந்திட்டார்
அறநெறியே குறிக் கோளாய்த் திகழ்ந்திட்ட பெரு நிலத்தில்
பிறநெறிகள் பயிர் செய்தார் பிழை குவித்தார்.
மழையற்றுப் போன வயல் போல மாறிற்றுத் தமிழர் மனம்;
அழுக்காறு – அவா – வெகுளி – இன்னாச் சொல் நான்குமின்றி
நடக்காது வேலையென்று நடந்திட்டார் சில தமிழர்;
பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லையென்று
பொருள் குவித்து வளம் செழித்த நாட்டில் – இன்று
இருள் கவிந்து வாட்டம் கோடி போட்டதங்கே.
வாடினாள் தமிழன்னை – சோகப் பாட்டுப்
பாடினாள் தமிழன்னை – அடு நெருப்பில்
ஆடினாள் தமிழன்னை
ஓடினாள் – ஓடினாள் –
ஒரு வழியும் கிடைக்கவில்லை!
புவியூர் விட்டுப் புகழூரில் வாழுகின்றான்
கவியூரின் பெருவேந்தன் குறளாசான்
ஆண்டு சென்று, அருமை மகனே
வேண்டுகோள் ஒன்று விடுத்தேன் என்றாள்.
என்னம்மா? என்றான் குறளோன்.
தோண்டுகின்ற இடமெல்லாம் தங்கம் வரும் தமிழகத்தில்
மீண்டும் நீ பிறந்திட வேண்டுமென்றாள்.

தங்கம் எடுக்கவா என்றான்
தமிழர் மனம் வாழ்வெல்லாம்
தங்கமாக ஆக்க என்றாள்
இன்றென்ன ஆயிற் றென்றான்.
குன்றனைய மொழிக்கு ஆபத்தென்றாள்;
சென்றடையக் குடிலில்லை ஏழைக்கென்றாள்;
கடிதோச்சி மெல்ல எறியத் தெரியாமல்
கொன்றெறியும் கோல் ஓங்கிற்றென்றாள்; அறிவில்
கன்றனையோர் வீணில் கதைக்கின்ற கதையும் சொன்னாள்.
அழுதகண்ணைத் துடைத்தவாறு
அமுதமொழி வள்ளுவனும்
அம்மா நான் எங்கே பிறப்பதென்றான்?
தொழுத மகன் உச்சி மோந்து – ஆல
விழுதனைய கைகளாலே.. அணைத்துக்கொண்டு
உழுத வயல் நாற்றின்றிக் காயாது இனிமேலே என மகிழும்

உழவன் போல் உள்ளமெல்லாம் பூரிப்புத் துள்ளி எழ
காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவே
கற்கண்டே! தேன்பாகே! திருக்குறளே!
நீ காஞ்சியிலே பிறந்திடுக! என்றாள்.
பிறந்திட்டான் நம் அண்ணனாக;
அறிவு மன்னனாக
பொதிகை மலைத் தென்றலாய்
போதாகி மலர்கின்ற தமிழ் உணர்வின் புதுமணமாய்
பதிகத்துப் பொருளாய்ப் பழந்தமிழர் புறப்பாட்டாய்
வந்துதித்தான் அண்ணன் – கீழ்
வானுதித்த கதிர் போல
புரியாதார்க்கு ஒரு புதிர் போல
அவன் புகழைப் பாடுதற்கு
அவன் வளர்த்த தம்பி நானும்
அவன் தந்த தமிழ் எடுத்து
இவண் வந்தேன் இதுதான் உண்மை.
தலைவரென்பார், தத்துவ மேதை என்பார்,
நடிகரென்பார், நாடக வேந்தரென்பார்
சொல்லாற்றல் சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றார் என்பார்

மனிதரென்பார் மாணிக்கமென்பார் மாநிலத்து அமைச்சரென்பார்.
அன்னையென்பார், அருள் மொழிக் காவல் என்பார்
அரசியல் வாதி என்பார் – அத்தனையும்
தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர் நெஞ்சத்து அன்பாலே
அண்ணா என்ற ஒரு சொல்லால்
அழைக்கட்டும் என்றே – அவர் அன்னை
பெயரும் தந்தார்.
அந்த அன்னைக் குலம் போற்றுதற்கு
ஔவைக்கோர் சிலை
அறம் வளர்த்த கண்ணகிக்கோர் சிலை
வளையாத நெஞ்சப் பாரதிக்கும்
வணங்காமுடி பாரதிதாசருக்கும் சிலை
வீரமா முனிவருக்கும் சிலை
கால்டுவெல் போப்புக்கும் சிலை கம்பர்க்கும் சிலை
தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை
திக்கெட்டும் குறள் பரப்ப திருவள்ளுவர்க்கும் சிலை
பத்துச் சிலை வைத்ததினால் – அண்ணன் தமிழின் பால் வைத்துள்ள
பற்றுதலை உலகறிய அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்தபோது..
ஆட்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்.

ஆணையிடுகிறார் எம் அண்ணா என்றிருந்தோம்
அய்யகோ; இன்னும்
ஓராண்டே வாழப்போகின்றேன் என்று அவர்
ஓர் விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!
எம் அண்ணா... இதயமன்னா...
படைக் கஞ்சாத் தம்பியுண்டென்று
பகர்ந்தாயே;
எமை விடுத்துப் பெரும் பயணத்தை ஏன் தொடர்ந்தாய்
உன் கண்ணொளியின் கதகதப்பிலே வளர்ந்தோமே;
எம் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றிவிட்டாய்?
நிழல் நீதான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப்போய் விட்டாய்:
நியாயந்தானா?
நான்தானடா நன்முத்து எனச் சொல்லி
கடற் கரையில் உறங்குதியோ?...
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
கண்மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்..
இன்று
மண் மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை,
கொடுமைக்கு முடிவுகண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்:
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா
எழுந்து வா எம் அண்ணா
வரமாட்டாய்; வரமாட்டாய்,
இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா நீ
இருக்குமிடந்தேடி யான்வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா..
நான்வரும் போது கையோடு கொணர்ந்து அதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா?

* * *

# அறிஞர் அண்ணா நூற்றாண்டையொட்டி கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டம் நடைமுறை

## தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 30.8.2008 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழக அமைச்சரவையின் 30 ஆவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

சிறப்புத் தீர்மானமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் முன்மொழியப்பட்டு, அமைச்சரவையினால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் வருமாறு :–

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு எவ்வளவு குறைந்த விலையில் அரிசி வழங்க முடியுமோ; அவ்வளவு குறைந்த விலையில் அரிசி வழங்குவோம் என்று 1967ஆம் ஆண்டு தேர்தலின் போது அறிஞர் அண்ணா அவர்கள் வாக்குறுதி வழங்கினார். அதற்குப் "படி அரிசித் திட்டம்" என்று பெயரிடப்பட்டது. ஆனால்



அண்ணா 100

### யார் தமிழர்?

**ப**யிரில் களை போன பிறகு, உழவர் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியைக் காண வேண்டுமா? கண்கெட்டதே என்று கவலைப்பட்டவனுக்கு மருத்துவர் உதவியால் மீண்டும் பார்வை விளக்கமானதும், அவன் எங்ஙனம் இருப்பான் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமா? பாய்ந்த வேலை வாங்கி எறிந்து, எதிரியை வீழ்த்தும்போது வெற்றி வீரனின் அகமும் முகமும் எங்ஙனம் இருந்திருக்கும் என்று தெரிந்து கொள்ள வேண்டுமா?



காதலித்தவளைக் கடிமணம் புரியும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்ற காளையின் களிப்பைக் காணவேண்டுமா? கார் கண்ட மயிலை, கதிரவனைக் கண்ட கமலத்தைக் காணவேண்டுமா?

இதோ தமிழர்களைக் காணுங்கள்; பிறப்பால் மட்டுமல்ல; உணர்வால், பண்பால் தமிழர்களாக உள்ளவரைக் காணுங்கள், இவ்வளவும் தெரியும்!

அண்ணாவின் அந்த நல்ல எண்ணம் ஈடேற முடியாமல் தடைப்பட்டு நின்று விட்டது.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற அண்ணாவின் அந்த இலட்சிய முழக்கம் வெற்றிகரமாக நிறைவேறக்கூடிய அந்த அரிய வாய்ப்பு; இந்த ஆண்டு செப்டம்பர் 15 அன்று தொடங்குகிற அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி நமக்குக் கிடைத்திருக்கிறது.

ஆம்; 2006ஆம் ஆண்டு மே, 13ஆம் நாள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நான்; பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டபோது, ஆன்றோர்களும், சான்றோர்களும் வீற்றிருந்த அந்த மேடையிலேயே விவசாயிகளின் கடன் ஏழாயிரம் கோடி ரூபாயை ரத்து செய்து அறிவித்ததுடன்– ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் எனவும் இன்னும் பல தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியும் அறிவித்தேன்.

உணவுக்குப் பயன்படும் அத்தியாவசியப் பொருட்களான உளுந்து, பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவைகளின் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நமது தமிழக அரசு; மேற்கண்ட பொருட்களை நியாய விலைக் கடைகளின் மூலம் சலுகை விலையில் வழங்கி வருவது தொடருமெனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது அரசு நியாய விலைக்கடைகளில் நடைமுறையில் உள்ள கிலோ இரண்டு ரூபாய் அரிசி வழங்கும் திட்டத்தை; அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி மேலும் விலை குறைத்து இனி குடும்ப அட்டைதாரர்களுக்கு, வரும் செப்டம்பர் 15ஆம் தேதி முதல் கிலோ அரிசி ஒரு ரூபாய்தான் என்ற விலை வைத்து நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன். அண்ணாவின் கனவை நிறைவேற்றும் இந்த அறிவிப்பைத் தமிழக மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர்களை வாழ்த்துகின்றேன்.

தொடர்ந்து நடைபெற்ற அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு :–

மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய ஒன்பது தென் மாவட்டங்களில் தொழில் தொடங்க முன்வரும் முதலீட்டாளர்களுக்கு ஒரு சிறப்புத் தொகுப்புச் சலுகை வழங்க முடிவு செய்யப்பட்டது. இதுவரை மூன்று ஆண்டுகால அளவில் 250 கோடி ரூபாய்க்குமேல் முதலீடு செய்யும் உற்பத்தித் தொழில்கள் மட்டுமே அமைப்பு முறையிலான தொகுப்புச் சலுகை பெற தகுதி பெற்றன. ஆனால், தென் மாவட்டங்களில் 50 கோடி ரூபாய்க்குமேல் 250 கோடி ரூபாய் வரை முதலீடு செய்யும் தொழில் திட்டங்களுக்கு, அவைகள் செய்யும் முதலீடுகளுக்கு ஏற்ப மூன்று ஆண்டுகள் முதல் ஐந்து ஆண்டுகள் வரை செலுத்தக்கூடிய உற்பத்திப் பொருள் விற்பனை அடிப்படையிலான மதிப்புக்கூட்டிய வரியை ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு செலுத்தக்கூடிய மென் கடனாக வழங்கிடவும்; 250 கோடி ரூபாய்க்கு மேலாக தென் மாவட்டங்களில் முதலீடு செய்யும் தொழில் திட்டங்களுக்கு மென் கடனுக்குப் பதிலாக உற்பத்திப் பொருள் விற்பனை மீது செலுத்திய

அண்ணா 100



## கலை

மற்ற நாடுகளின் கலைச் சிறப்புக்கும் நமது நாட்டின் கலை வளர்ச்சிக்கும் அடிப்படையான ஒரு வித்தியாசமிருக்கிறது. செல்வ வளத்தோடு மற்ற நாடுகளிலே கலையை வளர்க்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலோ ஏழ்மையில் இருக்கும் போதே கலையும் வளர்க்கப்படுகிறது. நம்முடைய நாட்டு மக்களும் வறுமை நிலையிலும் கலைச் சுவையை நுகர்கிறார்கள்–கலைஞர்களை வாழ்த்துகிறார்கள் வளர்க்கிறார்கள்–கலையை வளம் பெறச் செய்கிறார்கள் என்றால், செல்வச் செழிப்பிலே இந்நாட்டு மக்கள் இருப்பார்களானால் கலையை வளர்க்கும் கலைஞர்களை எவ்வாறெல்லாம் போற்றுவார்கள், பாராட்டுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற பிரமை ஏற்படுகிறது.

மதிப்புக்கூட்டிய வரி, அவைகள் செய்யும் முதலீட்டிற்கு ஏற்ப 21 ஆண்டுகள் வரை திருப்பி அளித்திடவும் முடிவு செய்யப்பட்டது.

சென்னைக்கு அருகில் நான்காயிரத்து 150 கோடி ரூபாய் முதலீட்டில் மோட்டார் வாகனத் திட்டங்கள் அமைப்பதற்காக அசோக் லேலண்டு மற்றும் நிசான் நிறுவனங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள அமைப்பு முறையிலான தொகுப்புச் சலுகைகளில் சில மாறுதல்கள் செய்வதென முடிவு செய்யப்பட்டது.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த 'மிச்சலின் ' நிறுவனம் 4 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்கண்டிகையில் டயர் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவதற்கு அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், பிள்ளைப்பாக்கம் 'சிப்காட்' தொழிற் பூங்காவில் 350 கோடி ரூபாய் முதலீட்டில் கட்டுமான இயந்திரங்கள் மற்றும் இயந்திரக் கருவிகள் தயாரிக்கக்கூடிய 'தூசான் இன் ஃப்ராகோர்' நிறுவனத்திற்கு அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

சென்னைக்கு அருகில் ஒரகடம் 'சிப்காட்' தொழிற் பூங்காவில் 250 கோடி ரூபாய் முதலீட்டில் மோட்டார் வாகனங்களுக்கான பல்வேறு மின்னணு சாதனைங்களைத் தயாரிக்கும் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த 'டெல்ஃபி' நிறுவனத்தின் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

சென்னைக்கு அருகில் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் எண்ணெய் மற்றும் வாயு துரப்பண சாதனங்கள் மற்றும் கண்ணாடி ஆகியவைகளை தயாரிக்கக்கூடிய ஹர்ஷா நிறுவனத்தின் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 512 கோடி ரூபாய் முதலீட்டில்கொதிகலன்கள்,மின் உற்பத்தி இயந்திரங்கள் ஆகியவற்றை தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்காக 'செதார் வெசல்ஸ்' நிறுவனத்தின் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், சாகுபுரத்தில் 460 கோடி ரூபாய் முதலீட்டில் ஒருங்கிணைந்த காஸ்டிக் சோடா ஆலை மற்றும் இரும்பு ஆக்சைடு, கால்சியம் குளோரைடு போன்றவற்றைத் தயாரிக்கக்கூடிய டி.சி.டபிள்யூ. நிறுவனத்தின் தொழிற்சாலைத் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

இந்திய ஆட்சிப் பணி நிலைப் பிரிவின் தமிழகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் மொத்த எண்ணிக்கையை குறைக்க வேண்டுமென்று 20.3.2002 அன்று முந்தைய ஆட்சிக்காலத்தில் அமைச்சரவை மேற்கொண்ட முடிவை கைவிடுவதென்றும்; தற்போது மத்திய அரசு அந்த எண்ணிக்கையை 325–இலிருந்து 355–ஆக உயர்த்தியுள்ளதை ஏற்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

2008–2009ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 'தமிழ்வழி' மற்றும் 'ஆங்கிலவழி' பிரிவுகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியரிடமிருந்து ஆண்டுதோறும் பல்வேறு தலைப்புகளின்கீழ் வசூலிக்கப்படும் சிறப்புக் கட்டணத்தை

அண்ணா 100



## வணக்கத்துக்கு உரியோர்

முன்பு தரிசாகக் கிடந்த இடத்தை விளை நிலமாக்கிட வியர்வை சிந்துவோர், குறை அளவு இயங்கி வந்த இயந்திரச் தொழிற்சாலையை முழு அளவு இயங்கிடச்செய்யப் பாடுபடுவோர், மக்களின் வசதிப் பெருக்கத்துக்காக உற்பத்தி, விநியோகம், ஆகியவற்றில் ஈடுபட்டு அதனை நேர்மையான முறையில் நடத்துவோர், இவர்களெல்லாம் நம் வணக்கத்துக்கு உரியவர்கள்.

இரத்து செய்து ஆணை வெளியிடப்பட்டதற்கு பின்னேற்பு வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டது.

தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்கு; ஒரு நபர் குழு மேலும் சில கல்வியாளர்களை இணைத்துக் கொண்டு, அந்தக் குழு வேறு சில மாநிலங்களுக்குச் சென்று அங்கெல்லாம் சமச்சீர் கல்வி முறை எப்படி அமல்படுத்தப் படுகின்றது என்பதை அறிந்து வந்து, அதற்குப் பிறகு அவர்களின் பரிந்துரைகளைப் பெற்று அமைச்சரவைக் கூட்டத்திலே விவாதிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

தொழில் அல்லது வணிக நிறுவனங்கள் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்ற உச்சவரம்பிற்கும் அதிகமாக நிலத்தை வைத்திருப்பதற்கும் அல்லது வாங்குவதற்கும்; கல்வி நிறுவனம் அல்லது மருத்துவமனை முதலியவற்றை நிறுவும் நோக்கத்திற்காக உச்சவரம்பு பரப்பளவிற்கும் அதிகமாக நிலத்தை வைத்திருப்பதற்கும் அல்லது வாங்குவதற்கும் அரசிடம் விண்ணப்பம் செய்து அனுமதி பெற்றுக்கொள்ளும் வகையில்–1961ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டத்திலுள்ள பிரிவுகள் 37–A மற்றும் 37–B ஆகிய பிரிவுகளுக்கு திருத்தம் செய்வதென்று முடிவு செய்யப்பட்டது.

நடுத்தர மக்கள் பலர், தங்கள் நகைகளை அடகு வைத்தும் அல்லது வங்கிகளில் கடன் பெற்றும் அல்லது தமது சேமிப்பின் மூலமாகவும், குடியிருக்க ஒரு இடம் தேவை என்ற நோக்கத்தை நிறைவு செய்து கொள்வதற்காக–1978ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற (நில உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் உச்சவரம்பிற்கு மேல் மிகை வெற்று நிலம் என்று அறிவிக்கப்பட்டு கையகப்படுத்தப்பட்ட நிலங்களை கிரையம் பெற்று–வீடுகள் கட்டிக் குடியிருந்து வருகின்றனர். நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் என்பதை அறியாமல் கிரையம் பெற்ற நிலங்களை – ஒன்றரை கிரவுண்டு வரை உள்ள நிலப் பரப்பிற்கு நிலமதிப்புத் தொகையையும்; ஒன்றரை கிரவுண்டிற்கு மேல் மூன்று கிரவுண்டு வரை உள்ள நிலப் பரப்பிற்கு இரண்டு மடங்கு நிலமதிப்புத் தொகையையும்; மூன்று கிரவுண்டிற்கு மேல் உள்ள நிலப்பரப்பிற்கு மூன்று மடங்கு நிலமதிப்புத் தொகையையும் வசூல் செய்துகொண்டு–வரன் முறைப்படுத்துவதென்றும்; குடியிருப்பு நோக்கத்திற்காக மட்டுமன்றி வேறு எந்த பயன்பாட்டிற்கும் நிலத்தைப் பயன்படுத்தி வந்தாலும் அவர்களும் பயனடையும் வகையில் நிலமதிப்புத் தொகை வசூல் செய்து கொண்டு வரன்முறைப்படுத்துவதை விரிவுபடுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

சென்னை மாநகரினை மக்கள் வசிப்பதற்கு மிகவும் ஏற்ற பெருநகரமாகவும்–பொருளாதாரத்தில் வலுவானதாகவும் – தூய்மையான சுற்றுப்புறச் சூழல் நிறைந்ததாகவும் – வருங்காலத் தலைமுறையினருக்கு நல்லதொரு சொத்தாகவும் – உருவாக்கிட வேண்டும் என்ற நோக்கத்தோடு வரையப்பட்டுள்ள சென்னை மாநகரின் இரண்டாம் முழுமைத் திட்டம் அனைத்துத் தரப்பினருக்கும் நல்ல பயன் அளித்திடும் என்பதால், அதற்கு ஒப்புதல் அளிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

கடந்த 18 ஆண்டுகளாக உதவி வேளாண்மை அலுவலர் பதவிக்கு நேரடி நியமனம் செய்யப்படாத நிலையில், வயது வரம்பைக் கடந்து வேலைவாய்ப்புக்காக காத்திருப்போரின் வாழ்க்கை நலனைப் பாதுகாத்திட, உதவி வேளாண்மை அலுவலர் பதவி நியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பை ஒரே ஒரு முறை மட்டும் மேலும் ஐந்தாண்டுகள் உயர்த்தி – தற்போது வேளாண்மைத் துறையில் காலியாக உள்ள 1,707 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்பிடுவதற்கு அனுமதி வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டது. ❖

அண்ணா 100

## தொழிலாளர்கள்

“நமது நாட்டில் ஒரு கெட்ட பழக்கம்–படிப்பவன் வேலை செய்யமாட்டான். வேலை செய்பவன் படிக்கமாட்டான். ஆனால் இந்த நிலை மெல்ல, மெல்ல மாறி, தொழிலாளர்கள், தங்கள் வேலை நேரம் போக, ஓய்வு நேரத்தில் கல்வியறிவை வளர்த்துக் கொண்டாக வேண்டும் என்ற நிலை வந்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் கல்வி பெறுவது, அவர்கள் தொழிலுக்கே பயன்படும்.



அதோடு கூட, மற்ற பொது அறிவைப் பெறுவது நல்லது. உதாரணமாக அரசாங்க நிதி நிலையைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்வது நல்லது. அவ்வாறு தெரிந்திருந்தால், அளவுக்கு மீறிய கோரிக்கைகளை எழுப்ப மாட்டார்கள். “நாம் கேட்டால்கூட, அவர்கள் எங்கிருந்து தருவார்கள்?” என்பது தெரிந்து விட்டால், கேட்கவே மாட்டார்கள்”.



# ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி அண்ணாவின் கனவு நிறைவேறியது

சென்னை, இராதாகிருஷ்ணன் நகரில் 15–9–2008 அன்று, பேரறிஞர் அண்ணா நூற்றாண்டையொட்டி தமிழக அரசின் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

---

ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்குகின்ற தொடக்க விழா நிகழ்ச்சியை சென்னையிலே இராதாகிருஷ்ணன் நகரில் தொடங்குகின்ற இந்த வைபவத்தில் ஆயிரக்கணக்கில் குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

எனக்கு இந்த நாள் ஒரு மகிழ்ச்சியான நாள். சோக ரேகை ஒரு புறத்திலே இதயத்திலே படர்ந்தாலும் கூட அதையும் மீறிக்கொண்டு நம்மையெல்லாம் ஆளாக்கிய அறிஞர் அண்ணா பிறந்து, அவருடைய பணியினை, அவருடைய அறிவை, ஆற்றலை இந்தத் தமிழகம் நூறாண்டு காலம் பயன்படுத்திக்கொள்ள முடியாவிட்டாலும், பயன்படுத்திக் கொண்ட ஏறத்தாழ 60 ஆண்டு காலத்தில் 600 ஆண்டுகாலப் பயனை அனுபவித்திருக்கிறது, பெற்றிருக்கிறது என்கின்ற அந்த எண்ணத்தின் காரணமாக நான் மகிழ்ச்சியோடு இந்த நாளில் இருப்பதாக கூறினேன்.

**மக்களுக்காக தொடர்ந்து உழைக்கிறேன்**

மகிழ்ச்சிக்கு அதுமாத்திரம் காரணமல்ல; 60 ஆண்டுகளுக்கு முன்பு, இதேநாளில்தான் என்னுடைய திருமண விழா நடைபெற்றது. நான் திருமணம் புரிந்து கொண்டு 60 ஆண்டு காலம் ஆகிறது. 60 ஆண்டு கால திருமண வாழ்க்கையில் இல்வாழ்க்கையிலே ஈடுபட்ட நான் தமிழகத்து மக்களுடைய வாழ்க்கை நல்வாழ்க்கையாக அமைய வேண்டும் என்பதற்காக இத்தனை ஆண்டு

காலம், ஏறத்தாழ 70 ஆண்டு காலத்திற்கும் மேலாக எழுதியும், பேசியும், மக்களுக்காகத் தொடர்ந்து பாடுபட்டும், சிறை சென்றும் உழைத்திருக்கின்றேன்.

அந்த உழைப்புக்கு உற்ற பயன் எனக்கு கிடைக்கவேண்டும் என்பதற்காக அல்ல. இந்த நாட்டு மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பதற்காக பெரியார் அவர்கள் எண்ணிய எண்ணங்களெல்லாம் ஈடேறவேண்டும் என்பதற்காக, பெரியாரால் உருவாக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா, அவர் யாத்துத் தந்த அறிவுரைகள், அவர் சிந்தித்த எண்ணங்கள், இவைகளெல்லாம் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக, அவர்களோடு இணைந்து நான் பணியாற்றி, பாடுபட்டு, அதனுடைய விளைவை இன்றைக்கு உங்களோடு சேர்ந்து காணுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன்.

அத்தகைய வாய்ப்புக்களிலே ஒன்றுதான் இன்றைக்கு ஏழை, எளிய மக்களுக்கு "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று எங்கள் அண்ணன் போதித்த, மொழிந்த அந்தப் பொன்மொழியை மெய்ப்பிக்கின்ற வகையிலே அந்தச் சிரிப்பைக் காண படி அரிசி போடவேண்டும் என்று 1967ஆம் ஆண்டு அவர் அறிவித்தார். அறிவித்த அண்ணா அவர்கள், நெடுங்காலம் வாழ முடியாத காரணத்தாலும், அன்றைய பொருளாதார தட்பவெட்பங்கள் மற்றைய சூழ்நிலைகள் இடம் தராத காரணத்தால் அதை இன்றைக்கு நிறைவேற்றி மிகப் பொருத்தமாக அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழாவிலே அதை நான் மிகுந்த மகிழ்ச்சிக்கு உள்ளாகியிருக்கின்றேன்.

அண்ணாவினுடைய எண்ணங்களிலே ஒன்றுதான் கனவுகளிலே ஒன்றுதான் சென்னை இராஜ்ஜியத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்பதாகும். அந்த தமிழ்நாடு என்ற பெயரை அண்ணாவே சூட்டி மகிழ்ந்தார். சுயமரியாதை திருமணங்களெல்லாம் சட்டப்படி செல்லுபடியாகவேண்டும். அதற்காக குரல் கொடுக்க வேண்டும், அதற்காக சட்டம் இயற்ற வேண்டும் என்று அண்ணா சொன்னார். அதை அவர் ஆட்சியில் இருந்த காலத்திலே நிறைவேற்றிக் காட்டினார்.

**மக்களின் மகிழ்ச்சி**

ஆனால், ஒரே ஒரு தயக்கமும், ஏக்கமும் நமக்கு இருந்தது. படி அரிசி திட்டம் என்ற ஒரு திட்டத்தை ஏழை எளிய மக்களுக்காக, நடுத்தர மக்களுக்காக , நம்முடைய அண்ணன் அறிவித்ததை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டதே என்பதுதான் அந்த ஏக்கமும், வருத்தமும். அதை நிறைவேற்றுகிற நாளாக இந்த நாள் அமைந்து, படி அரிசி திட்டம் வெற்றி பெற்றது, அண்ணாவினுடைய கனவு நிறைவேறியது என்கின்ற மகிழ்ச்சி நமக்கெல்லாம் இன்று ஏற்பட்டிருக்கிறது.


தமிழ்நாட்டு மக்கள் பெற்றிருக்கின்ற மகிழ்ச்சியைக் கண்டும்கூட, ஏழையினுடைய இதயத்திலே ஏற்பட்டிருக்கின்ற அந்த இன்பத்தை உணர்ந்தும்கூட, இன்னமும் சில பேருக்கு நம்மை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப்பக்குவம் வரவில்லை. நான் அதற்காக வருத்தப்படவில்லை.

**மனமும் – மனப்பக்குவமும்**

நம்மை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப்பக்குவம் வருவது எதிரிகளுக்கு அவ்வளவு சாதாரணமான விஷயமல்ல. ஏனென்றால் பக்குவம் வரவேண்டும். எதிலே ? மனதிலே வரவேண்டும். மனம் இருந்தால்தான் மனப்பக்குவம் வரமுடியும். மனம் இல்லாதவர்களிடத்திலே மனப்பக்குவம் எதிர்பார்ப்பது நம்முடைய மடமையே அல்லாமல் வேறல்ல. சிலர் இன்னமும் திட்டுகிறார்கள். இந்த அரிசி குறைந்த விலைக்கு கருணாநிதி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறாரே, இந்த அரிசி திருட்டுப்போய்விடும் என்று சொல்லுகிறார்கள். ஏன் இந்த சந்தேகம் ? திருடனுக்கு வரவேண்டிய சந்தேகம். நமக்கெல்லாம் வரலாமா ?

இந்த அரிசி ஒழுங்காக விநியோகிக்கப்பட மாட்டாது, இந்த அரிசி கருப்பாக இருக்கும், இந்த அரிசி தரமாக இருக்காது, இதெல்லாம் ஒரு விமர்சனம் அல்ல. பக்கத்து வீட்டிலே திருமணம் என்றால், அவர்களும் ஒரு அழகான பெண்ணைப் பார்த்து திருமணத்திற்கு தேதி குறித்து, அழைப்பிதழ் கொடுத்தபோது, அழைப்பிதழைப் பார்த்துவிட்டு, பக்கத்து வீட்டுக்காரன் சொல்லுவான், தன்னுடைய சொந்தக்காரர் இடத்திலும், மாமனிடத்திலும், மச்சானிடத்திலும், அந்த வீட்டில் பெண் பார்த்திருக்கிறாயே அவ்வளவு ஒண்ணும் கலரா இல்லையாமே. ரொம்ப கருப்பாக இருக்காமே. அதுல ஒரு திருப்தி. அது கருப்பாக இருப்பதில் அவனுக்கொரு திருப்தி.

அண்ணா 100



## தமிழன் வாழ்வு

**த**மிழன் வாழவேண்டிய நல்வாழ்வு தன்னை மட்டுமே வாழ்வித்துக் கொள்ளக்கூடியதல்ல; தமிழன் நல்வாழ்வு வாழவேண்டும் என்பது, மற்றவர்களை வாழவைக்க வேண்டும் என்பதுதான்!

கால் கொஞ்சம் ஊனமாமே அதற்கு, ஊனமோ இல்லையோ, இவனுடைய நெஞ்சம் ஊனம். ஆகவே அந்தப் பெண்ணுடைய கால் ஊனமாகத் தெரிகிறது. குறைகள் இருக்கலாம், எந்தவொரு திட்டத்திலும் நிறைவேற்றும் பொழுது குறைகள் ஏற்படலாம். எல்லாம் நிறைவாகவே நடைபெறும் என்று எந்த அரசிலும் சொல்ல முடியாது. நாளைக்கு காந்தியடிகளே மறு அவதாரம் எடுத்து முதலமைச்சராகவோ, பிரதம அமைச்சராகவோ அமருவாரேயானால், அவருடைய ஆட்சியிலே குறைவே இல்லை, நிறைவாகவே எல்லாம் இருந்தது என்று சொல்லமுடியாது. கடவுள் நம்பிக்கை உள்ளவர்களுக்குச் சொல்லுகிறேன், கடவுளேகூட அவதாரம் எடுத்து வந்து அவரே ஆட்சி புரிய ஆரம்பித்தால் அந்த ஆட்சியிலேகூட குறை இருக்கத்தான் செய்யும்.

எனவே எந்தவொரு நல்ல காரியத்தைச் செய்தாலும், அதிலே குறை இல்லாமல் போகாது. குறை இருப்பதற்காக நல்ல காரியமே வேண்டாமென்றிருந்தால், அதைவிட பைத்தியக்காரத்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது. இருக்கின்ற குறையைச் சுட்டிக்காட்டி, அதைக் களைந்திடச் செய்யுங்கள். இருக்கிற குறை இது, இது என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள். அப்படி குறிப்பிட்ட குறைகளை எண்ணிப்பார்த்து அவைகளைக் களைந்து நிறைவாகச் செய்ய முற்படுகிறோம்.

அப்படிச் சொல்லாமல், இந்தத் திட்டமே உருப்படாது, இந்தத் திட்டமே தேவையில்லை என்று சொன்னால், நீங்கள் என்னைச் சொல்லவில்லை, என்னை வளர்த்த தலைவர் ஏன், நீங்கள் யாருடைய பெயரைச் சொல்லி வளர விரும்புகிறீர்களோ, அந்தத் தலைவர் அறிஞர் அண்ணா 1967ஆம் ஆண்டு அறிவித்த திட்டம் படி அரிசித் திட்டம் அதையே குறை கூறுகிறீர்கள். படி அரிசி போட்டால் நாடு உருப்பட்டுவிடுமா என்று கேட்கிறீர்கள். ஒரு பெரிய தலைவர் சொல்லியிருக்கிறார். இது விலை குறைவு. ஆகவே வாங்கிச் சாப்பிடுங்கள் என்று கருணாநிதி சொல்லுகிறார். விஷம் கூட விலை குறைவாகக் கிடைத்தால் வாங்கி சாப்பிட்டுவிடுவாரா என்று கேட்கிறார். அப்படி விஷத்தை வாங்கி சாப்பிடுகின்ற அளவுக்கு நிலைமை ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை.

**உண்மையான விமர்சனம் அல்ல**

இவைகளெல்லாம் நல்ல எழுத்தாளர்களாக இருந்தவர்களுக்கு, நல்ல பேச்சாளர்களாக, நல்ல தலைவர்களாக, மக்கள் சக்தியைத் திரட்டுபவர்களாக, மக்களுக்காக உழைப்பவர்களாக இருந்தவர்களுக்கு, தியாகச்சீலர்களாக விளங்கியவர்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம் வரும்போது எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், ஏ அப்பா, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலே நாம் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும், அந்தக் காலத்திலே சொல்லுவார்களே, மாவலியினுடைய தலையிலே வாமனன் எடுத்து வைத்த அடியைப்போல இவர்களுக்குத் தோன்றுகிறதே என்ன காரணம் என்றுதான் நான் வருத்தப்படுகிறேன், நான் ஆச்சரியப்படுகிறேன். இது பொறாமையின் காரணமாக, அசூயையின் காரணமாக ஏற்படுகின்ற ஒரு கருத்தே தவிர, இது உண்மையான கருத்தல்ல. உண்மையான விமர்சனம் அல்ல.

ஏழைக்கு, இல்லாதவர்க்கு, பசியோடு இருக்கின்ற பாமர மனிதனுக்கு, நடுத்தர மக்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கையிலே, அவர்களுடைய துன்பத்திலே செலவு ஓரளவு குறைய, செலவைச் சிக்கனப்படுத்த இந்தத் திட்டம் உதவுகிறதா இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமே தவிர, இந்தத் திட்டத்திலே என்ன ஓட்டை, உடைசல் என்றெல்லாம் பார்த்து, அதற்காக திட்டமே தேவையில்லை என்று சொல்லுவது நல்லதல்ல.

அண்ணா 100



## மக்களாட்சி

"தூய்மை நிறைந்த மக்களாட்சி முறை தேவைப்படும்போது; பொது நோக்கத்துக்குத்தான் கட்டுப்படுமேயன்றி கட்சிக் கொடிகளுக்கு அன்று: அங்ஙனமாயின் கட்சிகள் பலப்பல ஏன்? தனித்தனிக் கொடிகள் ஏன்? என்று கேட்கப்படுகிறது. ஒரு பொது நோக்கத்துக்காகப் பாடுபடும் மாண்பு மக்களாட்சிக்கு உண்டு என்பதாலேயே எல்லாவற்றையுமே கூட்டிக் கலக்கி ஒருருவாக்கிப் பேருருவாக்கிவிட எண்ணுவது பேதைமை மட்டுமல்ல; கேடு விளைவிக்கக் கூடியதே!

மலர்களை உதிர்த்து இதழ்கள் குவித்திடலாம்; இதழ்களைக் குவித்துப் புதிய பூக்களை மலரச் செய்திட முடியாது! மலர்களைத் தொடுத்து. மாலைகளாக்கலாம்– செடிகள் மாலை மாலையாகவே ஏன் தந்துவிடக்கூடாது என்று எண்ணுவது வேடிக்கை நினைப்பன்றி வேறில்லை! தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டச் சொன்னார் சான்றோர்; தனித்தனிக் கனிகளே கூடாது என்றாரில்லை".

நாட்டுக்கு உகந்ததல்ல. இந்தத் திட்டத்தை எல்லோரும் எல்லாக் கட்சியிலே உள்ளவர்களும் ஆதரிக்க வேண்டும், ஆதரிக்காமல் இருந்தால் மக்கள் முன்னால் அவர்கள் குற்றவாளிகளாக தங்களை அறியாமல் நிறுத்தப்படுவார்கள் என்பதை சொல்ல விரும்புகின்றேன்.

ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தை பெருந்தலைவர் காமராசர் கொண்டு வந்தார். அப்போது அதை யாரும் குறை கூறவில்லை. அதிலே அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்ற செயல்களில் சிறுசிறு குறைகள் இருந்தன. அவைகள் சுட்டிக்காட்டப்பட்டன அரசுக்கு. அரசு அதை திருத்த முற்பட்டது.

அதற்குப் பிறகு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்படி கொண்டு வந்தபோது, நான் சட்டப்பேரவையில் கேட்டதெல்லாம் இதை இப்படியெல்லாம் மாற்றி அமைக்கலாமே, இந்தத் திட்டத்தை இப்படியெல்லாம் நடைமுறைப்படுத்தலாமே என்று திட்டத்திற்கு ஆதரவாக யோசனைகளை சொன்னேனே தவிர திட்டமே தவறு, திட்டமே மக்களை ஏமாற்றுவதற்கு என்று நான் சொல்லவில்லை. அந்தத் திட்டத்தை நீங்கள் அறிவித்து 3 மாதம் ஆகிறதே. எப்பொழுது அமல்படுத்தப்போகிறீர்கள் என்று கேட்டிருப்பேனே தவிர, திட்டம் வேண்டாம் என்று சொன்னதில்லை.

**அண்ணா அறிவித்த திட்டம்**

ஆனால் இன்றைக்கு நாம் கொண்டு வருகிற திட்டம், அண்ணா அறிவித்த திட்டம்; அதை தி.மு.க. ஆட்சி கொண்டுவருகிறது என்பதற்காக திட்டத்தையே குறைகூறுகிறார்கள் என்றால் இவர்களுக்குத் திட்டத்தின் மீது அல்ல, இவர்களுக்கு இருக்கின்ற வெறுப்பு, இவர்களுக்கு இருக்கின்ற பொறாமை, இவர்களுக்கு இருக்கிற அசூயையெல்லாம் தி.மு.கழகம் மீது தானே தவிர, திட்டத்தின் மீது அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொண்டு, இந்தத் திட்டத்தை எல்லோரும் ஒருமுகமாக, இது பொதுப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை. பசியைப் பற்றி நம்முடைய விழாத் தலைவர் வேலு அவர்கள் நல்ல நேரத்தில் சரியான நேரத்திலே மிக விளக்கமாக பேசினார். மாலையிலேதான் கவியரங்கம் இருக்கிறது, இப்பொழுது காலையிலேயே கவியரங்கத்திற்கான பீடிகையைப் போட்டு அவர் மணிமேகலை போன்ற இலக்கியங்களையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார். மணிமேகலை கையிலே அட்சயப் பாத்திரம் இருந்ததைப்போல, இன்றைக்கு மாநிலத்தை ஆளுகின்ற நம்முடைய கையிலே அட்சயப்பாத்திரம் வரமுடியாது, வராது.

ஆனாலும் நான் சொல்லுகின்றேன், அட்சயப் பாத்திரங்களாக அரசினுடைய திட்டங்களும், அங்கீகாரங்களும், அதை விநியோகிப்பவர்களே இருந்தால் பசியை சுலபமாகப் போக்கலாம், எளிதாகப் போக்கலாம், பசி என்பதே என்னவென்று தெரியாமல் மக்களை மகிழ்ச்சியாக வாழ வைக்கலாம். அப்படி மகிழ்ச்சியாக வாழ வைக்க இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டம் பரவலாக தமிழகம் முழுவதிலும் விரைவிலே அமல்படுத்தப்படும். நாளையிலிருந்து நம்முடைய அமைச்சர் பெருமக்களும், மக்களுடைய பிரதிநிதிகளும் ஆங்காங்கு இந்த அரிசி வழங்குகின்ற திட்டத்தை 16ஆம் தேதி முதல் தொடர்ந்து அதிலே ஈடுபட இருக்கின்றார்கள். அதற்குப் பிறகு நியாயவிலைக் கடைகள் மூலமாகவும், மாவட்ட அதிகாரிகள் மூலமாகவும் இந்த அரிசி வழங்கப்பட இருக்கிறது. இவைகளை நல்ல முறையிலே வழங்கப்பட எல்லோரும், யாரோ சில பேர் காவல் புரிய வேண்டும். பாதுகாக்க வேண்டும் என்று இல்லாமல் எல்லா மக்களும், எல்லா பொதுமக்களும், எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களும் கண்காணித்து இந்தத் திட்டம் நல்ல முறையிலே நடைபெற ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பத்திரிகைக்காரர்கள் ஒன்று நடந்த பிறகு எழுதுவதை விட, நடக்காமலே பார்த்துக்கொள்ள பத்திரிகைகாரர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்பதை கேட்டுக்கொள்கின்றேன். இப்பொழுது பத்திரிகைகள் என்ன செய்கின்றன என்றால், ஒரு நூறு மூட்டை அரிசி பிடிபட்டது என்றால், பிடித்த அதிகாரிகளைப் பாராட்டாமல், இந்த அரசாங்கத்தில் 100 மூட்டை அரிசி பிடிபட்டது, களவானது என்று குறை கூறத்தான் அந்தச் செய்தியைப் பயன்படுத்துகிறார்களே அல்லாமல், சரி பிடிபட்ட அரிசி எந்த அரிசி யாரால் மீண்டும் கைப்பற்றப்பட்டது, அந்த அரிசியைக் களவாடியவர்கள் கைது செய்யப்பட்டார்களா இல்லையா, தண்டிக்கப்பட்டார்களா இல்லையா என்ற செய்திகளை பத்திரிகைகள் போடுவதில்லை. இடம் இல்லாத காரணத்தால் அல்ல, இதயம் இல்லாத காரணத்தால். ஆகவே எல்லோரும் இதயத்தைப் பெற்று இந்த நல்ல முயற்சிக்கு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். ★

# மாநகராட்சி மன்றம் என்பது பெருமைக்காக, சொல்வழக்குக்காக அல்ல, மக்களுக்கு அதிக அளவில் பணியாற்றத்தான் என்பதை உணர்ந்து செயல்படவேண்டும்

1-8-2008 அன்று நடைபெற்ற வேலூர் மாநகராட்சி தொடக்கவிழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.



**வே**லூரில் நடைபெறுகின்ற இந்த விழா தம்பி துரைமுருகன் இங்கே விவரித்துக் காட்டியவாறு சென்னையிலே தொடங்கி, இங்கே இந்த மைதானம் வரையில் கோலமிகு விழாவாக – கடல் அலைபோல் மக்கள் நிரம்பி வழிகின்ற விழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பந்தல் நிரம்பி வழிந்து பந்தலுக்கு வெளியேயும் பல்லாயிரக்கணக்கான மக்கள் காத்திருந்து வாழ்த்துக் கூறுகின்ற வகையில் இப்படி ஒரு திருவிழா நடைபெறுகிறது என்றால் இது அவரவருக்கு உரிய விழாவாக – அவரவர்களுடைய குடும்பத்திலே நடைபெறுகின்ற நல்லதொரு நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்ற காரணத்தினாலேதான், இந்த அளவிற்கு உணர்ச்சிப் பெருவெள்ளத்தை– அலைமோதுகின்ற ஆர்வத்தை என்னால் இங்கே காணமுடிகின்றது.

வேலூருக்கு மாநகராட்சித் தகுதி வேண்டும் என்று பல காலமாக நம்முடைய கழகத்தின் சார்பில், நகராட்சித் தலைவர்களாக வீற்றிருந்தவர்களானாலும் சரி, சட்டப்பேரவை உறுப்பினர்களாக நண்பர் ஞானசேகரனைப்போல வீற்றிருந்தவர்களானாலும் சரி, தொடர்ந்து கோரிக்கை வைத்து அந்தக் கோரிக்கை இன்றைக்கு நிறைவேற்றப்பட்ட வெற்றி விழாவாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அண்ணா 100



## இரு கொள்கைகள்

**பொ**ருள் பாடுபடுபவனுக்குப் போய்ச் சேரவேண்டும். போய்ச் சேரும் பொருளும் பயனுள்ள காரியத்துக்குச் செலவிடப்படவேண்டும். இரண்டும் நமது கொள்கை, இரு விழிகளில் ஒன்றுக்கு மற்றொன்று பாழாகக்கூடாது.

வேலூர் மாத்திரமல்ல, வேலூரை உள்ளடக்கிய வடஆற்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டத்திலே எனக்கு எவ்வளவு பாசமும் உறவு மனப்பான்மையும் நண்பர்களுடைய நேசமும் உண்டோ அந்தளவிற்கு, வடஆற்காடு மாவட்டத்தில் எனக்குப் பற்றும் பாசமும் தொடங்கி அது இன்றளவும் அற்றுப்போகாமல் என்னுடைய உள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் இங்கே எனக்கு முன்னால் பேசிய நம்முடைய சட்டமன்ற உறப்பினர்களானாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களானாலும் மற்றுமுள்ள இயக்கத்தின் முன்னணித் தோழர்களானாலும் அவர்களெல்லாம் எடுத்துக்காட்டியதைப்போல பல சாதனைகள் இந்த மாவட்டத்திற்கு கழக அரசின் வாயிலாக கிடைத்திருப்பதை, ஆற்றப்பட்டிருப்பதை நீங்கள் அனைவரும் அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கின்றீர்கள்.

சிலநாட்களுக்குமுன்பு தொலைக்காட்சியில் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற ஒரு நண்பர், இளைஞர், இளைஞரைப் போன்ற தோற்றமுடையவர், வரலாற்று ஆய்வு நடத்தக் கூடியவர், அதுகுறித்த புத்தகங்கள் எழுதியிருப்பவர், அவர் தொலைக்காட்சியிலே ஒரு பேட்டியளித்தார் அந்தப் பேட்டியில் வடஆற்காடு வேலூர் பற்றி குறிப்பிடப்பட்டது என்ன காரணத்திற்காக என்றால் இந்தியாவினுடைய விடுதலைக்காக முதல் குரல் எழுந்த இடம் வடக்கே உள்ள பகுதி அல்ல, தென்னகத்தில், அதிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் வேலூர் நகரத்திலேதான், இங்கேயிருந்த பட்டாளத்துச் சிப்பாய்கள்தான், அந்தக் கிளர்ச்சியை நடத்தினார்கள். அவர்கள் நடத்திய அந்த கிளர்ச்சிக்கு "வேலூர் சிப்பாய்க் கிளர்ச்சி" என்று வரலாற்றில் பெயர் உண்டு என்று அவர் குறிப்பிட்டார்.


ஆனால் சிப்பாய்க் கலகம் என்பது இந்தியாவிலேயே வடக்குப் பகுதியிலே நடைபெற்ற ஒரு விடுதலைப் போராட்டம் என்றுதான் இதுவரையில் சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் உண்மையில் கலகம் என்ற பெயரால் நடைபெறுகின்ற அந்தப் போராட்டத்திற்கு வித்தூன்றிய இடம் வேலூர்தான் என்று அவர் குறிப்பிட்டார். அதை பார்த்துக்கொண்டிருந்த நான் எண்ணிக்கொண்டேன், இவர் இதை இந்தத் தொலைக்காட்சியிலே சொல்வதற்கு முன்பு ஓராண்டுக்கு முன்பே இதை வேலூர் சென்று அங்குள்ள மக்களுக்கு உணர்த்தி, அதன் காரணமாக வேலூர் நகரத்தில் அந்தச் சிப்பாய் புரட்சியினுடைய 200ஆம் ஆண்டு நினைவு தினத்தை 10.7.2006 அன்றே கடைப்பிடித்து அதற்கென்று ஒது சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டு, வேலூர் கோட்டை அருகே 20.12.1998இல் அதற்கென ஒரு நினைவுத் தூணும் திறந்து வைக்கப்பட்டது. அதை நாமல்லவா செய்தோம் என்று எண்ணியபோது, என்னுடைய இதயத்திலே இனம் தெரியாத ஒரு பூரிப்பு ஏற்பட்டது.

தொலைக்காட்சியில் சொன்னவுடன், அவர் செய்த வரலாற்று ஆய்வில் அதைக் கண்டுபிடித்தாரோ என்னவோ எனக்குத் தெரியாது. கண்டுபிடித்தும், கண்டும் காணாததுபோல் இருந்துவிட்டாரோ என்னமோ எனக்குத் தெரியாது. ஆனால் உங்களுக்குச் சொல்லுகின்றேன் இந்தியாவினுடைய சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்கள் அவர்கள் வடக்கே பிறந்திருந்தால்தான் சிறப்புக்குரியவர்களாக கருதப்படுகிறார்கள். தெற்கே பிறந்திருந்தால் அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலே பிறந்திருந்தால் அவர்களுக்கு அந்தச் சிறப்புக் கிடையாது.

நான் சில நாட்களுக்கு முன்பு சென்னையில் ஒரு சிலையைத் திறந்துவைத்தேன். அந்தச் சிலைக்கு உரியவரின் பெயர் "ஜெய்ஹிந்த்" செண்பகராமன். செண்பகராமனுடைய சிலையைத் திறந்துவைத்தேன். கிண்டியில் ஆளுநர் மாளிகையைத் தொடர்ந்து இருக்கின்ற பசும்புல் தரையில் அந்தப் பெருவெளியில் தியாகிகளுக்காகப் பல சிலைகள், பல நினைவுச் சின்னங்களை அமைத்தது தி.மு.கழக ஆட்சிதான் அமைத்தவர் உங்கள் முன்னால் உட்கார்ந்திருக்கிற இந்தக் கருணாநிதிதான்.

தியாகிகள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் நாட்டிற்காகப் போரிட்டார்கள், நாட்டிற்காக உயிர் நீத்தார்கள், வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள் என்றால் அவர்களை மறவாமல் அவர்களுக்கு நினைவு மண்டபங்கள் கட்டியதும் சிலைகள் வைத்ததும் அவர் காங்கிரஸ் கட்சியா, கம்யூனிஸ்ட் கட்சியா என்றெல்லாம் பாராமல் அவர்களைப் பாராட்டி, போற்றி, புகழ்வது தி.மு.கழக அரசு என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அண்ணா 100



**பழமை**

பழங்கால ஆயுதங்களை மியூசியத்திலே நாம் பார்க்கிறோம். ஆனால் பார்வையிட்ட பின்னர் அவற்றை எடுத்துக் கொண்டு போர்புரியத் தொடங்குவதில்லை. அதுபோலத்தான் பழமைக் கருத்துகளை நாம் படிக்கலாம். ஆனால் கையாளக்கூடாது.




அதன்படி செண்பகராமனை, உங்களிலே பலர் கேள்விப்பட்டிருக்க முடியாது. படித்தவர்கள், மாணவர்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அரசியலில் அனுபவம் வாய்ந்தவர்கள் கேள்விப்பட்டிருக்கலாம். சாதாரண பொதுமக்கள் கேள்விப்பட்டிருக்க முடியாது. அந்த செண்பகராமனுக்கு ஒரு சிலை வைக்கப்பட்டது. அந்தச் சிலை திறப்பு விழாவை நான் நடத்தி வைத்தேன். அந்த இடத்திலேதான் சிதம்பரனார் இழுத்தாரே செக்கு. அந்தச் செக்கும் வைக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரனார் செக்கு இழுத்து, இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்க, காரணகர்த்தாக்களிலே ஒருவராகத்திகழ்ந்தார். ஆனால் அவர் இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்று ஆட்சிக்கு வந்த யாரும் தேடிக்கூடப் பார்க்கவில்லை அதைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை.

1970 ஆம் ஆண்டில் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேர்த்தில் சிதம்பரனார் இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்று தேடச் சொல்லி இறுதியாக அது கோயம்புத்தூர் சிறைச்சாலையிலே இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து அதைக் கொண்டுவந்து சென்னையிலே கிண்டியிலே தியாகிகளுடைய மண்டபத்துக்குப் பக்கத்திலே வைத்தவன் நான்தான்.

இதை நான் சொல்வதற்குக் காரணம், தியாகிகள் எங்கே இருந்தாலும் தியாகம் எந்தக் கட்சியாலும் போற்றப்பட்டாலும் அந்தத் தியாகத்தை மதிக்கின்ற தன்மை இந்த ஆட்சிக்கு உண்டு என்பதால்தான் இதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். செண்பகராமன் என்று சொல்லிவிட்டு போய்விட்டேன். யார் அந்த செண்பகராமன்? திருவனந்தபுரத்துக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்திலே பிறந்து, தமிழகத்திலே வாழ்ந்து ஐரோப்பா கண்டமெல்லாம் இவருடைய கீர்த்தியை நிலைநாட்டி இன்னும் சொல்லப்போனால் ஹிட்லருக்கே நண்பனாகி ஹிட்லரால் மதிக்கத் தகுந்த நண்பராக இருந்து இந்திய

அண்ணா 100



## நாடு

**நா**டு என்பது வெறும் பூகோளப் படம் அல்ல; அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பே அது. கிராமங்களுக்கு நாம் உலக அறிவை ஊட்டவில்லை என்றால் அது நாட்டை வாழ வைக்காது.

சுதந்திர போராட்டத்துக்கு என்னென்ன உதவிகளை செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்தவருடைய பெயர்தான் செண்பகராமன்.

நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் "எம்டன்" குண்டு என்று அந்த எம்டன் குண்டு ஒரு தனி மனிதனல்ல. அவன் போட்ட குண்டல்ல, ஒரு கப்பலில் இருந்து போடப்பட்ட குண்டு. அந்தக் கப்பலுக்குப் பெயர் "எம்டன்" கப்பல். அந்தக் கப்பலைச் செலுத்தி வந்தவர் செண்பகராமன். அவர் சென்னையிலிருந்து வெள்ளைக்காரர்களுடைய இடங்களையெல்லாம் அழிப்பதற்காக அந்த குண்டைப் போட்டார் எம்டன் கப்பலில் இருந்து. அப்படிப்பட்டவர், ஹிட்லர் ஒருநாள் தேனீர் விருந்திலே பேசிக்கொண்டிருக்கும்போது இந்தியரை இகழ்ந்துரைத்தார். இந்தியர்கள் சோம்பேறிகள் என்று சொன்னார் ஹிட்லர் என்ற காரணத்திற்காக அந்த ஹிட்லரை மன்னிப்புக் கேட்க வைத்து அதுவரையிலே அவரோடு பேச மறுத்து இறுதியாக ஹிட்லரே மன்னிப்பு கேட்டார் என்கின்ற அளவிற்கு வீரம் மிக்கவர் செண்பகராமன்.

இவையெல்லாம் சொல்வதற்குக் காரணம். அப்படிப்பட்ட வீரர்களையெல்லாம் நாம் மறந்து விட்டோம் அதைப்போலத்தான் வேலூரில் நடைபெற்ற முதல் சிப்பாய் கலகத்தை நாம் மறந்து விட்டோம், வரலாற்றிலே இடம்பெற முடியாமல் போய்விட்டது. பிறகு வந்தவர்கள் அந்த வரலாறு நமக்கு உரியதல்ல. வடக்கே உள்ள சிப்பாய்களுக்கு உரியது என்று ஆக்கினார்கள். நமக்கு உரியதாக இன்றைக்கு நாம் ஆக்கியிருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

அப்படிப்பட்ட வரலாற்றுப் பிழை நடைபெற்ற இந்த வேலூரில் அந்தப் பிழையைத் திருத்தி நம்முடைய சிப்பாய் புரட்சிக்கு ஒரு நினைவுத்தூணை நட்டு சிப்பாய் புரட்சியின் நினைவாக அகில இந்திய அளவிலே மத்திய அரசை வலியுறுத்தி ஒரு தபால் தலையையும் வெளியிட்ட பெருமை தி.மு.கழகத்தின் அரசுக்கு உண்டு. நான் கேட்கிறேன், வேலூரிலே உள்ள மக்களை, இதைவிட வேலூருக்கு இந்த வடஆற்காட்டுச் சீமைக்கு இந்த அரசு என்ன மதிப்பும், மரியாதையும் தரவேண்டும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்கள்?

உங்களுக்கு இன்னும் பல கோரிக்கைகள் இருக்கின்றன. மாநகராட்சி மன்றம் மாத்திரம் வந்தால் போதாது நம்முடைய ஞானசேகரன் விமான நிலையமும் வேண்டும் என்று சொன்னார், வேண்டும். இல்லையென்று யார் மறுக்கிறார்கள், நிச்சயமாக வேண்டும். ஆனால் விமான நிலையம் வேண்டும், விமானத்திலே பறக்க வேண்டும், விமானங்கள் வந்து இறங்க இடம் வேண்டும். ஆனால் அந்த விமான நிலையத்திற்கு நிலம் வேண்டும், அந்த இடத்தை நாம் பெறுகின்ற நேரத்தில் எத்தனையோ இடையூறுகள் வரும் அந்த இடையூறுகளையெல்லாம் களையவேண்டும், இடையூறுகள் செய்வதற்காகவே சிலபேர் இன்றைக்கு நாட்டில் அரசியல் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் சமாளிக்க வேண்டும், "இது மேய்ச்சல் நிலம், இது பயிரிடுகிற நிலம். ஆகவே இங்கே விமான நிலையம் வரக்கூடாது" என்று சொல்லக் கூடியவர்கள் எல்லாம் இருப்பார்கள்.

விமான நிலையத்திற்கு இடம் வேண்டும். பிறகு நிலையம் வேண்டும். விமானத்திலே ஏறுவதற்கு பயணிகள் வேண்டும். வேலூரில் இருந்து எத்தனை பயணிகள் விமானத்தில் ஏறி சென்னைக்குச் செல்வார்கள், கொச்சிக்குச் செல்வார்கள், லண்டனுக்குச் செல்வார்கள் என்ற கணக்கெல்லாம் எடுக்க வேண்டும். இங்கு உட்கார்ந்திருக்கின்ற வேலூர் விசுவநாதன் வேண்டுமானால், வாரத்திற்கு ஒரு முறை விமானத்திலே போவார், அப்படி எத்தனை விசுவநாதன்கள் இங்கே இருப்பார்கள் என்று அந்தக் கணக்கெல்லாம் எடுக்க வேண்டும். இவ்வளவு கணக்கெடுத்த பிறகுதான் விமான நிலையம் இங்கே வரமுடியும்.

இப்படிச் சொல்கின்ற காரணத்தால், நான் ஞானசேகரன் போன்றவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், விமான நிலையமே வராது என்று அர்த்தமல்ல, நிச்சயமாக வரும். நான் சொன்னால் அது வந்தே தீரும். எப்போது வரும் என்று கேட்டால், எப்போது என்று நான் சொல்ல இயலாது. விரைவில் வரும், விரைவில் என்றால் எவ்வளவு விரைவில் என்று கேட்டால் அதற்கு சாங்கியங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் நிறைவேற்றிய பிறகு நிச்சயமாக விமான

அண்ணா 100



## எண்ணம்

தாங்கள் பெறாததை மற்றவர்களாகிலும் பெறவேண்டும் என்ற எண்ணம்தான் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பாக உள்ளது. நாம் பெற்றதைக் காட்டிலும் மற்றவர்கள் அதிகம் பெறவேண்டும் என்ற நினைப்பே சமுதாயம் வளர்ந்து செல்லக் காரணமாகவும் உள்ளது.

நிலையம் வேலூருக்கு வரும். அதற்கு முன்பு வரவேண்டியவை வேலூர் நகரத்திற்கு—வடஆற்காடு மாவட்டத்திற்கு இந்த பகுதிக்கு வரும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த மாநகராட்சி மன்றம் தோன்றுகிறது என்றவுடன் மாநகராட்சி மன்றத்தினுடைய தீர்மானம் என்ன? என்ன தீர்மானம் போட்டார்கள்? இந்த மாநகராட்சி மன்றத்தை நீங்கள் அறிவிக்கிறீர்கள், இருந்தாலும்கூட இதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்ற வாய்ப்புகளை உருவாக்க எங்களுக்கு தமிழக அரசு 10 கோடி ரூபாய் மானியம் தரவேண்டும் என்று மாநகராட்சி மன்றத்தின் சார்பாக தீர்மானம் போட்டார்கள்.

மேயராக வருவதற்கு முன்பே கார்த்திகேயனுக்கு மானியம் பெறுவதிலே அவ்வளவு ஆர்வமும், ஆசையும் இருந்தது. அவர் கேட்டார், ஆனால் நாங்கள் அதைப்பற்றிச் சிந்தித்து 10 கோடி தொடக்கத்திலே கொடுக்க வேண்டாம் என்று நீங்கள் எல்லாம் மகிழத்தக்க அளவிற்கு முதல் கட்டமாக 5 கோடி ரூபாய் அனுமதிக்கப் பட்டிருக்கின்றது என்கின்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த 5 கோடி ரூபாயைப் பெற்று, ஆவன செய்து ஆக, 10 கோடியே கொடுத்திருக்கலாமே என்று நானும், உள்ளாட்சித்துறை அமைச்சரும், எங்கள் அமைச்சரவையும் எண்ணுகின்ற அளவிற்கு நீங்கள் செயல்படுங்கள். நீங்கள் இந்தப் பகுதி மக்களுக்குப் பாடுபடுங்கள். மாநகராட்சி மன்றம் என்பது ஒரு சொல் வழக்குக்காக அல்ல, பெருமைக்காக அல்ல, இன்னும் பரந்த அளவில், இன்னும் அதிக அதிகாரங்களைப் பெற்று, மக்களுக்குப் பணியாற்ற, மக்களுக்குச் சேவை செய்ய என்பதனை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

மாநகராட்சி மன்றம் என்ற நிலை ஏற்பட்டவுடன் பக்கத்திலே உள்ள சிறு சிறு பகுதிகளெல்லாம் இதோடு இன்றைக்கு இணைகின்றன. காட்பாடி இணைகிறது, ஆற்காடு இணைகிறது என்று இணைகின்ற பகுதிகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு பரந்த அளவிலே பெரிய பரப்பளவைப் பரிபாலிக்கின்ற அளவிற்கு மாநகராட்சி மன்றத்திற்கு பொறுப்பு வர இருக்கின்றது. அந்தப் பொறுப்பை நீங்கள் நிறைவேற்றியாக வேண்டும். மாநகராட்சி ஆகிவிட்டது என்ற மகிழ்ச்சியோடு மேயரோ அல்லது மண்ணின் மைந்தர் என்று அழைக்கப்படுகின்ற நம்முடைய வீராசாமியோ, தம்பி துரைமுருகனோ மகிழ்ந்து இருந்துவிடக்கூடாது. மாநகராட்சி மன்றம் ஆயிற்றே என்ன மகாப்பெரிய வேலைகளையெல்லாம் செய்தது என்று சாதாரண மக்கள் கேட்கின்ற அளவிற்கு இல்லாமல் மாநகராட்சியானால் எவ்வளவு இலாபம் பார்த்தாயா என்று அடுத்தடுத்து இருக்கின்ற நகரங்கள் எல்லாம்—நாம் எப்போது மாநகராட்சி ஆவது என்று எண்ணுகின்ற அளவிற்கு நீங்கள் நடந்து காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.


அண்மையில் ஈரோடு நகரத்தை மாநகராட்சி மன்றமாக ஆக்கினோம். அப்படி ஆக்கியபோது ஒரு குறிப்பை தம்பி ஸ்டாலின் என்னிடத்திலே காட்டினார். என்ன குறிப்பு என்றால், 1917ஆம் ஆண்டு வாக்கில் அந்த ஈரோடு நகரத்தினுடைய தலைவராக இருந்தவர் யார் தெரியுமா? தந்தை பெரியார் அவர்கள். அவர் ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார், குறிப்பு எழுதுகின்ற புத்தகத்தில் ஒரு குறிப்பை எழுதியிருக்கிறார். 'இந்த ஈரோடு நகரம் அளவில் எல்லைகளில் குறைவானதாக இருக்கின்ற காரணத்தால், பக்கத்திலே இருக்கின்ற வீரப்பன் சத்திரம் என்ற ஊரையும் இன்னும் அதற்கு அருகிலே இருக்கின்ற ஊர்களையும் ஈரோடு நகரத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டும்; அப்படி சேர்த்தால்தான் எதிர்காலத்திலே இது பெரிய நகராட்சி மன்றமாக, மாநகராட்சி மன்றமாக ஆகின்ற தகுதியைப் பெறும்' என்று பெரியார் குறிப்பு எழுதினார். எப்பொழுது? 1917.

பெரியார் எதை எழுதி வைத்திருந்தாலும் அவைகளெல்லாம் தேடிக் கண்டுபிடித்து அதை நிறைவேற்றுகின்ற பகுத்தறிவாளர்களுடைய ஆட்சியாக—முன்னேற்ற விரும்புகின்றவர்களுடைய ஆட்சியாக பெரியாருடைய கொள்கைகளை, அண்ணா வழியில் நிறைவேற்றுகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கின்ற காரணத்தால் 1917ஆம் ஆண்டு அவர் எழுதிய குறிப்பின்படி வீரப்பன் சத்திரம் போன்ற பகுதியெல்லாம் ஈரோடு நகரத்தோடு இணைத்து ஈரோடு மாநகராட்சி மன்றத்தை உருவாக்கியிருக்கின்றோம்.

அண்ணா 100

**பட்டதாரிகளின் பணி!**

ஏழை மக்களின் வாழ்வெனும் பாலைவனம் சோலைவனமாகிட வேண்டும்; வருங்காலச் சந்ததிகளாவது வளமெலாம் பெற்று வாழ்ந்திட வகை செய்திட வேண்டும். அதுதான் பட்டதாரிகளின் முதற்கடமையாகிறது!



அதைப்போலத்தான் இப்போதும் இதை விரிவாக பெரிய நகரமாக ஆக்கி பல நன்மைகளை, சாதனைகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாநகரத்தை இன்றைக்கு உருவாக்கியிருக்கின்றோம்.

மாநகரத்தை உருவாக்கியிருக்கின்ற நேரத்தில் என்னுடைய தம்பிமார்கள் வீராசாமி அவர்களும், நம்முடைய துரைமுருகன் அவர்களும், பாராளுமன்ற தேர்தலைப் பற்றி பேசினார்கள். அதிலே நாம்தான் வெற்றிபெறப் போகிறோம் என்றெல்லாம் பேசினார்கள். ஞானசேகரன் அதைப்பற்றி பேசவில்லை. பேசாததற்குக் காரணம், இவர்கள் பேசிக்கொள்வார்கள் என்று ஒருவேளை விட்டு இருக்கலாம். அவர் அதைப் பற்றி எண்ணாதவர் அல்ல. இருந்தாலும் நான் சொல்கிறேன்; எல்லா இடத்திலும் வெல்வோம், வெற்றி பெறுவோம் என்று சொல்வதால் வெற்றி பெற்றுவிட மாட்டோம். வெற்றி வெறும் வார்த்தைகளால் விளைவதல்ல. வெற்றி நம்முடைய உழைப்பால், வியர்வையால், தொண்டால், ஆற்றுகின்ற பணியால் விளைவது.

யாருக்காக அந்தப் பணியை ஆற்றப்போகிறோம், நமக்காகவா? அல்ல. கார்த்திகேயன் மேயராக ஆக வேண்டும் என்பதற்காகவா? அல்ல. கருணாநிதி முதலமைச்சராக ஆக வேண்டும் என்பதற்காகவா? அல்ல. ஐந்து முறை ஆகியாயிற்று. இனி அந்த ஆசை கருணாநிதிக்கு கிடையாது. யாருக்கும் கிடையாது. அந்த ஆசைக்கு கருணாநிதி அடிபணிய மாட்டான். இங்குகூட சொன்னார்கள். இன்னொரு முறை முதலமைச்சராக வரப்போகிறார் என்று இல்லை. இல்லவே இல்லை. நான் அப்படி ஆசைப்படமாட்டேன்.

யார் தமிழகத்தை ஆளக்கூடிய தகுதியைப் பெறுகிறார்களோ, யாருக்கு மக்கள் அந்த ஆதரவைத் தருகிறார்களோ, அவர்களை ஊக்குவிக்கின்ற– அவர்களை மேலும் மேலும் ஆர்வத்தோடு பணியாற்ற வைக்கின்ற–அந்த தூண்டுகோலாக இருப்பேனே தவிர இனி எனக்கு செங்கோல் கையிலே தேவையில்லை. தூண்டுகோல் போதும். அந்த தூண்டுகோலை வைத்து நான் இந்த நாட்டிலே இன்னும் பல அற்புதங்களை, இன்னும் பல அதிசயங்களை, இன்னும் பல நன்மைகளை, சாதனைகளை ஆற்ற முடியும்.

நாட்டிலே ஏழை–எளிய மக்கள், பாட்டாளி மக்கள் காலையிலிருந்து மாலை வரையிலே உழைத்து அலுத்து, தூங்குவதற்கு இடமில்லாமல், அலைகின்ற மக்கள், அந்த மக்களைக் காப்பாற்ற இன்னும் சுதந்திரத்தினுடைய உண்மையான தன்மையை மக்கள் அனுபவிக்க பாடுபட்டாக வேண்டும். சுதந்திரம் பெற்றாலும்கூட, சுதந்திரத்தினுடைய சுவையை முழுமையாக இந்திய நாட்டு மக்கள் பெறவில்லை. அதற்கு யார் யார் உழைக்கின்றார்களோ, யார் யார் தங்களை தியாகம் செய்ய முன் வருகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் தொண்டனாக இருந்து, அவர்களுக்கெல்லாம் பணியாளனாக இருந்து, அவர்களுக்கெல்லாம் விசுவாசமுள்ள வேலைக்காரனாக இருந்து, அவர்களுக்கெல்லாம் உற்றத் தோழனாக இருந்து, உழைப்பேன்! உழைப்பேன்! உயிர் உள்ளவரை உழைப்பேன்.

அப்படி உழைக்கின்ற அந்தப் பாதையிலே ஒரு வெற்றிக் கல்லாகத்தான், வெற்றிப் படிக்கட்டாகத்தான் வேலூரிலே இந்த மாநகராட்சி மன்றத்தைக் காணுகின்றேன். இது வேலூரில் வாழுகின்ற மக்களுடைய சாதனை என்று ஒத்துக்கொள்கிறேன். என் சாதனை அல்ல, தம்பி ஸ்டாலினுடைய தனிப்பட்ட சாதனையல்ல, எல்லோரும் ஒன்றுகூடி செய்த சாதனை. இந்தச் சாதனை, என்னுடைய அமைச்சருடைய சாதனை, மாற்றுக் கட்சிக்காரர்களுடைய சாதனை என்றும் நான் பெருந்தன்மையோடு ஒத்துக்கொள்கிறேன். எல்லோரும் சேர்ந்து இழுத்தால்தான் தேரை இழுக்க முடியும். ஊர்கூடி தேர் இழுப்போம், வாரீர் வாரீர் என்று ஊர்கூடி தேர் இழுக்கும் அந்தப் பழமொழியை, ஊர்கூடித் தேர் இழுப்பதைப்போல் உலகத்தார் ஒற்றுமையாக இருந்து உலக மக்களை வாழவைப்போம்.

உலகத்திலே இன்றைக்கு நடைபெற்று வருகின்ற நாலாவிதமான நாசக்காரச் செயல்களையெல்லாம் பார்க்கிறோம், கேட்கிறோம், அவைகளை எப்படி எதிர்கொள்வது என்று முடியாமல் திகைக்கிறோம், அந்தத் திகைப்பில் இருந்து மக்களை விடுபடச் செய்ய வன்முறை, தீய சக்திகள், இவைகள் எல்லாம் விலகிட நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து பாடுபடுவோம், பணியாற்றுவோம். அதை இந்த மாநகராட்சி மன்றத் தொடக்கவிழாவில் ஒரு சூளுரையாக மேற்கொள்வோம் என்று கூறி விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

அண்ணா 100

## நிலையும் நினைப்பும்!

நிலை உயர்ந்திருந்தால் நினைப்பு உயர்ந்திருக்கும்; நிலை தாழ்ந்திருந்தால் நினைப்புத் தாழ்ந்திருக்கும். நிலைக்குத் தகுந்தாற்போல் தான் நினைப்பும் இருக்கும்!





# தூத்துக்குடி மாநகராட்சிக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுவோம்

5.8.2008 அன்று தூத்துக்குடி மாநகராட்சியைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.

தூத்துக்குடிக்கு நான் வந்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. இன்றைக்கு தூத்துக்குடி விழாவிற்கு வந்திருக்கிறேன் என்றால், இது இந்த வட்டாரத்து மக்களுக்கு ஒரு திருவிழா, ஒரு பெருவிழா, இந்த விழாவிலே நானும் கலந்துகொள்ளவேண்டும் என்று நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்களும், தம்பி பெரியசாமி அவர்களும் உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலினும் வலியுறுத்தியது மாத்திரமல்ல. எனக்கே தூத்துக்குடி மாநகராட்சி மன்றமாக ஆகுகிற காட்சியைக் காணாமல் இருக்கக்கூடாது என்ற ஆவலின் காரணமாகத்தான், இந்த விழாவிற்கு நான் பல தொல்லைகளுக்கிடையே அவற்றையெல்லாம் புறக்கணித்துவிட்டு வந்துள்ளேன்.

இங்கே பேசிய தம்பி பெரியசாமி குறிப்பிட்டதைப்போல் நான் இன்றைக்கு எந்த இயக்கத்தினுடைய தலைவனாக இருக்கின்றேனோ அந்த இயக்கத்தினுடைய கொடியை முதன் முதலாக என்னுடைய கைகளால் ஏற்றி வைத்த இடம், இந்த தூத்துக்குடிதான். 1949 ஆம் ஆண்டு, புதிய அரசியல்வாதிகள் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். 1949 ஆம் ஆண்டு சென்னையிலே செப்டம்பர் 17 ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கி இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பொன்மொழிகளைத் தம்பிமார்களுக்கு வழங்கிய அந்த நாள்– அதற்கு அடுத்த மாதம் அண்ணா அவர்கள் கழகத்தினுடைய தளபதிகளையெல்லாம் அழைத்து செப்டம்பர் 17 இல் சென்னையிலே பிரதான கழகத்தைத் தொடங்கிவிட்டோம், இதனுடைய கிளைகளை அக்டோபர் 17 அன்று நாடெங்கும் தொடங்க வேண்டும். யார், யார் எங்கெங்கே போகிறீர்கள் எனக்கேட்டு அப்படி கேட்கப்பட்டவர்கள் பதில் சொல்வதற்கு முன்பு என்னைப் பார்த்து நீ தூத்துக்குடி போகிறாய், மறுநாள் கோவில்பட்டி போகிறாய் என்று ஆணையிட்டார்கள்.

1949 அக்டோபர் 17 ஆம் தேதி கழகத்தினுடைய கொடியை என்னுடைய கரங்களால் முதன்முதலாக ஏற்றிவைத்து கிளைக் கழகத்தைத் தொடங்கிய இடம் இந்தத் தூத்துக்குடி. மறுநாள்தான் கோவில்பட்டியிலே கழகக் கிளையை தொடங்கி வைத்து, இருவண்ணக்

அண்ணா 100



## பிறமொழி

கண்ணுக்கு மையிடுவதுபோல, பிற மொழிகளைப் பயன்படுத்த வேண்டும்–மை அதிகமானால் கண் எப்படிக் கரித்து விடுகிறதோ அதுபோல் பிற மொழிகள் அதிகம் கலப்பதும் ஆபத்தான நிலையை உண்டாக்கும்.



கொடியை ஏற்றி வைத்தேன். எனவே இன்று நேற்றல்ல, 50, 60 ஆண்டுகாலமாக தூத்துக்குடி எனக்குப் பழகிய ஊர். எனக்குப் பழக்கப்பட்ட நண்பர்கள் பலரைக் கொண்ட ஊர். ஆருயிர் நண்பர்கள் பலர் வாழ்ந்த ஊர். பலர் இன்றைக்கு நினைவுச் சின்னங்களாக, நிழற்படங்களாக மாறிவிட்டாலும்கூட, என் நெஞ்சில் என்றென்றைக்கும் நிலைத்து இருக்கக்கூடியவர்களாக இருக்கின்ற ஊர் தூத்துக்குடியாகும்.

நான் கே.வி.கே. சாமியை மறக்க முடியுமா? அப்படிப்பட்ட தளபதிகளையெல்லாம் மறந்துவிடக்கூடிய இயக்கமா இந்த இயக்கம்? அந்த சாமியைப் பார்த்துதான் தந்தை பெரியார் அவர்கள் ஒரு மாநாட்டிலே சொன்னார், அந்த மாநாட்டிலே கே.வி.கே. சாமி ஆற்றிய தொண்டினைப் பார்த்து தொண்டர்படைத் தலைவராக அவர் ஆற்றிய பணியைப் பார்த்து எதிர்காலத்திலே திராவிட நாடு கிடைத்தால் நீ தான் அந்த நாட்டிற்கு கவர்னர் ஜெனரல் என்று கே.வி.கே. சாமியைச் சொன்னாரோ அந்த கே.வி.கே. சாமி உலவிய மண், இந்த மண் என்பதை நான் மறந்துவிடவில்லை.

மொழிப்போராட்டத்திலே உயிர் நீத்த நடராசன் தாளமுத்து என்ற இரு மாவீரர்களைத் தந்த மண் – இந்தப் பகுதி மண் என்பதை நான் அறிவேன். எனவேதான் இந்த மண்ணிலே கால் வைக்கும்போதெல்லாம், இந்த மண்ணிலே வந்து மக்களைச் சந்திக்கும்போதெல்லாம் மக்களைச் சந்தித்து அவர்களுக்காக சொல்ல வேண்டிய விஷயங்களை சொல்லும்போதெல்லாம் என்னுடைய சொந்த வீட்டிற்கு, நான் பிறந்த ஊருக்கு வந்ததைப்போன்ற உணர்வை அன்றும் பெற்றேன், இன்றும் பெறுகிறேன். அதனால்தான் தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக மாறியது என்ற நிலையைவிட திருவாரூர் நகராட்சி மாநகராட்சியாக மாறியதைப் போன்ற ஒரு உணர்வைப் பெற்று, உங்கள் முன்னால் அமர்ந்திருக்கின்றேன். இதை ஸ்டாலின் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். திருவாரூர் நகராட்சி மாநகராட்சியாக மாறுகிற காலம் வரையில் இந்த ஆட்சி நீடித்து, உன்னுடைய நிர்வாகமும் நீடித்து, நான் காணுகின்ற வகையிலே மாநகராட்சியாக திருவாரூர் போன்ற நகரங்களெல்லாம் ஆக்கப்படவேண்டும் என்ற ஆசை, பேராசைதான். இருந்தாலும் பேராசைப்பட எனக்கு உரிமை உண்டு.

அண்ணா 100

## உண்மையான வரலாறு தேவை!




உண்மையான வரலாறு எழுதப்பட வேண்டும். இன்று அந்த நிலை இல்லை. ஓர் ஊரின் பெயரைக் கேட்டால் அது தோன்றியதற்கு வரலாறு இருக்கும். மணல்மேடு இருந்தாலும் அதற்கு ஒரு வரலாறு இருக்கும். இந்தியா முழுவதிலும்— தூரக்கிழக்கு நாடுகளிலும் எதோடு ஒப்பிட்டாலும் தமிழகத்திற்கு ஒப்பான வரலாறு இருந்தது இல்லை என்று நாம் பார்க்கிறோம். நெப்போலியன் பெயரைக் கேட்டால் இங்கிலாந்து நாட்டில் அழுகிற குழந்தை வாய்மூடிவிடும்; நெப்போலியனைப்பற்றி பிரஞ்சு நாட்டில் இருப்பதைவிட இங்கிலாந்து நாட்டில் நூல்கள் ஏராளம். அப்படிப்பட்ட ஆர்வம் வேண்டும். தமிழ்நாட்டிலே இருந்து லண்டனுக்குச் செல்லும் எஞ்சீனியரிடத்தில் பாண்டிய மன்னனைப் பற்றிக் கேட்டால் தெரியாது என்று சொன்னால் நமக்குப் பெருமையல்ல.



காரணம் இந்த மண்ணுக்காக உழைத்தவன், இந்த மண்ணிலே வாழுகிற மக்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருப்பவன், பணியாற்றிக்கொண்டிருப்பவன்.

இந்த விழா எத்தனை விமர்சனங்களுக்கெல்லாம் ஆட்பட்டிருக்கிறது என்பதை தம்பி பெரியசாமி என்னிடத்திலே சொன்னார். சில பத்திரிகை நிருபர்களும்கூட என்னைச் சந்தித்தபோது சொன்னார்கள். யார் யாரோ இந்த விழாவிற்குத் தடை பெற முயலுகிறார்கள் என்று. ஏன் தடை பெறுகிறார்கள்? எனக்குப் புரியவில்லை. ஒரு நகராட்சி, மாநகராட்சியாக மாறினால், உயர்ந்தால், வளர்ந்தால் அந்த வளர்ச்சியைப் பார்த்து மகிழ்ச்சியடைய வேண்டுமே தவிர, தடை கேட்க வேண்டிய அவசியம் என்ன? என்றெல்லாம் நான் யோசித்துப்பார்த்தேன். வேடிக்கையாகத்தான் இருக்கிறது. ஒரு வீட்டிலே இருக்கின்ற பெண் பருவமடைந்துவிட்டாள், அவளுக்கு மங்கல நீராட்டு விழா நடக்கிறதென்றால், எதிர் வீட்டுக்காரிக்கு எரிச்சலாகத்தான் இருக்கும். அதற்காக அவள் பருவமடையாமல் இருக்க முடியுமா? இன்றைக்கு இந்த நகராட்சி மன்றம், மாநகராட்சி மன்றமாக மாறியிருக்கின்றது. இதற்கேன் இவ்வளவு கூத்து? இதற்கேன் இவ்வளவு ஆடம்பரம்? இதற்கேன் இவ்வளவு செலவு? என்று நீதிமன்றத்துக்குச் செல்கிறார்கள். இவர்கள் ஏதோ, இவர்கள் வீட்டுத் திருமணங்களையெல்லாம் செலவே இல்லாமல் நடத்தியவர்களைப் போலவும், இவர்கள் வீட்டு விழாக்களையெல்லாம் ஒண்டிக் குடித்தனம் செய்கின்றவர்களைப்போல நடத்தியதைப் போலவும், இவர்கள் கட்சி நிகழ்ச்சிகளையெல்லாம் மிக மிக எளிமையாக நடத்தி புகழ் பெற்றதைப் போலவும் இப்போது வழக்குப் போடப்போகிறார்கள். நான் இந்த விழாவிலே அரசியல் பேசக்கூடாது என்றுதான் வந்தேன். பேசுவதில்லை. ஆனால் பேசும்படி செய்து விட்டார்கள், அதற்கு நான் என்ன செய்ய? ஒரு நகராட்சி மன்றம், மாநகராட்சி மன்றமாக மாறும்போது மகிழ்ச்சி இருக்கத் தான் செய்யும். இது மாற வேண்டுமென்று பாடுபட்டவர்களுக்கு, பணியாற்றியவர்களுக்கு குரல் கொடுத்தவர்களுக்கெல்லாம் ஒரு பெரிய குறிக்கோளிலே வெற்றி கிடைத்ததைப்போல குதூகலம் ஏற்படத்தான் செய்யும். அப்படி ஏற்படுவதையே தடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை.

அண்ணா 100




## ஜனநாயகம்

ஜனநாயகம் என்பது ஒரு அமைப்பு மட்டுமல்ல; ஜனநாயகமென்பது உயிரற்ற பொருளல்ல; ஜனநாயகத்தின் பயன் குறித்து எவருக்கும் எவ்வித ஐயப்பாடும் இருக்கத் தேவை இல்லை. அந்த அமைப்பு எத்தனை சீரியதோ–நற்றிறம் கொண்டதோ–அத்தனை நற்றிறம் கொண்டவனாக அதனைச் செயல்படுத்தும் மனிதனும் இருந்திட வேண்டும்!

இதே தூத்துக்குடியில் 1967–ஆம் ஆண்டு ஒரு விழா நடைபெற்றது. தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்ததைப் பாராட்டிய விழா. அந்த விழாவிற்குத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த அறிஞர் அண்ணா அவர்கள். 23.8.1967 அன்று வருகை தந்தார்கள். "தூத்துக்குடி நகரசபையில் அண்ணாவுக்கு நள்ளிரவில் வரவேற்பு" என்ற தலைப்பில் செய்தியை அன்றைய "தினமலர்" நாளேடு வெளியிட்டிருக்கிறது. "அண்ணா துரைக்கு தங்கச் செங்கோல் அன்பளிப்பு" – அண்ணா அவர்கள் அப்போது மேயராக இல்லை. இருந்தாலும் தங்கச் செங்கோல் அன்பளிப்பு. "16 முத்துக்கள் பதித்த வரவேற்பிதழ்" – அது மாத்திரமல்ல, அந்தச் செய்தியில், "பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடம் நகர மண்டபத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் இருந்தது. 50 அடிக்கு ஒன்று வீதம் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. மின்வண்ண விளக்கு அலங்காரங்கள் பிரமாதமாக இருந்தன. 16 முத்துக்கள் பதித்த வரவேற்பு இதழை நகரசபைத் தலைவர் பொன். சாமுவேல் அண்ணாதுரைக்கு வாசித்தளித்தார்."

நான் கேட்கிறேன். இது 1967 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு இங்கே இருந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் – கண்ணியவான்கள் – நாகரிகம் படைத்தவர்கள் – ஒரு முதலமைச்சர் வருகிறார், அவரை முதலமைச்சராக ஆக்குவதற்காக முதுகெலும்பு உடைய பாடுபட்ட அவருடைய தொண்டர்கள் நகரெங்கும் பந்தலிடுகிறார்கள், பளபளக்கும் விளக்குகளை ஆங்காங்கு மாட்டுகிறார்கள், அவருக்கு வரவேற்பளிக்க ஏற்பாடு செய்கிறார்கள், அந்த விழாக்கோலத்தை பத்திரிகை இந்த அளவிற்கு வெளியிட்டு அவருக்கு முத்துக்கள் பதித்த வரவேற்பிதழ். தங்கச் செங்கோல் என்றெல்லாம் தலைப்பிட்டுச் செய்தி வெளியிடுகிறது. அப்போது யாரும் நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை. இதைத் தடுக்கவேண்டுமென்று கேட்கவில்லை. யாருடைய வயிறும் எரியவில்லை. யாருடைய நெஞ்சும் படபடக்கவில்லை. காரணம், அப்போதிருந்தவர்கள் எல்லாம் நாகரிகமான மனிதர்கள். அப்போது இருந்தவர்கள் எல்லாம் கட்சிகளின் ஜனநாயகத்தை மதிப்பவர்கள். அப்போதிருந்தவர்கள் எல்லாம் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ்கோடி ஆதித்தன் சொன்னதைப்போல காமராசரிடத்திலே பயின்றவர்கள். காமராசர் காட்டிய நாகரிகத்தைக் கடைப்பிடித்தவர்கள். அதனால் அன்றைக்கு அந்த விழா முதலமைச்சருக்கு நடைபெற்ற விழா – இந்த மூதூரில் அவ்வளவு சிறப்பாக நடைபெற்றது. இன்றைக்கு விழாவா? ஒரு கை பார்க்கிறோம், நீதிமன்றத்திற்குச் செல்கிறோம். நீதிமன்றம் என்றால் சும்மாவா? உடனடியாக விழாவிற்குத் தடை போட்டுவிடும் என்றெல்லாம் எதிர்பார்த்து நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றதால் தடை கிடைத்துவிடவில்லை. பாரதிதாசன் பாடினாரே, "தடைக் கற்கள் உண்டென்றாலும், தடந்தோள் உண்டெனச் சிரிப்போம்" என்று, அதைப்போல தடைக் கற்களைக் கண்டு பயப்படுகின்ற படை, இந்தப் படை அல்ல. எத்தனை தடை வந்தாலும் அவைகளைக் கண்டு சிரித்து, அவைகளை இடரி எறிந்து நம்முடைய படை முன்னேறும். ஏனென்றால் இந்தப் படை ஜனநாயகப் படை. இந்தப் படை மக்களாட்சித் தத்துவத்திலே மதிப்பு வைக்கின்ற படை. இந்தப் படை மக்களாட்சி மாண்பினை உணர்த்துகின்ற படை. அதனால்தான் ஒரு நகராட்சி மன்றம் மாநகராட்சி மன்றமாக மாறும்போது நமக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியை வெளியிடுகிறோம் என்றால், குழந்தை இன்றைக்குப் பள்ளிக்கு அனுப்பப்படுகிறது எந்த மழலையைப் பள்ளிக்கு அனுப்புகிறோமோ, அதற்குச் சீவி, சிங்காரித்து அந்தக் குழந்தைக்கு இடுப்பிலே அரைஞாண் கட்டி கழுத்திலே தங்கச் சங்கிலி மாட்டி காதிலே கடுக்கணோ அல்லது டோலக்கோ தொங்கவிட்டுக் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புகிற தாய், பின்னால் இருந்து மகிழ்ச்சி அடைவாளே அதைப் போல – நம்முடைய நகரம் மாநகரமாகிவிட்டது. நம்முடைய நகராட்சியிலே இதுவரையிலே ஒரு சத்துணவுக் கூடத்திலே, சத்துணவு அமைப்பாளராக இருந்த ஒருவர் இன்றைக்கு இங்கே இந்த மாநகரத்தினுடைய மேயராக ஆகிறார் என்றால் ஏழைகளை முன்னேற்ற வேண்டும் என்ற இந்த இயக்கம், சாதாரண சாமானிய மக்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று இந்த

அண்ணா 100



## நிலையான செல்வம்!

கல்வித்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள்–பொறியியலாளர்கள்–நிர்வாக நிபுணர்கள்தான்–உண்மையான–நிரந்தரமான அழிக்க முடியாத–அளவிட முடியாத செல்வமாகும். அந்தச் செல்வம் நம்முடைய நாட்டிலே போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால்தான் புதிய தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டுமென்றால் அமெரிக்க நாட்டின் நிபுணர்களையும், இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானிகளையும், ரஷ்ய நாட்டுப் பொறியியலாளர்களையும் தருவிக்கிறோம்.

இயக்கம், தாய்க்குலத்திற்கு சமஉரிமை வேண்டுமென்று 1939 ஆம் ஆண்டிலிருந்து பெரியார் தலைமையிலே போராடி வருகின்ற இந்த இயக்கம் மகிழக் கூடாதா? மகிழவேண்டும். அந்த மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்ற மாண்புதான் இன்றைய தினம் தூத்துக்குடி பெருநகரத்திலே நாம் காணுகின்ற இந்தக் காட்சியாகும். இன்னும் இந்த நகரத்தை பெயரளவில் மாநகரமாக மாற்றினால் மாத்திரம் போதாது. இந்த நகரத்தின் தேவைகளையெல்லாம் நிறைவு செய்வேன் என்று தம்பி ஸ்டாலின் உறுதி எடுத்திருக்கிறார். நாங்கள் அளிக்கின்ற உறுதிகள் வெறும் நீர் மேல் எழுத்தல்ல, கல்மேல் செதுக்கியவைகளாகும். அவைகளை நிறைவேற்றியே தீருவோம். இங்கே என்னென்ன திட்டங்கள், என்னென்ன வசதி வாய்ப்புகள் உங்களுக்குத் தேவையோ, அவைகளையெல்லாம் நாங்கள் நிறைவேற்றியே தீருவோம். இந்த மாநகராட்சி மன்றம் அமைவதற்கு எங்களுக்கு மானியமாக 15 கோடி ரூபாய் கொடு என்று கேட்டார்கள். இந்த அரசு உடனடியாக மானியமாக 15 கோடி ரூபாய் கொடுக்காவிட்டாலும் தொடக்கத்திலே 5 கோடி ரூபாய் வைத்துக்கொள்ளுங்கள். மிச்சப்படுகின்ற பணத்திற்கு நகராட்சி வருவாயிலே கொஞ்சம் ஏற்பாடு செய்துகொள்ளுங்கள் என்று குறிப்பிட்டு 5 கோடி ரூபாய் இந்த மாநகராட்சி மன்றத்திற்குத் தந்திருக்கின்றோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.


இதை ஸ்டாலினே சொல்வாரென்று எண்ணினேன். இது பண விஷயம், நாம் தலையிட வேண்டாமென்று என்னிடத்திலே விட்டுவிட்டார். எனவே வாங்கிய பணத்தை நல்ல முறையிலே செலவு செய்து, பயனுள்ள வகையில் செலவு செய்து, வழிமுறையோடு செலவு செய்து மக்களுக்கு என்னென்ன தேவையோ அந்தத் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய வேண்டும். நேர்மையாக, நாணயமாக மாநகராட்சி மன்றத்திலே பணியாற்றுகின்ற ஒவ்வொருவரும் அவர் காவலாளியாக இருந்தாலும் சரி, ஒரு சேவகனாக இருந்தாலும் சரி, ஒரு மாமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, மேயராக இருந்தாலும் சரி, துணை மேயராக இருந்தாலும் சரி, அவர்களெல்லாம் வகையாக நேர்மையாக, நாணயமாக சேவை செய்ய வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் நான் நேர்மையாக ஒரு நிர்வாகம் நடைபெற வேண்டுமென்பதில் எப்பொழுதும் கூர்மையாக இருப்பவன். அதை மீறி நடந்தால் நான் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டேன்.

என்னுடைய அரசியல் வாழ்க்கையில் ஆட்சிப் பொறுப்பில் நான் நடத்திய நிர்வாகத்தில் அவைகளையெல்லாம் நீங்கள் கண்டிருக்கிறீர்கள். சென்னை மாநகராட்சி மன்றம் சில தவறுகளுக்கு ஆட்பட்டது என்பதற்காக நான் முதலமைச்சராக இருந்த போது அந்த மாநகராட்சி மன்றத்தையே கலைத்தவன்தான் உங்கள் முன்னால் அமர்ந்திருக்கின்ற கருணாநிதி என்பதை மறந்துவிடாதீர்கள். கலைத்தது மாத்திரமல்ல; எனக்கு உயிருக்குயிராக இருந்த நண்பர்களையெல்லாம் பிடித்து – சிறைச்சாலையிலே போட்டவன்தான் இந்தக் கருணாநிதி என்பதையும் யாரும் மறந்துவிடாதீர்கள்.

ஆகவே என்னுடைய மாணவர்களாகிய என் தலைமையிலே இயங்குபவர்களாகிய மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மன்றத் தலைவர்கள் நிர்வாகிகள், யாராக இருந்தாலும் நேர்மை தவறாமல் நாணயமாகத் தங்களுடைய நிர்வாகத்தை நடத்தவேண்டும். மாநகராட்சி மன்றமாக ஆகியது பெரிதல்ல, மாநகராட்சி மன்றமாக ஆன இந்த மாநகரம் மாப்புகழைப் பெறவேண்டும். இந்த மாநகரம் மதிப்போடும் மரியாதையோடும் மக்களால் பேசப்படவேண்டும், புகழப்படவேண்டும். அந்தப் புகழ் என்றென்றும் இந்த மாநகராட்சி நிர்வாகத்திற்கு, மாநகராட்சி மன்றத்திற்கு இருந்திடவேண்டும். அதைக் கட்டிக் காத்திடுங்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். இந்த விழாவிலே நானும் கலந்து கொள்ளும் இந்த வாய்ப்பு ஏற்பட்டமைக்காக மகிழ்ச்சியைத் தெரிவித்து அனைவரையும் பாராட்டி இந்த அளவோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

❖ ❖ ❖

அண்ணா 100




## கூட்டுறவு

நமது பொருளாதார அமைப்பின் எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு முறையானது நன்கு பரவியுள்ளது. பொருள்களின் விலை உயர்வுகளைக் கட்டுப்படுத்திப் பொதுமக்களுக்கு நேர்மையான விலையில் அவர்களின் அவசியத் தேவைகளை வழங்கி உதவும் சிறந்த பணியைக் கூட்டுறவு நிலையங்கள் செவ்வனே நிறைவேற்றி வைக்க முடியும். சிறப்பான வகையில் அவைகளின் அமைப்பு இயங்குவதன் மூலம்தான் இயக்கம் இந்த உயர்ந்த குறிக்கோளை அடைய முடியும். கூட்டுறவுத் துறையானது பலம் பெற்று நல்ல வளம் பெற யாவரும் பாடுபடுவோமாக!

# சின்னத்திரை இல்லாமல் பெரிய திரை இல்லை

**சென்னை, கலைவாணர் அரங்கில்**
**8.8.2008 அன்று,**
**"சின்னத்திரை விருது"**
**வழங்கும் விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை**

ஒருவேளை திரையுலக விழாவாக இருக்கின்ற காரணத்தாலோ என்னவோ என் குரலும் இன்றைக்கு "குஷ்பூ" குரலாகத்தான் (குஷ்பூ ஏற்புரையாற்றும்போது, அவரது குரல் வளம் கெட்டிருந்ததைப் போலவே முதல் அமைச்சரின் குரலும்






பாதிக்கப்பட்டிருந்தது) உள்ளது. காரணம், மூன்று நாட்களாகத் தூத்துக்குடி, மதுரை போன்ற இடங்களில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு, நேற்றுத்தான் சென்னை திரும்பினேன்.

திரும்பிய பிறகு சென்னையிலே உள்ள அரசு அலுவல்களையெல்லாம் ஒருசேரக் கவனித்து விட்டு இரவு 12 மணி வரையிலே கோப்புகளிலே கையெழுத்திட்டுவிட்டு, ஏனென்றால் சில பேர் எத்தனைக் கோப்புகள் முதலமைச்சர் இன்றைக்குப் பார்த்து முடித்திருக்கின்றார் என்று கணக்கிட்டுக் கொண்டிருப்பதால் – அந்தக் கணக்கையும் காட்டிவிட்டு – உங்களையெல்லாம் சந்திக்கின்ற இந்த நல்ல வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்குவது என்ற ஒரு ஏற்பாட்டைச்செய்து இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப்போல சின்னத்திரைப்படங்களுக்கு இதுபோல் பரிசு வழங்குவதும், மானியம் வழங்குவதும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே மாத்திரம் நடைபெறுகிறது என்ற பெருமைக்குரிய காரியத்தை நாம் நிகழ்த்தியிருக்கிறோம்.

சின்னத்திரைக்கான விருதுகளும், அந்தத் தரமான படங்களுக்கு – தயாரிப்புக்குத் தேவையான துண்டு விழுகின்ற பற்றாக்குறையைச் சரிசெய்கின்ற பரிவுத்தொகையுமாக இன்றைக்குப் போதுமான தொகையாக அது இல்லாவிட்டாலும், மன ஆறுதல் வழங்கக்கூடிய தொகையாக அதை வழங்கியிருக்கிறோம்.

அண்ணா 100



## தமிழ்ப் பண்பாடு

தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும் தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்தமொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்துவரும்.



இங்கே ஒரு தம்பி படம் எடுத்து – அந்தப் படம் வெற்றி பெறாத காரணத்தால், வாழ்க்கையிலே நொடித்துப்போயுள்ள அந்தத் தம்பி – இங்கே பரிவுத்தொகை பெற்றபோது என் கையைப் பிடித்துக் கொண்டு, இந்தப் பணத்தை நான் என்னுடைய வாழ்க்கைக்கு ஊன்றுகோலாக வைத்துக்கொள்வேன் – என்று சொன்னார். நான் அவரிடம் தொடர்ந்து இந்தத்துறையிலேயே தொழில் செய்யப் போகிறாயா ? அல்லது தொழிலை மாற்றப்போகிறாயா என்று கேட்டேன். இல்லையில்லை, நிச்சயமாக மாற்றிக்கொள்ளப்போகிறேன் என்றார்.

அதற்கு என்ன காரணம் என்பதை நான் வேதனையோடு எண்ணிப்பார்க்கிறேன். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. சினிமா படம் எடுப்பவர்கள் அல்லது இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் சில நேரங்களில் ஏற்படுகின்ற அலுப்பினால், அவர்கள் பட்ட கஷ்டங்களால், அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகளால், அவர்களுக்கு ஏற்பட்ட வேதனைகளால் இன்னும் சொல்லப் போனால் அந்தத்துறையிலே அவர்களுக்கு ஏற்பட்ட அவமானங்களால்கூட, “போதும் இந்தத் தொழில்” என்று அதை நிறுத்தி விடுவதுண்டு.

என்னுடைய மருமகன் முரசொலி மாறன் தொடர்ந்து ஏழெட்டுப் படங்கள் தயாரித்தார். அந்தப் படங்களின் வரிசையில் இறுதியாக வெளியிடப்பட்ட படம் “எங்கள் தங்கம்” என்ற படமாகும். அந்தப் படம் முடிவுற்று – விற்பனையாகி – படம் வெளியிடப்பட்டு அதற்குப் பிறகு சில பேர் அவரிடம் வந்து “அடுத்த படம் என்ன சார் ?” என்று கேட்டார்கள். “அடுத்த படமா, இதற்குமேல் படம் எடுப்பதில்லை என்று நான் முடிவு செய்திருக்கிறேன்” என்று ரொம்ப விரக்தியோடு சொல்லி, அதோடு படம் எடுக்கின்ற தொழிலை அவர் நிறுத்திக்கொண்டார். அதை நான் ஆதரிப்பவனல்ல, அதை நான் வரவேற்பவனல்ல, இருந்தாலும் மாறனைப்போன்ற மனத்திண்மை வாய்ந்தவர்களேகூட பெரிய படங்கள் எடுத்தபோது அதிலே ஏற்பட்ட சலிப்பும், அலுப்பும், களைப்பும் சில விரும்பத்தகாத நிகழ்வுகளும் அத்தகைய முடிவுகளுக்கு அவர்களை வரச்செய்தது. ஆனால் கையைக் கடிக்கின்ற அளவிற்கு அல்லது குடும்பத்திலே புயலை ஏற்படுத்துகின்ற அளவிற்கு ஒரு படத்தினுடைய விளைவு இருக்குமேயானால் – இழப்பு இருக்குமேயானால் அதை ஓரளவாவது சரிசெய்கின்ற வகையிலே தொழிலில் வீழ்ந்துவிட்டவர்களைக் காப்பாற்றுகின்ற அளவிற்கு – தூக்கி விடுகின்ற அளவிற்கு அரசும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அரசாக, கலைத்துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு இருக்கும் என்ற நம்பிக்கையைக் காட்டுகின்ற வகையிலேதான் சில படங்களுக்கு ஏறத்தாழ




இரண்டரைக் கோடி ரூபாயை ஒரு படத்திற்கு ஏழு இலட்சம் ரூபாய் என்ற அளவிலே கொடுத்து அவர்களுடைய மன ஆறுதலைக் கண்டிருக்கிறோம்.

இது முழுமையாக அவர்களுக்குப் போதுமானதென்று நான் சொல்லமாட்டேன். இருந்தாலும் இதை வைத்து அவர்கள் மன ஆறுதல் பெறுவார்களேயானால், பரவாயில்லை, நாம் முழுமையாக விழுந்துவிடவில்லை, மறுபடியும் தலைதூக்கலாம் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு இது ஏற்படுத்தும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல. இப்படி அளித்த இந்தத் தொகையையேகூட ஓரிருவர் முதலிலே அதற்காக விண்ணப்பித்துக் கேட்டு, எங்களுக்கு வழங்க வேண்டுமென்று எழுதிக் கொடுத்து – நாமும் வழங்குவதற்கு ஒப்புதல் அளித்து அவர்களுக்கு அதற்கான தாக்கீதையும் அனுப்பிய பிறகு வாங்கவில்லை. அப்படி வாங்கப்படாத பணம் எல்லாம் அரசு நிதியிலே சேர்க்கப்படும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று சேர்க்கப்படுகின்ற அந்தத்தொகை இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டு இப்படிக் குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படுகின்ற ஒரு தரமான தமிழ்த் திரைப்படத்திற்கு வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் விண்ணப்பித்து விட்டு தரும்போது வேண்டாமென்று சொன்னவர்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அது அவர்களுடைய உரிமை. ஜனநாயக நாட்டில் எல்லோருக்கும் எல்லா உரிமையும் இருக்கிறது.

அண்ணா 100



## ஆசிரியர்கள்

கல்விச் செல்வத்தை அளிப்பதில் ஆர்வம் காட்டும் ஆசிரியர்களுக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்பு கிடைக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்கள்தான் அறிவுக் கண்களைத் திறந்து வைக்கிறார்கள்.




கேட்பதற்கும் உரிமை இருக்கிறது. கேட்பதைக் கொடுக்கும்போது வாங்க மறுப்பதற்கும் உரிமை இருக்கிறது. எனவே உரிமைகளைப் போற்றுகின்ற ஆட்சி என்ற முறையில் அந்த உரிமைகளுடைய உணர்வை நான் மதிக்கின்றேன். யார் மீதும் இதன் காரணமாக எனக்கு வெறுப்பில்லை. நான் அல்லது இந்த அரசு அதன் காரணமாக அவமானப்பட்டுவிட்டதாகக் கருதமாட்டேன். அவமானப்படுகிறோம் என்றால் யாரிடத்திலே அவமானப்படுகிறோம் ?

ஒரு தமிழன் இன்னொரு தமிழனைப் பார்த்து தூற்றுகிறான், அல்லது கேலி செய்கிறான், அல்லது கிண்டல் செய்கிறான், அல்லது கேவலமாகப் பேசுகிறான் என்றால் அதை அவமானம் இல்லையா என்று கேட்டால், நான் ஒன்றை இந்த அவையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் – நான் இன்று படுகின்ற அவமானத்தால், தமிழன் எதிர்காலத்திலே தலைதூக்கி நிற்பான், அதற்காக நான் இந்த அவமானத்தைப் பெறுகிறேன், ஏற்றுக்கொள்கிறேன் என்றால், இப்படி ஆயிரம் அவமானங்கள் வந்தாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனக்கு வேண்டியது, உச்சநீதிமன்றம் வரையிலே சென்று நியாயம் கேட்கிறோம் என்றால், எதற்காகக் கேட்கிறோம் ? எதற்காக வாதாடுகிறோம் ? பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராசரும் எந்த சேதுசமுத்திரத் திட்டத்திற்காகக் குரல் கொடுத்தார்களோ, அந்தத் திட்டம் நிறைவேற வேண்டும், அதை இடையிலே வந்தவர்கள் கெடுக்க நினைக்கிறார்கள், ஏதேதோ காரணங்களைக் கூறி, அந்தத் திட்டமே நிறைவேறக்கூடாது என்று கருதுகிறார்கள், அது நிறைவேறாவிட்டால் அது இலங்கைக்கு இலாபம், தமிழகத்திற்கு நஷ்டம், தமிழகத்தின் வளம், வாணிபம், வர்த்தகம், எதிர்காலம் இவைகள் எல்லாம் பாதிக்கப்படும் – ஒரு திட்டம் நிறைவேற வேண்டும், அந்தத் திட்டம் சேதுக்கால்வாய்த் திட்டம், அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அண்ணா போராடினார், பெரியார் போராடினார், பெருந்தலைவர் காமராசர் நேருவிடம் சென்று வாதிட்டார், அத்தகைய ஒரு திட்டத்தை இன்றைக்கு மடக்கிப்போடச் செய்யப்படுகின்ற சூழ்ச்சிகளை எவ்வளவு நாட்களுக்குத் தாக்குப்பிடித்து நாம் தாங்கிக்கொண்டிருக்க முடியும் என்ற காரணத்தினாலேதான், அந்தப் போராட்டத்தில் எவ்வளவு அவமானங்கள் வந்தாலும் பரவாயில்லை, அதனைத் தாங்கிக்கொண்டு தமிழகத்தைத் தாங்குவதற்கு நம்முடைய எதிர்காலத்தை வளமாக்குவதற்கு, நம்முடைய தமிழ் இனத்தின் குழந்தை

குட்டிகள், எதிர்காலச் சமுதாயம் நலிவடையாமல் இருப்பதற்கு, நலிந்து போகாமல் காப்பாற்றப்படுவதற்கு நாம் நம்மைத் தியாகம் செய்வதென்றால் – தியாகம் என்பது உயிரைக் கொடுப்பது மாத்திரமல்ல – தியாகம் என்பது அவமானப்படுவதுகூட தியாகம்தான்.

தந்தை பெரியார் அவர்கள் கடலூரிலே அவருடைய சிலையைத் திறக்கின்ற ஒரு விழாவிற்கு என்னை வரச்சொல்லி, அழைத்துச்சென்றார். இருவரும் ஒரு வண்டியிலே கடலூரிலே உள்ள பாலத்தின் குறுக்கே சென்றபோது, அவர், அவருடைய சிலை அமைக்கின்ற அந்த இடத்தைக்காட்டி, "அந்தச்சிலைக்குப் பக்கத்திலே ஒரு செருப்பு கிடக்கிறது அல்லவா, அதைப்பார்" என்றார். "என்னய்யா ?" என்று கேட்டேன். அவர் சொன்னார். "இந்தச்சிலை திறப்பு விழாவிற்காக நான் வந்த போது, என்மீது வீசப்பட்ட செருப்பு இது" என்று சொன்னார். அவருடைய சிலையைத் திறக்கக்கூடாது என்று பெரியாருடைய சிலையை மறுத்து, பெரியார்மீது செருப்பு வீசினார்கள். ஐயோ என்மீது செருப்பு வீசி விட்டார்களே என்று பயந்துகொண்டு அவர் சென்னைக்குத் திரும்பிவிடவில்லை. அவர் திரும்பிப்பார்த்து, இன்னொரு செருப்பையும் என்மீது வீசு என்று அந்த அவமானத்தைத் தாங்கிக்கொண்டு, பொறுமையோடு விழாவிலே கலந்துகொண்டுவிட்டு, சிலை திறப்புவிழா முடிந்த பிறகு திரும்பினார்.





ஒரு சிலை திறக்கக்கூடாதென்று செருப்பு வீசினார்கள். இன்று தமிழ்நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான சிலைகள் தந்தை பெரியாருக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்றால், அந்த ஒரு செருப்பு வீசப்பட்டபோது, அந்த அவமானம் எனக்கு ஏற்பட்டுவிட்டது, இனி அந்த அவமானத்தோடு வாழமாட்டேன் என்று அவர் மனஉறுதி கலைந்திருப் பாரேயானால், அவரால் இவ்வளவு பெரிய இயக்கத்தைக் கட்டிக்காத்திருக்க முடியாது. நமக்கெல்லாம் தன்மான உணர்வைத் தட்டியெழுப்பியிருக்க முடியாது.

இந்தியாவின் தேசப்பிதா காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலே பட்ட அவமானத்தை விடவா ? ரெயிலிலே ஏறி உட்கார்ந்த அவரைப் பிடித்து வெள்ளைக்கார அதிகாரிகள் கீழே தூக்கி எறிந்தார்களே, அதை விடவா ? ஒரு பெரிய வழக்கறிஞராக, தென்னாப்பிரிக்காவிலே தலைசிறந்தவராகத் திகழ்ந்தவர் காந்தி அடிகள். அவருக்கே அந்தக்கதி அன்றைக்கு ஏற்பட்டதென்றால், அதைத் தாங்கிக்கொண்ட காரணத்தால் இன்றைக்கு அவர் உலகம் முழுவதிலும் இந்தியாவின் தேசப்பிதா, உத்தமர் காந்தி அடிகள் என்று போற்றப்படுகிறார் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. ஆகவே சகிப்புத் தன்மை, பொறுத்துக்கொள்வது, அது அவமானம் என்றாலும் அதைப் புகழாகவே எண்ணிக் கொள்வது – இவை ஒருவரை வாழ வைக்குமே தவிர, அவரை வாட விட்டுவிடாது. அவருடைய எதிர்காலத்தை இருளாக ஆக்கிவிடாது. அந்த நம்பிக்கையோடுதான் எவ்வளவு அவமானங்கள் வந்தாலும், எவ்வளவு

கண்டனங்கள் வந்தாலும், எவ்வளவு கேலிகள், கிண்டல்கள் வந்தாலும் அவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கவேண்டும்.

இன்றைக்குக்கூடக் கேட்பார்கள். நாட்டில் எவ்வளவோ இருக்கிறது, அதையெல்லாம் விட்டு விட்டு இந்தச் சின்னத்திரைக்கு என்ன பரிசளிப்பு விழா என்று கேட்கக்கூடும். சின்னத்திரைக்குப் பரிசு கொடுத்தால்தான் பெரிய திரை வாழும். பெரிய திரை அதை மறந்து விடக்கூடாது. பெரிய திரை திடீரென்று வந்து விட்டதா இல்லை. பெரிய திரை வருவதற்கு முன்பு படங்கள் சின்னத்திரையிலேதான் ஓடின. இப்போது பார்க்கின்ற சின்னத்திரைகள் அல்ல. கடை வீதிகளில், சந்தை கூடுகின்ற இடங்களில் "பார், பார் பயாஸ் கோப் பார்" என்று சின்னத்திரைகளிலே படங்களைக் காட்டினார்களே, அதனுடைய வளர்ச்சிதான் இன்றைக்குப் பெரிய திரை என்பதை எண்ணிப் பார்த்தால், சின்னத்திரை நம்முடைய ஆதி என்பதை நாம் உணர முடியும். ஆகவே சின்னத்திரை இல்லாமல் பெரிய திரை இல்லை.


நாம் ஐந்து அடி உயரம், ஒன்றரை அடி அகலம் இருக்கிறோம் என்றால், குழந்தையாக இருந்தபோது ஐந்து அடி உயரம் இருந்தோமா என்றால் இல்லை. அப்போது சின்னத்திரையாகத்தான் இருந்தோம், இப்போதுதான் பெரிய திரையாக இருக்கிறோம். இதை மறந்து விடக்கூடாது. ஆகவே சின்னத்திரை இல்லாமல் பெரிய திரை இல்லை. சின்னத்திரையை மறந்து விடக்கூடாது.

நான் தம்பி விடுதலைக்குச் சொல்கிறேன். அன்றைக்குச் சொன்னதை மறந்திருப்பேன் என்று கருதுகிறாய், நான் மறக்கமாட்டேன். உங்களுக்கு ஒரு இடம் வேண்டுமென்று கேட்டாய், நான் உங்களுக்கு "அதிக இடம் கொடுத்து விடமாட்டேன்" கொடுக்கின்ற இடம் நீங்கள் அலுவலகம் நடத்துவதற்கு ஏற்றதாக அந்த இடத்தை நிச்சயமாகத் தருவேன், அந்த இடம் கலை வளர்க்கின்ற இடமாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு அந்த இடத்தைத் தருவேன்.

இந்தப் படங்களைத் தேர்வு செய்து அவைகளைத் தேர்ந்தெடுத்த நீதியரசர்கள் இருவருக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து – இவ்வளவு படங்களையும் பார்த்து தீர்ப்புகள் வழங்கி அவைகளைப் பரிசுக்குரியவையாகத் தேர்ந்தெடுத்த அந்தக்குழுவினர் அனைவருக்கும் அவர்களுடைய உழைப்பிற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே குஷ்பூ அவர்கள் பேசும்போது, ராதிகா அவர்கள் பேசும்போது "நீங்கள் எங்களுக்கு எப்போதுமே இப்படிப் பரிசுகளை வழங்கிக்கொண்டிருக்க வேண்டும்" என்று சொன்னார்கள். அது ராதிகாவின் ஆசையாக இருக்கலாம். அவருடைய வீட்டுக்காரரின் ஆசை எப்படி இருக்குமோ எனக்குத் தெரியாது என்று கூறி விடைபெறுகிறேன். ❖

அண்ணா 100



## கவிதை

சிந்தித்தால் உரையாற்றலாம்; சிந்தித்து நெகிழ்ந்தால் மட்டும்தான் கவிதை இயற்ற முடியும். தான் கண்டு, உள்ளம் நெகிழ்ந்ததை மற்றவர்கள் நெகிழத்தக்க அளவுக்கு அள்ளித் தருவதுதான் கவிதை.

கவிதை எப்போது ஒரு நாட்டில் பிறக்கும்? மொழி வளர்ந்து –இலக்கியம் வளர்ந்து– அதை மக்கள் உணருகின்ற நேரத்தில்தான் தோன்றும்.

எழுத்து சுவைமிக்கதாக மட்டுமிருந்தால் போதாது. சுவையோடு கூடிய பயனும் உள்ளதாக இருக்க வேண்டும். அப்போதுதான் முழு அளவு பாராட்டத்தக்க இலக்கியமாக–கவிதையாக அது திகழும்.

### அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி

# விலை மதிப்பில்லா மனித உயிர்களைக் காக்கும் அவசர மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கிவைத்தார்

நமது நாட்டில் பெருகி வரும் சாலை விபத்துகளில் ஓர் ஆண்டில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் வரை உயிர் இழக்கின்றனர். ஏறத்தாழ 5 இலட்சம் முதல் 6 இலட்சம் பேர் வரை காயமடைகின்றனர். கிராமப் பகுதிகளில் மகப்பேறு காலங்களில் கர்ப்பிணிப் பெண்களும், விஷக் கடிகளாலும், வெறிநாய்க் கடிகளாலும் பாதிக்கப் படுவோரும், உடனடியாகச் சிகிச்சை பெற முடியாமல் உயிரிழக்க நேரிடுகிறது. விலை மதிப்பில்லா மனித உயிர்கள் காப்பாற்றப்படவேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டு விபத்துகளில் பாதிக்கப்படுவோருக்கு உரிய சிகிச்சைகளை உடனடியாக அளிப்பதற்காக, அவசர கால மருத்துவ ஊர்தி சேவைத் திட்டத்தை நடைமுறைப்படுத்திட முடிவு செய்து, அதன்படி, 16 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் 187 வட்டாரங்களில் அவசரகால மருத்துவ ஊர்திகள் வழங்கப்பட்டு, தொண்டு நிறுவனங்கள் மூலம் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.





இத்திட்டத்தைத் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மேலும் செம்மையாகச் செயல்படுத்திடவும், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்திடவும் ஆந்திரா மாநிலம் ஐதராபாத் நகரைச் சேர்ந்த இ.எம்.ஆர்.ஐ. என்னும் தொண்டு நிறுவனம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. இந்நிறுவனம் ஆந்திரம், குஜராத் மற்றும் உத்ராஞ்சல் மாநிலங்களில் இதேபோன்ற திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி நல்ல அனுபவம் பெற்றுள்ளது. அந்நிறுவனத்தின் மூலம்

தமிழகத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்திட தமிழக அரசு 6.5.2008 அன்று, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, இந்த இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்திடம் முதற்கட்டமாக குளிர்சாதன வசதி மற்றும் தேவையான மருத்துவ உபகரணங்கள் அனைத்தும் பொருத்தப்பட்டுள்ள 198 அவசர கால மருத்துவ ஊர்திகள் தமிழக அரசினால் 17 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்பட்டு வரும் 187 அவசரகால மருத்துவ ஊர்திகளும் இத்திட்டத்துடன் இணைக்கப்பட்டு 34 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 385 அவசரகால மருத்துவ ஊர்திகள் இத்திட்டத்தில் ஈடுபடுத்தப்படும்.

இந்த திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களை இ.எம்.ஆர்.ஐ. நிறுவனம் தேர்வுசெய்து, அவர்களுக்கு உரிய பயிற்சிகளை அளித்துள்ளது.

இத்திட்டத்திற்குரிய 'மத்திய செயல்பாட்டு நிலையம்', சென்னை அரசு கஸ்தூரிபா காந்தி மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் உள்ள சுகாதார மேற்பார்வையாளர் பயிற்சி நிலையத்தில், இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்தினால் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மத்திய செயல்பாட்டு நிலையத்தில், தகவல் தொடர்புகளுக்குத் தேவைப்படும் கணினிகளும், அதற்கான மென்பொருள்களும் பொருத்தப்பட்டுள்ளன.

மருத்துவத்துறை, தீயணைப்புத்துறை, காவல்துறை ஆகிய துறைகளின் அவசர உதவி தேவைப்படும் பொதுமக்கள், இத்திட்டத்திற்கென அமைக்கப்பட்டுள்ள கட்டணமில்லா தொலைபேசி எண்.108–ஐ பயன்படுத்தி, தமிழகத்தின் எந்த ஒரு பகுதியிலிருந்தும் இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொண்ட சில நொடிகளில், அவசரகால மருத்துவ ஊர்தி புறப்பட்டு, அரை மணி நேரத்திற்குள் நோயாளி இருக்கும் இடத்திற்குச் சென்று, அவருக்குத் தேவைப்படும் முதல் கட்ட அவசர சிகிச்சையை அளிக்கும். பின்னர், அந்த நோயாளியை மருத்துவமனைக்குக் கொண்டு வந்து, அவருக்குத் தேவையான மருத்துவ உதவிகளை உடனடியாக வழங்கும். இந்தச் சிகிச்சைக்காக நோயாளியிடம் முதல் 24 மணி நேரத்திற்கு எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படமாட்டாது.

அதன் பின்னர், நோயாளியின் விருப்பத்திற்கேற்ப, அவர் விரும்பும் மருத்துவமனையில் சேர்ந்து தொடர் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளலாம்.


இத்திட்டத்திற்காக மொத்தம் 385 மருத்துவ ஊர்திகளுக்கு அனுமதிக்கப்பட்ட 34 கோடியே 68 இலட்சம் ரூபாய் தவிர இத்திட்டத்திற்குரிய மத்திய கட்டுப்பாட்டு மையத்திற்கான கட்டடம் புதிதாகக் கட்டப்படவும், இதர நிர்வாகச் செலவுகளுக்காகவும் மேலும் 36 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியுள்ளது.

நெருக்கடி நிலையில் உள்ள உயிர்களைக் காக்கும் சீரிய இந்தத் திட்டத்தின்கீழ், முதலில் சென்னையில் 20 அவசர மருத்துவ ஊர்திகளை வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15.9.2008 அன்று இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார். மற்ற மாவட்டங்களுக்கும் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஆ. இராசா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சத்யம் கம்ப்யூட்டர் சர்வீசஸ் தலைவர்–நிறுவனர் திரு. பி. ராமலிங்க ராஜு, கவிஞர் கனிமொழி, எம்.பி., தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதாரத்திட்ட இயக்குநர் திரு.டேவிதார், இ.ஆ.ப., மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

❖ ❖ ❖

அண்ணா 100



**நாட்டுப்பற்று**

பாதையிலே கிடக்கிற முள்ளை எடுத்து ஓரத்திலே போட்டாலும் அதுவும் நாட்டுப் பற்றால் செய்யும் செயலாகும்.

**கூட்டுறவு**

சமுதாயத்தில் தனி உடைமைக்கும் பொது உடைமைக்கும் மையமான ஒரு தங்குமிடமாக உருவாகியிருப்பதே கூட்டுறவு இயக்கம்.

# ரூ.4,150 கோடியில் வணிக வாகனங்கள் தயாரிக்கும் புதிய தொழில் திட்டம் தமிழக அரசுடன் - அசோக் லேலண்டு நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம்!



**வ**ணிக வாகனங்கள் தயாரிப்பில் இந்தியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய நிறுவனமாக விளங்கும் அசோக் லேலண்டு நிறுவனம் சென்னைக்கு அருகில் எண்ணூரில் அமைந்துள்ள முதன்மைத் தொழிற்சாலையுடன், ஒசூரில் இரண்டு ஆலைகள், இராஜஸ்தான் மாநிலம் ஆல்வாரில் ஒன்று, மராட்டிய மாநிலம் பந்தாராவில் ஒன்று என மொத்தம் ஐந்து உற்பத்தித் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது.

இந்நிறுவனம் உலகின் அனைத்துப் பெரிய சந்தைகளிலும் இடம்பெற்றுள்ள, பயணிகளுக்கான சொகுசுக் கார், குடும்பங்களுக்கான கார், விளையாட்டுப் போட்டிகளுக்கான கார், விளையாட்டுப் போட்டிகளுக்குப் பயன்படும் பிற வாகனங்கள், இலகுரக வணிக வாகனங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த நிசான் மோட்டார்ஸ் நிறுவனத்துடன் சேர்ந்து – ஆண்டுக்கு ஒரு இலட்சத்து 90 ஆயிரம் வாகனங்களைத் தயாரிக்கும் திறன்கொண்ட இலகுரக வணிக வாகனத் திட்டத்தை மூன்று கூட்டு முயற்சி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

மேலும், ஆண்டுக்கு ஒரு இலட்சம் வாகனங்களைத் தயாரிக்கும் உற்பத்தித் திறனுடன் நடுத்தர ரக மற்றும் கனரக வணிக வாகனங்கள் திட்டத்தைத் தன் சொந்தத் திட்டமாகச் செயல்படுத்தவும் அசோக் லேலண்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

அசோக் லேலண்டு நிறுவனத்தால் திட்டமிடப்பட்டுள்ள இந்த இரண்டு திட்டங்களும் ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் திட்டத்திற்கான அனைத்து உட்கூறுகளையும் கொண்டிருக்கும். எண்ணூர், ஒசூர், பிள்ளைப்பாக்கம் போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் 4,150 கோடி ரூபாய் முதலீட்டில் அமையவிருக்கும் இத்திட்டங்கள் முழுத்திறனுடனும் செயல்படும்பொழுது 4,500 பேருக்கு நேரடியாகவும், ஏறத்தாழ 13 ஆயிரத்து 500 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை வழங்கும்.

இத்தொழிற்சாலை மூலம் கிடைக்கும் முதலீடு அசோக் லேலண்டு மற்றும் நிசான் நிறுவனங்கள் மூலம் தமிழகத்திற்கு வந்துள்ள மிகப்பெரிய முதலீடாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் 8.9.2008 அன்று நடைபெற்ற இத்தொழிற்சாலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.எஃப். பரூக்கி, இ.ஆ.ப., அவர்களும் அசோக் லேலண்டு நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சேஷசாயி அவர்களும், நிசான் நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் துணைத் தலைவர் திரு. ஆன்ட்ரூ பால்மர் அவர்களும் கையெழுத்திட்டனர்.

அசோக் லேலண்டு மற்றும் நிசான் நிறுவனங்களால் அமைக்கப்படவுள்ள இந்தத் திட்டங்களுடன் ஏற்கெனவே, தனது உற்பத்தி வசதிகளை பெரிய அளவில் விரிவாக்கம் செய்துவரும் ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம், ஃப்ரான்ஸ் நாட்டைச் சார்ந்த ரெனோ நிறுவனமும் ஜப்பான் நாட்டைச் சார்ந்த நிசான் நிறுவனமும் இணைந்து ஒரகடம் தொழில் பூங்காவில் உருவாக்கிடும் ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் திட்டம், ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த டெய்ம்லர் நிறுவனமும் இந்தியாவைச் சார்ந்த ஹீரோ நிறுவனமும் இணைந்து சிப்காட் ஒரகடம் தொழிற் பூங்காவில் அமைத்துவரும் வணிக வாகனங்கள் திட்டம் ஆகிய அனைத்தும் சீருந்துகள் உள்ளிட்ட வணிக வாகனங்கள் தயாரிப்பில் சென்னைக்கு மென் மேலும் சிறப்புகளைச் சேர்க்கும் என்பது உறுதியாகிறது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞான தேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகத்தின் (SIPCOT) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு என். கோவிந்தன், இ.ஆ.ப., தொழில்துறை சிறப்புச் செயலாளர் தீரஜ்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி அமைப்பின் இயக்குநர் திரு. எம். வேல்முருகன், இ.ஆ.ப., அசோக் லேலண்டு நிறுவனத்தின் சார்பாக திரு. ஜி.பி. இந்துஜா, திரு. டி.ஜி. இந்துஜா, டாக்டர் வி. சுமந்திரன், திரு கே. ஸ்ரீதரன் ஆகியோரும் நிசான் நிறுவனத்தின் சார்பாக திரு. தகாஷி டொராடா மற்றும் திரு. நகாடா ஆகியோரும் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

# தமிழகத்திலே நிறைவேற்றப்படும் திட்டங்கள் பலராலும் பாராட்டி வரவேற்கப்படுகின்றன

16-8-2008 அன்று, சென்னையில் நடைபெற்ற அரசு நூலக வளாக அடிக்கல் நாட்டு விழாவில்


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை




**கோ**ட்டூர்புரம் என்றாலே எனக்கு முன்னால் இங்கே உரையாற்றிய நண்பர்களும், தம்பிமார்களும் எடுத்துரைத்ததைப்போல என் வாழ்க்கையிலே ஒரு கொடுமையான அத்தியாயம்.

ஒரு பொதுத்தேர்தல் நேரத்தில், இரவு 10 மணி அளவில் வாக்காளர்களைச் சந்திப்பதற்காக அன்றைக்கு இந்த வட்டாரத்தில் மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்த நண்பர் கோபால் என்பவருடைய அழைப்பின் பேரில், நானும் நண்பர்களும் இந்தப் பகுதிக்கு வந்து வாக்கு சேகரித்த நேரத்தில் எங்களை "வருக, வருக" என்று அழைத்த சில பேர், நாங்கள் அதை நம்பி உள்ளே வந்ததும், எங்களை ஒரு மண்டபத்திற்குள் தள்ளி, கதவைப் பூட்டி, என்னுடன் வந்த வயதான பெரியவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் அருமைத் தோழர் காஞ்சி மணிமொழியாரையும் மற்றும் எங்கள் தோழர்களையும் உள்ளேயே பூட்டி வைத்து, அதற்குப் பிறகு நடக்க வேண்டிய காரியங்களையெல்லாம் நடத்தி, நாங்கள் இரத்தம் ஒழுக, உடல் வலி தாங்காமல் அங்குமிங்கும் ஓடி தப்பித்துச் செல்ல என்ன வழி என்று

அண்ணா 100



## பொது நன்மை

**நா**ட்டிலே ஒரு புது சமுதாய உணர்வை ஊக்குவிக்க, அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் மட்டும் போதா. அவற்றினை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் காட்டும் திறமையும் அக்கறையும் மட்டும் போதாது. சமூகம் முழுவதும் எழுச்சிபெற்று, ஒவ்வொருவரும் தமது பங்கினைச் செலுத்தி, புது நிலையினை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் கொள்ள வேண்டும். தமது உழைப்பினை மனமுவந்து ஈந்திட, பலப்பல ஆயிரவர் முன் வந்திடின், சமூகம் பெற்றிடக் கூடிய பயன், பெருமை தரத்தக்கதாக அமையும். "எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் செலவிட்டது போக, மிஞ்சியதில் ஒரு மணி நேரமாகிலும், நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவேன்" என்ற உறுதி கொண்ட சில ஆயிரவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின், சமூக மேம்பாடு வளர்ந்திடுவது உறுதி.

பார்த்து வழி தெரியாமல் சாரங்கபாணி என்கிற மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தோழரும், அவருடைய மனைவியும் பரபரவென ஓடிவந்து எங்களுடைய கரங்களைப் பிடித்து இழுத்துச் சென்று, பக்கத்திலே உள்ள ஒரு குடிசைக்குள் என்னை அடைத்துவிட்டு என்னோடு வந்திருந்த வெங்கடங்கால் சந்தானம், வாழக்கரை ராஜகோபால் போன்ற நண்பர்களையெல்லாம் நீங்கள் போங்கள், நாங்கள் அவரைப் பத்திரமாக அனுப்புகிறோம் என்று சொல்லிவிட்டு – என்னை அந்த வீட்டிற்குள்ளே பத்திரமாகப் பாதுகாத்தார்கள்.


ஆனால் அங்கே நான் பிடித்து வைக்கப்பட்டிருக்கிறேன் என்பதைக் கேள்வியுற்ற, தேர்தலிலே போட்டியிட்ட எதிர்தரப்பு நண்பர்கள் அந்த வீட்டை வளைத்து என்னைப் பிடிப்பதற்கு அடிப்பதற்கு முனைந்தபோது நான் வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன் – அந்தச் சாரங்கபாணியின் இளம் மனைவி, தன்னுடைய பச்சைக் குழந்தையை, அதனுடைய அழுகையை நிறுத்துவதற்காக, அழுதால் அந்த ஒலி கேட்டு அந்த முரடர்கள் உள்ளே நுழைந்து விடுவார்கள் என்ற பயத்தின் காரணமாக அதன் வாயைப் பொத்திக்கொண்டே, அந்த குடிசைக்குள் இருந்த கயிற்றுக் கட்டிலின்கீழ் அந்தக் குழந்தையோடு விடிய விடிய படுத்திருந்த அந்தக் காட்சியும், அந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய ஏழை மக்கள் என்னைக் காப்பாற்றி வெளியே அனுப்பிய அந்த நிகழ்ச்சியும் – அதற்கிடையே செய்தி கேள்விப்பட்ட அறிஞர் அண்ணா அவர்கள் நடிப்பிசைப்புலவர் திரு. கே.ஆர். ராமசாமி போன்றவர்களையெல்லாம் அங்கே அனுப்பி நான் எங்கே என்று தேடியபோது, பொழுது விடிந்து ஆறு மணி அளவிலே அவர்கள் அந்த இடத்திற்கு வந்து என்னை அழைத்துச் சென்றார்கள்.

நுங்கம்பாக்கத்திலே அறிஞர் அண்ணா அவர்களின் வீட்டிற்குக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அண்ணா அவர்கள் ராணி அண்ணியாரை அழைத்து சாரங்கபாணியின் மனைவிக்கு நீ நன்றி சொல்கிற வகையிலே அந்த அம்மையாருக்கு நமஸ்காரம் செய்துகொள், அவர்தான் கருணாநிதியைக் காப்பாற்றி அனுப்பியிருக்கிறார் என்று அண்ணியாரை விட்டு அந்தச் செயலைச் செய்யச் சொல்லி, சாரங்கபாணியினுடைய துணைவியாருக்கு புடவையும், சாரங்கபாணிக்கு வேட்டியும் எடுத்துக் கொடுத்து – என் தம்பியைக் காப்பாற்றிய உங்களுக்கு என்னால் முடிந்த பரிசாக இதைத்தான் தர முடியும் – என்று அனுப்பி வைத்தாரே, அந்த இடம் தான் இந்தக் கோட்டூர்புரம்.

இந்தக் கோட்டூர்புரத்தில் ஒரு நூல் நிலையத்தை நூலகத்தை இந்தியாவிலேயே எடுத்துக்காட்டிப் பேசுகின்ற அளவிற்கு, புகழ்கின்ற அளவிற்கு உருவாக்குகின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது என்பதையும் – அன்றைக்கு அந்த உத்தமி மாத்திரம் – சாரங்கபாணியின் மனைவி மாத்திரம் என்னைக் காப்பாற்றியிராவிட்டால் இன்றைக்கு கருணாநிதியை நீங்கள் முதலமைச்சராகப் பார்த்திருக்கவும் முடியாது, கருணாநிதி வந்தாலும் வராவிட்டாலும் இங்கே ஒரு நூல் நிலையத்தினை நீங்கள் கண்டிருக்கக்கூடும், ஆனால் என்னைப் பார்த்திருக்க முடியாது, நானும் உங்களோடு இருக்கக்கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கிய இயற்கைக்கு இந்த நேரத்திலே நான் நன்றி சொல்லி அந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இளம் ஏழைக் குடும்பத்தினருக்கு என்னுடைய வணக்கத்தை, வாழ்த்தை, என்னுடைய விசுவாசம் மிக்க நன்றியைத் தெரிவித்துவிட்டு, இந்த விழாவிலே என்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறேன். அதுதான் நான் அவர்களுக்கு ஆற்றக்கூடிய கடமை, காட்டக்கூடிய நன்றி.

கோட்டூர்புரத்தைத் தேர்ந்தெடுத்து நூலகம் தந்தமைக்காக தம்பி துரைமுருகனும், தம்பி டி. ஆர். பாலுவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். தம்பி துரைமுருகன் புத்தகம் படிப்பதிலே ஆர்வம் படைத்தவர். எனக்குள்ள பயம் எல்லாம் இப்போது – அவர் என் வீட்டிற்கு வந்தாலே அங்கேயுள்ள புத்தகத்தை – எனக்குத் தெரியாமல்

அண்ணா 100



## தொழிலாளர் உரிமை

இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஆலைகள் எழ ஆரம்பித்துவிட்டன. தொழிலாளர்கள் இந்தச் சமுதாயத்திற்குப் புது உருவத்தைக் கொடுக்கிறார்கள்.

பாரதி சொன்னார், தொழிலாளர்கள் பிரம்மாக்கள் என்று! பிரம்மாக்கள் என்றால் தெய்வங்களல்ல–உற்பத்தி செய்பவர்கள்! உற்பத்தி செய்பவர்தான் ஆக்குந் தொழில்தான் பிரம்மாவுக்கு உரியது என்று புராணங்கள் கதை சொல்லும். அதைப் போல, தொழிலாளர்கள் பிரம்மாக்களாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைத்தால், தொழில் இருக்கும் ஆனால் வளமிருக்காது. தொழிலாளர் உரிமைகளையும் அவர்களின் நலனையும் எவ்வளவுக் கெவ்வளவு பாதுகாக்கின்றோமோ, அவ்வளவு விரிந்த அளவில் தொழில் வளம் பெருகும்.





எடுத்துக் கொண்டு போய் விடுவார். எனவே பக்கத்திலே ஒரு நூலகம் வரும்போது என்ன செய்வார்களோ என்று பாலுவைப் பற்றியும், துரைமுருகனைப் பற்றியும் எனக்குப் பயமிருந்தாலுங்கூட, இது அரசுக்குரிய இடம், நமக்கும் உரிய இடம் என்ற உணர்வோடு செயல்படுவார்கள், செயல்படவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுக்கொரு புத்தகச்சாலை வேண்டும் என்று அறிஞர் அண்ணா இன்று நேற்றல்ல – நீண்ட காலத்திற்கு முன்பு வானொலியிலே பேசினார். 1948ஆம் ஆண்டில் பேசினார். அப்போது சொல்கிறார்.

“வீடுகளில் மேஜை நாற்காலி, சோபாக்கள் இருக்கும், பீரோக்கள் இருக்கும். அவைகளில் வெள்ளித் தாம்பாளமும் விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச் செம்பும் இருக்கும், பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும். உடைகள் சிறு கடையளவு இருக்கும். மருந்து வகைகள் சிறு வைத்தியசாலை அளவுக்குகூட இருக்கும். அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயும்கூட புத்தகச் சாலை இராது. இருக்கவேண்டுமென்று எண்ணம் வருவதே இல்லை. அவசியமும் தோன்றுவதில்லை.

இந்தச் செப்புக் குடம் சீரங்கத்தில் வாங்கியது. தேவர் கல்யாணத்தின்போது திருப்பதியில் வாங்கினோம். இந்தத் தாம்பாளத்தைப் பெல்லாரிக்குச் சென்றோமே பெண் பார்க்க, அப்போது வாங்கினோம். இந்த இரத்தின ஜமுக்காளத்தைக் கார்த்திகை தீபத்தின்போது திருவண்ணாமலையில் வாங்கினோம். சிதம்பரத்திலே ஆருத்திரா தரிசனத்தின்போது, இதை வாங்கினோம் என்று நமது வீடுகளில் பல சாமான்களைக் காட்டுவர். சாமான் ஒவ்வொன்றுக்கும் ஒரு சரித்திரமே கூறுவார்கள். ஆனால், பத்து நல்ல புத்தகங்களைக் காட்டி இன்ன சந்தர்ப்பத்தில் இவைகளை வாங்கினோம் என்று கூறமாட்டார்கள்.

அண்ணா 100



## விவசாயம்

இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் பி.ஏ. பட்டதாரி டிராக்டர் ஓட்டுவதையும், எம்.ஏ., பட்டதாரி அறுவடை செய்வதையும் பார்க்கலாம். படித்தவன் உழவேண்டும், உழுபவன் படிக்க வேண்டும். படிப்பான் அறிவுப் பசியைத் தீர்க்க–உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்ற நிலை ஏற்பட வேண்டும்.

தானே பயிரிட்டு வளரும் நிலம், தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தையைப்போல! நிலத்தைக் குத்தகைக்கோ வாரத்திற்கோ விட்டால், நிலத்திலே பயிர் வளராது என்பதில்லை–வளரும்– ஆனால் அதிலே வாஞ்சையிருக்காது.

வீட்டின் அலங்காரத்தையும், விசேஷகால உபயோகத்திற்கான சாதனங்களையும் கவனிப்பது போல வீட்டிற்கோர் புத்தகச்சாலை, சிறிய அளவிலாவது அமைக்க நிச்சயமாகக் கவனம் செலுத்தவேண்டும்; அக்கறை காட்டவேண்டும். அறிவு ஆயுதமாகிவிட்ட நாட்களிலே வாழும் நாம் இனியும் இந்தக் காரியத்தைக் கவனியாதிருப்பது நாட்டுக்கு மறைமுகமாகச் செய்யும் துரோகச் செயலாகும்.

வீட்டிற்கோர் புத்தகச்சாலை நிச்சயமாக வேண்டும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் அலங்காரப் பொருள்களுக்கும், போகபோக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி, புத்தகச்சாலைக்கும் அந்த இடம் தரப்படவேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை – அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும், ஒவ்வொரு வீட்டிலும் முதல் இடம் புத்தகச்சாலைக்குத் தரப்படவேண்டும்''. – என அறிஞர் அண்ணா அவர்கள் 48ஆம் ஆண்டு வானொலியிலே ஆற்றிய உரை இன்னமும் நம்முடைய காதுகளிலே ஒலித்துக்கொண்டிருக்கின்றது. இன்னமும் ஒலித்துக்கொண்டிருப்பதற்குக் காரணம், அவருடைய அவா முழுமையாகத் தமிழகத்திலே ஏன் நாட்டிலே நிறைவேறவில்லை. நிறைவேறவேண்டும் என்ற அந்த நேரத்தை நோக்கி நாம் எல்லாம் நடைபோட வேண்டும் என்பதற்காகத்தான் இதனை ஞாபகப்படுத்துகிறேன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் புத்தகச்சாலையைப் பற்றி எடுத்துச் சொன்ன கவிதையை இங்கே தொகுப்புரை வழங்கிய அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாரதிதாசன் சொல்கிறார்.

"மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து

தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றெனப துணர்வ தற்கும்,

இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை;

புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகச்சா லைவேண்டும் நாட்டில்
யாண்டும்"

இப்படி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் சிறப்பிக்கப்பட்ட புத்தகச்சாலையாக இந்த நூலகம் அமையும் என்பதிலே எனக்கு எள்ளளவு அய்யமும் இல்லை.

நாம் பிற பெரிய திட்டங்களை நூறு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவு ஆகக்கூடிய திட்டங்களை இப்போது இந்த இரண்டாண்டு காலத்திலே நிறைவேற்றத் தொடங்கி, அவைகள் முடிவுறும் தருவாயில் அல்லது பாதியளவு நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிலையிலே அந்தத் திட்டங்கள் இன்றைக்குத் தமிழகத்திலே பலராலும் போற்றப்படுகின்ற திட்டங்களாக – வரவேற்கப்படுகின்ற திட்டங்களாக அமைந்துள்ளன. இன்றைக்குப் பொதுநூலகத் துறையின்கீழ் தமிழகத்திலே இயங்கி வருகின்ற நூலகங்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் கூட, அதனுடைய சிறப்பு, பெருமை போற்றத்தக்கதாக இல்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

30 மாவட்டங்களில் மைய நூலகங்கள் இருக்கின்றன. 1,567 கிளை நூலகங்கள் இருக்கின்றன. 1,827 ஊர்ப்புற நூலகங்கள் இருக்கின்றன. 487 பகுதி நேர நூலகங்கள் இருக்கின்றன. 12 நடமாடும் நூலகங்கள் இருக்கின்றன. ஆகமொத்தம் 3,924 நூலகங்கள் அரசு பொதுநூலகத் துறையின்கீழ் செயல்படுகின்றன.

அங்கெல்லாம் தரப்படுகின்ற நூல்களின் எண்ணிக்கை ஒரு புதிய நூல் ஒன்று வெளிவருமேயானால், அந்த எழுத்தாளர் மூலம்

அண்ணா 100



## செம்மொழி

"தமிழ் மீது, நாம் பற்று வைப்பது, இயற்கை நியதியாகும். ஆனால் அதற்குமேலே அந்த மொழியை ஒப்பிட்டுப் பார்த்தாலும், தமிழ் ஒரு செம்மொழி என்பது தெரிகிறது. அந்த மொழிமீது வைக்கப்படுகின்ற பற்றின் காரணமாக, அந்த மொழி, எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெறவேண்டுமென்று விரும்புகிறோம். ஏற்றத்திற்குத் தடையாக, ஏதேனும் வருமானால், நம்மையும் அறியாமல் உள்ளம் கொதிப்படைகிறது".

கிடைக்கின்ற மன்னிக்க வேண்டும், அந்த எழுத்தாளரிடமிருந்து நூலகங்கள் வாங்குகின்ற புத்தகங்களின் எண்ணிக்கை இதுவரையிலே 600 ஆக இருந்ததை நம்முடைய எழுத்தாளர்கள் என்னிடம் வைத்த "வேண்டுகோளை" மன்னிக்கவும் "கோரிக்கை"யின் காரணமாக அதை ஆயிரமாக உயர்த்தித்தந்து இப்போது அவர்கள் மகிழ்ச்சியிலே திளைத்திருக்கின்றார்கள்.

மேலும் அவர்கள் இந்த நூலகங்களுடைய பெருமைகளை உயர்த்துவார்களேயானால் ஆயிரம் என்பதை இரண்டாயிரம் என்று ஆக்குவதற்குக் கூட அதிக நேரம் ஆகாது என்பதை நான் இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நூலகத்தை உருவாக்க வேண்டுமென்று சிந்தனையை நான் பெற்றதற்கு வித்தாக இருந்தது என்னுடைய மகள் கனிமொழி என்பதை இங்கே குறிப்பிட்டார்கள். நான் அதற்காக நன்றி சொல்லப்போவதில்லை, தேவையும் இல்லை என்பதற்காக, ஆனாலும் கனிமொழியின் அந்த ஆர்வத்தை இன்றையதினம் செயல்படுத்தியிருக்கிறோம். இதைச் செயல்படுத்தி, இங்கே மாபெரும் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு, பல்லாயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மக்கள் அந்தப் புத்தகங்களின் மூலமாகப் பயன்பெறுகிற அந்த நிலை ஏற்படுகிற நேரத்தில் நாம் இன்றைக்கு தொடங்குகின்ற இந்த நிகழ்ச்சியினுடைய வெற்றி என்பதைக் கொண்டாடமுடியும். அந்த வெற்றியைப் பெறுவதற்கு நீங்கள் எல்லாம் உங்களுடைய ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.


நம்முடைய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், அருமைத் தம்பி தங்கம் தென்னரசு உருக்கமிகு உரையொன்றை ஆற்றி என்னையும் பேராசிரியரையும் மற்றவர்களையும் வரவேற்றிருக்கின்றார். நான் தங்கம் தென்னரசிடம் என்ன எதிர்பார்த்து, அவரை அமைச்சராக ஆக்குகின்ற பணியிலே ஈடுபட்டேனோ அது நிறைவேறியிருக்கிறது அது நிச்சயமாக நிறைவேறும், அதிலே நான் ஏமாறவில்லை, ஏமாறமாட்டேன். யார் யாரை எந்த இடத்திலே வைக்க வேண்டும், யார் யாருக்கு என்ன பொறுப்பைக் கொடுக்க வேண்டுமென்பதை சிந்தித்துப் பார்த்து நாங்கள் செயல்படுகிறவர்கள், அந்தச் சிந்தனை தவறாகவில்லை என்பதற்கு என்னுடைய அருமைத் தம்பி – நான் இழந்த மறவர் குல மாணிக்கம் – தங்கபாண்டியனுடைய பெயரை தவறாது சொல்லக் கூடிய அந்தப் பெயரை நிலை நாட்டக் கூடிய வகையில் நம்முடைய தம்பி தங்கம் தென்னரசு செயல்படுகிறார்.

அவர் என்னை அதிகம் பார்ப்பதில்லை. இப்போது சொன்னாரே, தேதி கேட்பதற்காக – பெற்ற தேதியை உறுதி செய்வதற்காக – அழைப்பிதழ் அச்சடிப்பதற்காக என்னை வந்து பார்த்ததாகச் சொன்னாரே, அப்படி அவசியமான நேரம் தவிர, மற்ற நேரங்களில் என்னை வந்து பார்ப்பதில்லை. பார்க்காவிட்டாலுங்கூட, என்னுடைய நினைப்பை அவர் நுகர்ந்து, அதன்படி நடக்கக் கூடியவர். என்ன செய்யவேண்டுமென்று நான் கருதுகிறேனோ, பேராசிரியர் கருதுகிறாரோ, தலைமை கருதுகிறதோ என்பதை எண்ணிப் பார்த்து அதன்படி நடக்கக்கூடிய ஒரு இளைஞர் அந்த இளைஞரின் கையிலே பள்ளிக் கல்வி இன்றைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

அத்தகைய நல்ல ஆர்வமும் துடிப்பும் மிக்க அந்த இளைஞர் இந்தக் கட்டடத்தை வெகு விரைவிலே முடித்து, நம்முடைய தம்பி துரைமுருகன், தம்பி பாலு போன்றவர்களுடைய துணையோடு இதை முடித்து, விரைவில் இந்தக் கட்டடத்தினுடைய திறப்பு விழாவிற்கு என்னை அவர் அழைப்பார் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கின்றது. அந்தத் திறப்பு விழா நிகழ்ச்சியிலே உங்களையெல்லாம் காணக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டும் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கையோடு இந்த இனிய விழாவிலே என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து உங்களிடமிருந்து விடைபெற்று உரையை நிறைவு செய்கிறேன்.

❖ ❖ ❖

அண்ணா 100



## மக்கள் தொகை


நம் நாட்டில் மக்கட் தொகைப் பெருக்கம் மிக வேகமாக நடந்து வருகிறது. நிபுணர் கணக்குப்படி நாம் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஆஸ்திரேலிய (நாட்டு ஜனத் தொகையை) நாட்டை உண்டு பண்ணி நம் நாட்டோடு சேர்த்து கொண்டிருக்கிறோம். இதைத் தடுத்தாக வேண்டும்.

# சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில் 100 ரூபாயில் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம்

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்தார்

**செ**ன்னை மாநகரில் 15.5.2006 அன்று நிலவரப்படி மொத்தமுள்ள 15,460 தெருக்களில் குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாமல் இருந்த 474 தெருக்களில் சுமார் 60 கிலோ மீட்டர் நீளத்திற்கு குடிநீர் குழாய்கள் 8.24 கோடி ரூபாய் செலவில் பதிக்கப்பட்டன. சென்னைக் குடிநீர் வாரியம் 2,924 கிலோ மீட்டர் நீளம் குடிநீர் வழங்கல் குழாய்களைப் பராமரித்து வருகிறது.

கழிவுநீரகற்று அமைப்புகள் இல்லாமல் இருந்த 198 தெருக்களில் சுமார் 17 கிலோ மீட்டர் நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் 3.14 கோடி ரூபாய் செலவில் பதிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன. தற்போது விரிவுபடுத்தப்பட்ட பகுதியில் உள்ள 268 தெருக்களுக்கும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதி செய்யப்பட்டு வருகின்றது.



சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவானது 540 மில்லியன் லிட்டரில் இருந்து 585 மில்லியன் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 90 லிட்டரிலிருந்து 108 லிட்டராக உயர்த்தப் பட்டுள்ளது.

இதன்மூலம், அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு மற்றும் கழிவுநீர் இணைப்பு பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது. தற்போது, குடிநீர் இணைப்புப் பெற, 1,000 சதுரஅடி வரையுள்ள குடியிருப்பு வீடுகளுக்கு ரூ.5,000மும், அதற்குமேல் உள்ள வீடுகளுக்கு ரூ.7,500மும் கட்டணம் செலுத்த வேண்டும். அதேபோல், கழிவுநீர் இணைப்புப் பெறவும் முறையே ரூ.5,000 மற்றும் ரூ.7,500 கட்டணம் செலுத்த வேண்டும்.

சென்னை நகரில் வீட்டு வரி செலுத்துவோரின் மொத்த எண்ணிக்கை 6,18,689. இதில், தற்போது 4,94,428 வீடுகளுக்கு கட்டணம் செலுத்தி குடிநீர் இணைப்பைப் பெற்றுள்ளனர். மீதமுள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வசதி பெற்றுக்கொள்ளவும், பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ளவர்களும் குடிநீர் இணைப்புப் பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அனுமதியுடன் உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது 500 சதுர அடி வரை உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பை சென்னைக் குடிநீர் வாரியத்திடமிருந்து 100 ரூபாய் மட்டும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. இவ்வாறு குடிநீர் இணைப்பை 100 ரூபாய்க்கு பெறுபவர்கள் 500 சதுரஅடி வரை உள்ள வீடுகளுக்கு கழிவுநீர் இணைப்பையும் 100 ரூபாய் செலுத்திப் பெற்றுக்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளவர்கள் என்று வட்டாட்சியரின் சான்றிதழ் தேவையில்லாமல், அந்தச் சிரமத்தை நீக்கி 500 சதுர அடி வரை பரப்பளவு உள்ள அனைத்து வீடுகளுக்கும் வருவாய்த்துறை சான்று இல்லாமலேயே 100 ரூபாய் கட்டணத்தில் குடிநீர் இணைப்பும் மற்றும் 100 ரூபாய் கட்டணத்தில் கழிவு நீர் இணைப்பும் பொருளாதார நிலையில் பின்தங்கியோர் பெற்றிட இந்த அரசு ஆவன செய்துள்ளது.

பின்தங்கிய பிரிவினர்களும் பயன்படும் வகையில் ரூ.100/- மட்டும் செலுத்தி குடிநீர் இணைப்பு வழங்க தமிழக அரசின் அறிவிப்பின்படி 'குடிநீர் இணைப்பு வழங்கும் விழா' 9.9.2008 அன்று சென்னை – பழையவண்ணை – போஜராஜன் நகரில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, குடிநீர் இணைப்பு வழங்குதலைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறைச் செயலாளர் திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப., சென்னைக் குடிநீர் வாரிய மேலாண் இயக்குநர் திரு.சுனீல் பாலீவால், இ.ஆ.ப., உள்பட பலரும் பங்கேற்றனர்.

இதன்மூலம், சுமார் 48,000 வீடுகளில் உள்ளவர்கள் குடிநீர் இணைப்பு மற்றும் கழிவுநீர் இணைப்புப் பெற்று பயனடைவார்கள்.

❖ ❖ ❖




## மனத்திலே

**ம**க்களை நல்லவர்களாக்க வேண்டுமானால் அவர்கள் மனத்திலே உள்ள மாசு, மத வெறி, சாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் அழிந்தாக வேண்டும்.

## நாகப்பட்டினம் மாவட்டத்தில்

# ரூ.150 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்து 1,500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.8.50 கோடி சுழல்நிதி மற்றும் கடனுதவிகளை

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்



**நா**கப்பட்டினத்தில் 1,500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கும் விழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா மற்றும் பல்வேறு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, மாவட்ட ஆட்சியர் திரு. மு. ஜெயராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 01.09.2008 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 1,500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் சுழல்நிதி வழங்கியும், ரூ.46.11 கோடி மதிப்பீட்டில் 4,041 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.104.29 கோடி மதிப்பீட்டில் 6,696 வளர்ச்சிப் பணிகளை துவக்கி வைத்தும் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை

**அண்ணா 100**



## ஆற்றல்மிக்க அடிப்படை

“**எ**ந் நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல், இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந்நாட்டினில் தொடராய் அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும். நன்று இது, தீது இது, நமதிது, பிறர் தந்ததிது, மரபு இது, மருள் இது என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும், ஆற்றல் மிக்க அடிப்படை எழுந்தபடி இருந்திட வேண்டும்”.



வழங்கி விழாப்பேருரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:—

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சார்பில் 26 கோடியே 74 இலட்சம் மதிப்பீட்டில் 220 பணிகளும் மற்றும் சுனாமி திட்டத்தின்கீழ் ரூ.6 கோடியே 78 இலட்சம் மதிப்பில் 257 பணிகளும், நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் 58 இலட்சம் மதிப்பில் 6 பணிகளும், வேளாண்மைத் துறையின் சார்பில் 23 இலட்சம் மதிப்பில் 7 உழவர் சந்தை அமைக்கும் பணிகளும், 34 கோடியே 31 இலட்சம் மதிப்பில் 490 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் 46 கோடியே 12 இலட்சம் மதிப்பில் 4,041 பணிகளும், சுனாமி திட்டப் பணிக்காக 46 கோடியே 59 இலட்சம் மதிப்பில் 2,573 பணிகளும், நகராட்சித் துறையின் சார்பில் ரூ.1 கோடியே 92 இலட்சம் மதிப்பில் 22 பணிகளும், தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக ரூ.3 கோடியே 28 இலட்சம் மதிப்பில் 2 பணிகளும், பொதுப்பணித்துறை மூலமாக ரூ.1கோடியே 79 இலட்சம் மதிப்பில் 4 பணிகளும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக ரூ.1 கோடியே 41 இலட்சம் மதிப்பில் 30 பணிகளும்,

1989ஆம் ஆண்டு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நாட்டிலேயே முதன்முதலாக தருமபுரி மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் தொடங்கப்பட்டது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2006 வரை மகளிர் மேம்பாட்டுக்கழகம் நகர்புறப் பகுதிகளில் அமைக்கப்பட்ட குழுக்களுக்கு சுழல்நிதி மானியம் வழங்கப்படவில்லை. வங்கிக்கடன் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் உள்ள குழுக்கள் தலா ரூ.10,000 மானியமாகப் பெறும் நிலையில் நகர்புறக் குழுக்களுக்கும் இந்த மானியத்தை வழங்கவேண்டும் என்று முடிவு செய்து 2006–07ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கையின்போது 5,000 நகர்புறக் குழுக்களுக்கும் சுழல்நிதி வழங்கப்படும் என்று முதன்முறையாக அறிவிக்கப்பட்டது.

30.06.2008 வரை இந்தியன் வங்கியால் இந்தியா முழுவதும் 2 இலட்சத்து 57 ஆயிரத்து 641 குழுக்களுக்கு ரூ.1,824 கோடி கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. அது தமிழகத்திற்கு மட்டும் 1 இலட்சத்து 46 ஆயிரத்து 855 குழுக்களுக்கு 1,058 கோடி ரூபாய் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழகத்திற்கு மட்டும் 50 சதவீதம் கிடைத்துள்ளது.

அண்ணா 100



## சித்தாந்தம்

தேள் கடிக்கு உடனே குணமளிக்கும் மூலிகை ஒன்று ஒருவருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அது இன்னது என்பதை மற்றவர்களுக்குச் சொல்ல மாட்டார். சொன்னால் மருந்து பலிக்காது என்பார்கள். நமக்குத் தெரிந்த வித்தையைப் பிறருக்குத் தெரிவிக்காமலேயே அழிந்துவிடச் செய்வது நம்மிடையே உள்ள சித்தாந்தம்!

தந்தை பெரியார் அவர்கள் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு கொடுக்க வேண்டுமென 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றினார். இத்தீர்மானத்தை 60 ஆண்டுகள் கழித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டமாக நிறைவேற்றி சரித்திரம் படைத்தார். அதுமட்டுமின்றி பெண்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அறிவித்தார். திருமண நிதி உதவித் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 42,787 பெண்களுக்கு ரூபாய் 64,57,45,000 வழங்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் மட்டும் 797 பெண்களுக்கு ரூபாய் 1.20 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 9,66,199 பெண்களுக்கு ரூ.475 கோடியும் வழங்கப் பட்டுள்ளது, இதில் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு மட்டும் 3,294 பெண்களுக்கு ரூபாய் 83,12,000 நிதி வழங்கப் பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டில் திருமணம் ஆகாத 50 வயதைக் கடந்த பெண்களுக்கும் நிதியுதவி வழங்க இந்த ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வனத்துறையின் சார்பில் ரூ.1 கோடியே 81 இலட்சம் மதிப்பில் 9 பணிகளும், கல்வித்துறையின் சார்பில் 1 கோடியே 16 இலட்சம் மதிப்பில் 14 பணிகளும், சுகாதாரப்பணிகள் மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பணியும் ஆக சுமார் 104 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 6 ஆயிரத்து 696 பணிகள் முடிக்கப்பட்டு இப்போது மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்விழாவில் 1,500 சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் பயன்பெறும் வண்ணம் அரசு மானியம் மற்றும் வங்கிக் கடனுடன் கூடிய சுழல்நிதியாக ரூபாய் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மானியமாகவும், கடன் தொகையாகவும் வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதைத் தவிர, பஞ்சாயத்து அளவிலான 16 குழுக் கூட்டமைப்புகளுக்கு ஆதாரத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் வழங்கப்பட உள்ளது, ஆக மொத்தம் இன்றைய விழாவில் 1,516 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 8 கோடியே 51 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் சுழல்நிதி மானியம் மற்றும் வங்கிக் கடன் வழங்கப்படுகிறது.

மேலும், சமூக நலத்துறையின் சார்பில் 89 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 500 பயனாளிகளுக்கும், பிற்பட்டோர் நலத்துறையின் மூலமாக 9 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 188 பயனாளிகளுக்கும் வழங்கப்படவுள்ளது. பால்வளத்துறை சார்பில் 13 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மூன்று பயனாளிகளுக்கும், ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறையின் சார்பில் 18 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 16 பயனாளிகளுக்கும் ஆக கூடுதல் 9 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் 2,223 பயனாளிகள் பயன்படும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்போதைய நிலவரப்படி 3 இலட்சத்து 67 ஆயிரத்து 416 குழுக்கள் உள்ளன. இதில் ஊரக சுயஉதவிக் குழுக்கள் 2 இலட்சத்து 59 ஆயிரத்து 666 உள்ளது என்றும் நகர்ப்புற சுயஉதவிக்குழுக்கள் 1 இலட்சத்து 7 ஆயிரத்து 750 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுக்களில் 59 இலட்சத்து 7 ஆயிரத்து 869 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுடைய மொத்த சேமிப்புத்தொகை ரூ.1,826 கோடி.

மகளிருக்கு ரூ.36.40 இலட்சம் நிதி வழங்கப் பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் 142 மகளிருக்கு ரூ.56,800 வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் விழாப்பேருரையாற்றியபோது தெரிவித்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. உ. மதிவாணன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். கே. வேதரத்தினம், திரு. எம். பன்னீர்செல்வம், திரு. க. அன்பழகன், திரு. எஸ். ராஜகுமார், திருமதி. பி. பத்மாவதி, ஒன்றியக் குழுத்தலைவர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

**– பொ. முத்தையா**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகப்பட்டினம்.

* * *

அண்ணா 100



## கற்றறிவாளர்கள்

**நா**ட்டில் கற்றறிவாளர்கள் எந்த அளவில் இருக்கின்றனரோ, அதைக் கொண்டுதான் நாட்டு முன்னேற்றத்தை மதிப்பிட இயலும்.

# "தகவல் தொடர்பு தொழில் நுட்பக் கொள்கை 2008"

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் மாநில தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழுவின் இரண்டாவது கூட்டம் 29.7.2008 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 'தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கொள்கை 2008'–ஐ வெளியிட்டார். பின்னர் தகவல் தொழில்நுட்ப முனைப்புக்குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். தகவல் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சி தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக இருப்பதாகக் குறிப்பிட்ட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதன் பலன்கள் கிராமப்புற மக்களுக்கும் சென்றடையும் வகையில் இத்தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னை மட்டுமல்லாது தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாகத் தங்கள் நிறுவனங்களை அமைத்து தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெருக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து, தகவல் தொழில்நுட்பத்துறையின் செயலர் திரு. ச. சந்திரமௌலி, இ.ஆ.ப. அவர்கள் தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையின் முக்கிய அம்சங்களை விளக்கினார். அவை பின்வருமாறு :–

புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2008–ன் தொலைநோக்கம் இந்தியாவில் தகவல் தொழில்நுட்ப உற்பத்தியில் (வன்பொருள் மற்றும் மென்பொருள்) 2011–ஆம் ஆண்டிற்குள் 25% பங்கை அடைவதுதான். இந்த இலக்கை அடைவதன் மூலம் தமிழகத்தில் 2011–ஆம் ஆண்டிற்குள் 30 இலட்சம் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுதான் இந்தக் கொள்கையின் நோக்கம்.

இந்தக் கொள்கையில் தமிழகத்தின் மனித வளத்தை மேம்படுத்த பல புதிய அம்சங்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. உயர் கல்விக்கான நிறுவனங்களை தமிழகத்தில் அமைத்து ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் இக்கொள்கையின் முக்கிய அம்சம் ஆகும். அதைப்போல, தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் தொழில் முனைவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில் சிறப்பம்சங்கள் இக்கொள்கையில் இடம்பெற்றுள்ளன.

❖ சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில், புதிய மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காக ரூ.250 கோடிக்கு மேல் முதலீடு செய்பவர்களுக்கு கட்டமைப்பு தொகுப்புதவி (Structured assistance) அளிக்கவும் இக்கொள்கையில் விரிவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖ சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் முதலீடு செய்யும் நிறுவனங்களுக்குச் சிறப்பு ஊக்கத்தொகையும் வழங்க முதல் முறையாக இக்கொள்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இத்துறை விரிவாக்கமடைந்து, இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் இக்கொள்கை அமைந்துள்ளது.

❖ இக்கொள்கையில் ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் நிறுவனங்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கவும், ஊனமுற்றோர் வேலைவாய்ப்புப்பெற சிறப்பு மென்பொருள் தயாரிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



இது தவிரவும், பல்வேறு சிறப்பு அம்சங்கள் இத்துறையை மேலும் வளர்ச்சியடையச் செய்யும் நோக்கத்துடன் புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2008–இல் கொண்டு வரப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் மாண்புமிகு மத்திய தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பவியல்துறை அமைச்சர் திரு. ஆ. இராசா, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., மத்திய–மாநில அரசு உயரதிகாரிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களைச் சார்ந்த தலைவர்கள் – பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். ❖

**அண்ணா 100**



## தோழமை

ஒற்றுமை–கூட்டுறவு–ஒப்பந்தம்–கூடிவாழ்தல் –நட்பு–அன்பு என்றுள்ள எத்தனையோ பதங்களும் ஒவ்வோர் அளவு வரை மட்டுமே செல்லக்கூடியவை. முழுத்திருப்தி தருபவை அல்ல–தோழமை என்ற நிலையை அடையும் படிக்கட்டுகள் இவை. ஆனால் தோழமை இவ்வளவுக்கு மேலான ஒரு நிலை பேதம் நீக்கிய நிலை அல்ல–பேதம், ஏற்படாத நிலை–ஏற்பட முடியாத நிலை.

## திருமணமாகாமல் 50 வயதைக் கடந்து வாழும் ஏழை மகளிர்க்கு மாதம் 400 ரூபாய் உதவித் தொகை வழங்கும் புதிய திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்



முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுவதைப்போல, குடும்பத்தில் வசதிவாய்ப்புகளின்றித் திருமணம் ஆகாமலேயே தனித்து வாழ்ந்து 50 வயது அடைந்த நிலையில், உழைத்துச் சம்பாதித்து வாழ்க்கை நடத்த இயலாத வறுமைச் சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஏழை எளிய மகளிர்க்கு மாதம் 400 ரூபாய் வீதம் உதவித்தொகை வழங்கப்படும் என சென்னையில் கடந்த 20.6.2008 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பினையொட்டி 1.7.2008 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, த்மிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் குடும்பத்தில் வாய்ப்பு வசதி அற்ற நிலையில் திருமணமாகாமலேயே 50 வயதடைந்து, உழைத்து வாழ்க்கை நடத்த இயலாத ஏழை மகளிரின் விவரங்கள் மாவட்ட ஆட்சியர்களால் தொகுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி உதவித்தொகை பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவர்களாக இதுவரை 9 ஆயிரத்து 100 ஏழை மகளிர் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 400 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கப்படுவதன் அடையாளமாக 15 ஏழை மகளிர்க்கு தமிழக அரசின் இந்தப் புதிய திட்டத்தின்கீழ் மாதம் 400 ரூபாய் வீதம் உதவித் தொகைகளை அளிப்பதற்கான ஆணைகளையும், 2008 ஜூலை மாத உதவித் தொகைக்குரிய காசோலைகளையும் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 31.7.2008 அன்று

அண்ணா 100



### அதிகாரிகளின் பணி

மக்களுடன் பழகிக் குறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்கும் வகையில் சர்க்கார் அதிகாரிகள் பணி ஆற்றினால் மாநிலத்தில் ஆள்கின்ற சர்க்காருக்குச் சிறப்பு வரும்.



வழங்கி திட்டத்தைத் தொடங்கிவைத்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆணைகளையும் உதவித் தொகைகளையும் பெற்ற 15 பெண்களின் விவரம் பின்வருமாறு :–

சென்னை மாநகர் புளியந்தோப்பு ஆ.ராணி, மு.சுகுணா, சாந்தோம் ச.லீமாரோஸ், மந்தைவெளிப் பாக்கம் கா. தவுலத்பேகம், பழைய வண்ணாரப்பேட்டை அ.மெகருன்னிசா.

திருவள்ளூர் மாவட்டம் தொழுவூர்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த அ.தாட்சாயணி, பா.செல்லம்மாள், பொ.தனம்மாள், சொராஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த கி.பிரேமா, ஆவடியைச் சேர்ந்த ர.லலிதா,

கன்னியாகுமரி மாவட்டம் கோட்டாறு கிராமத்தைச் சேர்ந்த பொ.சகுந்தலா, நாகர்கோவில் செ.உமையம்மாள், ஏ.வசந்தா, பூதப்பாண்டியைச் சேர்ந்த சா. அழகம்மை, பூ. சிதம்பரவடிவு ஆகியோராவர்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. எஸ்.எஸ். பழனிமாணிக்கம், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா.வீராசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, சமூகநலத்துறை முதன்மைச் செயலாளர் திரு. என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., வருவாய்த்துறைச் செயலாளர் திரு. அம்புஜ் சர்மா, இ.ஆ.ப., வருவாய் நிருவாகச் சிறப்பு ஆணையர் திரு. சக்திகாந்ததாஸ், இ.ஆ.ப., சமூகநலத்துறை ஆணையர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., வருவாய் நிருவாகக் கூடுதல் ஆணையர் திரு. து. இராஜேந்திரன், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

★ ★ ★

அண்ணா 100

## எழுத்துப் பிழை



எங்கள் எண்ணத்தில் பிழை இருக்கிறதா என்று பாருங்கள்; அதை விட்டுவிட்டு எழுத்தில் பிழை இருக்கிறதா என்று தேடிப் பார்க்காதீர்கள்.

ஏழைகள் வாழவேண்டும்; எரியாத குடிசை வேண்டும்; வயிறார உணவு, மானமாரத் துணி; அறிவாரக் கல்வி இவைகளைத் தரவேண்டும்; உழைப்பதற்கு வாய்ப்பும்; உழைப்பதற்கேற்ற ஊதியமும் வேண்டும் என்று எண்ணுகின்ற எங்கள் எண்ணத்தில் என்ன குறை காணுகின்றீர்கள்?

குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்டுங்கள்; குறைகளைக் களைகிறோம்!

## மத்திய அரசின் சுயவேலைவாய்ப்புத் திட்ட நிதியுதவி பெற ஊனமுற்றோர் செலுத்த வேண்டிய 5 சதவீதப் பங்குத் தொகையை தமிழக அரசே ஏற்கிறது! அனைத்துவகை ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை!

### மாவட்டந்தோறும் தங்கும் விடுதியுடன் தொழிற் பயிற்சி நிலையங்கள்!

### ஊனமுற்றோர் மேம்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை!



தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் கடந்த 19.8.2008 அன்று ஊனமுற்றோர் மேம்பாட்டிற்காக நேரில் அளித்த கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து, அவற்றுள் பெரும்பாலான கோரிக்கைகளை உடனடியாக ஏற்று, விரைவில் அரசாணைகள் வெளியிடப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, அண்மையில் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட பாரதப் பிரதமரின் ஊனமுற்றோருக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், மத்திய அரசின் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற்று சுயவேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு வசதியாக, அத்திட்டத்தில் ஊனமுற்றோர் செலுத்த வேண்டிய 5 சதவீதப் பங்குத் தொகையினைத் (Own Contribution) தமிழக அரசே ஏற்குமென்றும்;

பார்வையற்றோருக்கு வழங்கப்படுவது போன்றே, அனைத்து வகை ஊனமுற்றோருக்கும், வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை வழங்கப் படுமென்றும்;

ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்புப் பெறும் தகுதியை மேம்படுத்தும் வகையில்,

மூன்றாண்டுகளில் மாவட்டந்தோறும் தங்கும் விடுதிகளுடன் கூடிய தொழிற் பயிற்சி நிலையங்கள் அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தொடங்கப்படுமென்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 22.8.2008 அன்று ஆணையிட்டுள்ளார்.

❖ ❖ ❖




### மனித மனம்

மனிதனின் மனம் எல்லா உலகங்களையும் விடப் பெரியது!

அந்த இதயம் பண்புக்கேற்றபடி பெரிதாகத்தக்கது, நினைப்புக் கேற்றபடி குறுகத்தக்கது. ஆகவே, அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும்.

# மாணவர்கள் பொறியாளர்களாக, மேதைகளாக, அறிஞர் பெருமக்களாக, எதிர்காலச் சிற்பிகளாக வரவேண்டும்

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 01.09.2008 அன்று நடைபெற்ற
ஐம்பெரும் திட்டங்களின் தொடக்க விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை

**ந**ம்முடைய மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அவர்கள் பசு மாட்டை, தென்னை மரத்திலே கட்டி விட்டுப் போயிருக்கிறார். அந்த மாட்டிலே பால் கறப்பதா? அல்லது அவிழ்த்து விடுவதா? என்ற இந்தக் கேள்விகளுக்குப் பதில் வேண்டிய நிகழ்ச்சியும் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்கிற மாணவத் தம்பிமார்களும் தென்பட்ட காரணத்தால், உங்களையெல்லாம் மதிக்கவேண்டும்,




காணுகின்ற முறையில் உங்கள் முன்னால் நான் அமர்ந்திருக்கின்றேன்.

அவரே தன்னுடைய உரையில் குறிப்பிட்டதைப்போல் கடந்த இரண்டு நாட்களாக உடல் நிலை பெரிதும் பாதிக்கப்பட்டு இந்த நிகழ்ச்சிக்கு வர இயலுமா என்பது கேள்விக்குறியாகி, மருத்துவப் பெருமக்களும் இரண்டு நாள் ஓய்வெடுத்துக்கொள்வது நல்லது என்று அழுத்தந்திருத்தமாக அறிவுறுத்திய பிறகும் என் கண்ணெதிரே அண்ணா பல்கலைக்கழகமும், நடைபெற உங்களிடத்திலே காட்டுகின்ற அன்பு போலியானதல்ல, அது உண்மையானது என்பதை நிலைநாட்டுகின்ற வகையில் இந்த ஆறு விழாக்களை இணைத்து நடத்துகின்ற பெருவிழாவில் நான் கலந்துகொள்கிற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன்.

இப்போதும் என்னுடைய குரல் வளம் ஒத்துழைப்பதாக இல்லை. இருந்தாலும்

அண்ணா 100



## மாற்றம்

**கா**லம் மாறக்கூடியது. மாறிக் கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

முடிந்த வரையில் என்னுடைய பேச்சில் சில கருத்துகளை உங்கள் முன்னால் வைக்கலாமென்று நான் கருதுகின்றேன்.

இங்கே உரையாற்றியவர்கள் என்னை "துரோணர்" என்றும், "பீஷ்மர்" என்றும் வர்ணித்து அவர்களுடைய கோபத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றார்கள். ஏனென்றால் நான் பீஷ்மரை மதிப்பவன்தான். ஆனால் அவருடைய செயல், அவர் யாருக்காக தன்னை ஒப்படைத்துக் கொண்டிருந்தாரோ அவர்களுக்கு இறுதிக் காலத்திலே பயன்படவில்லை– மகாபாரதத்திலே வருவதைப்போல–கடைசிவரையில் பாண்டவர்களுக்காக வாதாடிக் கொண்டிருந்த பீஷ்மர், இறுதிக்கட்டத்திலே துரியோதனர்களுக்காக வாதாடி அவர்களுக்காக களத்திலே அடிபட்டு, அம்புப் படுக்கையில் படுக்க வைக்கப்பட்டு, போர் முடிகின்ற நாள் வரையிலே உயிரோடு இருந்து பிறகு மாண்டார் என்பது பீஷ்மருடைய கதை. இது இறுதிக் காலத்துக் கதை. அவருடைய தொடக்க காலத்துக் கதையை நான் படித்திருக்கிறேன், சொல்ல விரும்பவில்லை. அதை நீங்கள் நம்முடைய ஆசிரியர் வீரமணி அவர்களிடத்திலே முடிந்தால் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இயன்றால் படித்துத் தெரிந்துகொள்ளலாம். எனவேதான் என்னை இவ்வளவு பெரிய விழாவிற்கு அழைத்து ஏன் திட்டினார்கள் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

அதைப் போலத்தான் "துரோணர்". துரோணர் என்ற பெயரை எனக்குச் சூட்டியபோது நான் விரும்பாததற்குக் காரணம் – நான் வருத்தப்படுவதற்கே காரணம், இது கல்வி நிலையம். இங்கே இருக்கின்ற மாணவர்கள் கல்வி கற்க விரும்புகின்றவர்கள், பொறியாளர்களாக, மேதைகளாக, அறிஞர் பெருமக்களாக, எதிர்காலச் சிற்பிகளாக வரவேண்டும் என்பதற்காக அண்ணா பல்கலைக் கழகத்திலே உங்களை ஒப்படைத்துக் கொண்டு, இங்கேயுள்ள ஆசிரியப் பெருமக்கள், துணை வேந்தர்கள் இவர்களுடைய துணையோடும், உதவியோடும் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாக ஆகவேண்டும் என்ற எண்ணத்தோடு வந்திருப்பவர்கள். அப்படி வந்திருக்கின்ற உங்களுடைய நம்பிக்கையை குலைப்பதைப்போல துரோணர் என்று சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் துரோணர் காலத்திலேயே அடித்தட்டு மக்களுக்குச் சாதியின் பெயரால், வகுப்பின் பெயரால், மதத்தின் பெயரால் உயர் குலம், கீழ்க்குலம் என்ற பேதங்களின் பெயரால் கல்வி மறுக்கப்பட்ட காலம், துரோணருடைய காலம். அப்படி கல்வி மறுக்கப்பட்ட காரணத்தினால்தான் வில் வித்தை கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஏகலைவன் துரோணரிடம் சென்று கேட்ட போது, நீ வேடர் குலம், இழிகுலம், கீழ்க் குலம், கீழ்ச் சாதி, உனக்கு நான் வில் வித்தை கற்றுத்தரமாட்டேன் என்று துரோணர் சொல்லிவிட – அப்படியானால் பரவாயில்லை, நான் உங்களைப்போல ஒரு சிலை செய்து வைத்து, அதன் முன்னால் நின்று வித்தையைக் கற்றுக்கொள்கிறேன் என்று சொல்லி, அவருடைய சிலைக்கு முன்னால் நின்று அரும்பாடுபட்டு வில் வித்தையைக் கற்றுக் கொண்டு, துரோணரிடத்திலேயே வந்து தான் கற்ற வித்தை சரிதானா என்று கேட்டான். துரோணர் ஆச்சரியத்தால் அகல விழிகளை விழித்து, அப்படியா, கற்றுக்கொண்டாயா, எங்கே பார்க்கலாம் என்று குறி தவறாமல் உன்னுடைய அம்பு பாய்கிறதா பார்ப்போம்





என்று பரிட்சை வைக்க, அவ்வாறே ஏகலைவன் துரோணர் காட்டிய குறியை – அவர் காட்டிய அடையாளத்தின் மீது சரியாக அம்பு எய்து வீழ்த்த – இது என்னைப்போல சிலை செய்து வைத்து நீ இந்த வித்தையைக் கற்றுக் கொண்டிருந்தாலும், நீ எனக்குத் தர வேண்டிய குரு காணிக்கையை தந்தே ஆகவேண்டும் என்று துரோணர் கேட்டார். என்ன காணிக்கை வேண்டுமானாலும் கேளுங்கள் தருகிறேன் என்றான். ஒன்றும் பெரிதல்ல, உன்னுடைய கட்டை விரலை எனக்கு காணிக்கையாகக் கொடு என்று துரோணர் கேட்க, அவனும் ஆசிரியர் கேட்கிறாரே, அதை மறுக்கக் கூடாதே என்று கட்டை விரலை வெட்டி காணிக்கையாகத் தந்துவிடுகிறான்.

கட்டை விரலை எதற்காகக் கேட்டார் என்ற சூட்சுமம் மறுபடியும் அவன் அந்த வில்லைக் கையிலே எடுத்தபோதுதான் அவனுக்குத் தெரிந்தது. கட்டை விரல் இல்லாமல் வில்லிலே அம்பை வைத்துக் குறிபார்க்க முடியாது. அவனால் அந்த வில்லைப் பயன்படுத்த முடியாது. தன்னிடத்திலே– உயர்குலத்தைச் சேர்ந்த தன்னிடத்திலே ஒரு தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த ஏகலைவன் வித்தை கற்றுக்கொண்டு, அதைப் பயன்படுத்தக்கூடாது என்ற அந்த மதவெறியின் காரணமாக – சாதி வெறியின் காரணமாக – ஆதிக்க வெறியின் காரணமாக அன்றைக்கே ஏகலைவன் என்ற வேடச் சிறுவனுக்கு அந்த வித்தை மறுக்கப்பட்டது, கல்வி மறுக்கப்பட்டது.

அப்படி கல்வி மறுக்கப்பட்ட பெரிய சமுதாயத்திலே இருந்து வந்த மாணவ சிங்கங்கள்தான் – மாணவ தங்கங்கள்தான் என் எதிரே இன்று வீற்றிருக்கின்ற காட்சியை நான் காணுகின்றேன். அன்றைக்கு ஒருவனுக்கு கல்வி இல்லை, வித்தையில்லை என்று சாதியின் பெயரால் விரட்டியடிக்கப்பட்ட அந்தக் காலத்தையும், இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் அண்ணா பெயரால் அமைந்துள்ள இந்தப் பல்கலைக்கழகத்திலே திரண்டிருக்கின்ற காட்சியையும் அண்ணாவின் தம்பியாகிய நான் இன்று காணும்போது – ஆனந்தம் கொள்ளுகிறேன், அக மகிழ்வு கொள்ளுகிறேன்.

இதற்கு என்ன காரணம் என்று நான் எண்ணிப் பார்க்கின்றேன். அன்றைக்குக் கல்வி தமிழகத்தில்

அண்ணா 100



## பெண் கல்வி வேண்டும்

பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும்போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அனுபவரீதியாகச் சொல்ல வேண்டுமேயானால் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் ஆடு மேய்க்கின்ற சிறுவனையும், மாடு மேய்க்கின்ற சிறுவனையும் வழியிலே கண்டு, அவன் எப்படி முன்னேறுவான் என்று யோசித்து, அவனை அழைத்துப் பேசி, அவனுடைய குடும்ப நிலை என்ன, அவன் பட்டினி கிடந்துதான் படிக்க வேண்டுமென்பதை உணர்ந்து அவனுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்து, அவனைப் படிக்க வைத்து, அன்றையதினம் அவனைக் கல்வியாளனாக ஆக்குவதற்கு அரும்பாடுபட்டார். தம்பி பொன்முடி இங்கே எடுத்துச் சொன்னதைப்போல் பெருந்தலைவர் காமராசர் கிராமப்புற மக்களுக்கு படிப்பு வேண்டும், கல்வி வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார். அதுதான் ஆரம்பக் கட்டம். இப்போது உயர்கல்வி தந்துவிட்டோம், கடந்த ஆண்டு 50 ஆயிரம், இந்த ஆண்டு இலட்சம் பேர் என்று பெருமை பேசினாலுங்கூட, உரிய கல்வி இல்லாத கஷ்டத்தையும் – உயர் கல்வி கிடைத்திருக்கின்ற இந்த மகிழ்ச்சியையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு உயர்கல்வி பெற்றுத் திளைக்கின்ற மாணவர்கள், ஒரு காலத்திலே உரிய கல்விகூடக் கிடைப்பதற்குத் தடுக்கப்பட்டார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. அந்த உரிய கல்வி கிடைக்காமல், அவர்கள் வேதனைப்பட்ட நேரத்திலேதான் – அந்த உரிய கல்வியைப் பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்குத் தரவழி வகுத்தார். அவர் வகுத்த வழி நின்றுதான் இன்றைக்கு நாங்கள் – உரிய கல்வி பெற்றாயா, அடுத்து உயர் கல்வியையும் பெற்றுக்கொள் என்று இன்றைக்கு அவர்களுக்கு உயர் கல்வி தருகின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்தக் காட்சியைத்தான் கண்கொள்ளாக் காட்சியாக என் எதிரே நான் பார்க்கிறேன். இந்தக் காட்சி வளருமேயானால், இந்தக் காட்சி பெருகுமேயானால், இந்தத் தொகை பெருகுமேயானால், இந்த மாணவர்கள் இன்னும் வளருவார்களேயானால் எதிர்காலத் தமிழகத்தை, பூங்காவனமாக, பூந்தோட்டமாக நிச்சயமாக ஆக்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அந்த நம்பிக்கையோடு இன்றைக்கு ஐந்து அம்சங்கள் கொண்ட இந்தப் பெருவிழாவிலே என்னுடைய வாழ்த்துக்களை துணைவேந்தர் அவர்களுக்கும், ஏனைய துணை வேந்தர்களுக்கும் இங்கே வருகை தந்துள்ள மாணவக் கண்மணிகளுக்கும் வழங்கி இந்த அளவிற்கு மேல் என்னுடைய குரல் ஒத்துழைக்காது. இன்றைக்கு நான் பிடிவாதமாகப் பேசிவிட்டாலும் நாளைய தினம், அதற்கு மறுநாள் என்னால் அலுவல்களையே பார்க்க முடியாத அளவிற்கு ஆகிவிடக்கூடும். அது உங்களுக்கு நஷ்டமோ இல்லையோ எனக்கு நஷ்டம். எனக்கு நஷ்டம் என்றால், என்னுடைய செயல்களுக்கு நஷ்டம். என்னுடைய செயல்களுக்கு நஷ்டம் என்றால் ஏழைகளை கைதூக்கிவிட ஏழைகளுக்கு கல்விதர– ஏழைகளின் பசிபோக்க நான் எடுத்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை ஆகிவிடும், ஆகவே அந்த முட்டுக்கட்டை அகல நீங்கள் எனக்கு மன்னிப்பை அளித்து, இந்த விழாவிலே இந்த அளவிலே விடை கொடுக்க வேண்டுமென்று மாணவச் செல்வங்களே, உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

அண்ணா 100

## நிலையும் நினைப்பும்



**தி**ருட்டுத்தனமாகக் கனி தேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படியிருக்கும்? எந்த அளவுக்கு அவன் நிலை உயர்ந்திருக்கிறதோ, அந்த அளவுக்கு அவன் நினைப்பு தாழ்ந்திருக்கும்!

முதலில் கனி பறித்து, பிறகு அவசர அவசரமாகத் தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்து விடுவானோ, வந்துவிட்டால் என்ன செய்வானோ என்ற பயத்தில் செங்காய்களைப் பறித்து, அதன் பின் காய்களையும் பறிப்பான். கனி பறிக்கையில் அவனது பாரத்தால் மரம் குலுங்கும் பொழுதெல்லாம் அவன் மனம் பயத்தால் குலுங்கும்! அடிக்கடி தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்தால், எப்படிக் குதித்து எங்கு ஓடுவது என்று நினைப்பான். அவன் இருப்பது மரத்தின் உச்சியில்; ஆனால் அவன் மனம் இருப்பது தரையில்!

# தமிழக மீனவ மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட நவீன தொழில்நுட்பத்துடன் மீனவ தொழில்நுட்ப மற்றும் பயிற்சி நிலையத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள்
முன்னிலையில்
தமிழக அரசு டாடா நிறுவனத்துடன்
புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## பயிற்சி நிலையத்திற்கு முதற்கட்டமாக ஒரு கோடி ரூபாய் நிதியுதவி

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு உலகத் தரம் வாய்ந்த பயிற்சி நிலையம் ஒன்றினை நிறுவி அதன்மூலம் மீன்பிடிப்பதற்கு மாற்று வழிமுறைகளில் மீனவ சமுதாய மக்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது என ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து 2008–2009ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், "தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதிலும், மீன்களைச் சேதமின்றிப் பதப்படுத்தி விற்பதிலும், நவீன உத்திகளைக் கடைப்பிடித்து அதிக வருவாய் ஈட்டிட வழிவகுக்கும் நோக்கத்தோடு, வெளிநாடுகளில் உள்ளதுபோல, கடலில் கூண்டுகளில் மீன் வளர்த்தல், நண்டு வளர்ப்பு ஆகியவற்றில் தமிழக மீனவர்கள் ஈடுபடவும்; கடல் பாசி வளர்த்தல் மற்றும் மீன் பொருட்களை நல்ல முறையில் பதப்படுத்துதல்" ஆகியவற்றை மீனவப் பெண்கள் மேற்கொள்ளவும், தேவையான நவீன தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சிகளை அளிப்பதற்கான "நவீன மீன்பிடி தொழில்நுட்பப் பயிற்சி மையம்" ஒன்றை அமைத்திட இந்த அரசு கருதியுள்ளது.

சுனாமி நிவாரணப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்ட டாடா போன்ற பெரும் தொழில் நிறுவனங்கள், எந்தவித ஆதாயமும் எதிர்பாராமல் தங்களின் சமூகப் பொறுப்பின் மற்றுமொரு அடையாளமாக இதற்கு உதவ முன்வந்துள்ளன. அத்தகைய உதவிகளைப் பெற்று, இந்தச் சிறப்புப் பயிற்சி மையத்தை அரசு அமைக்கும். இதற்கான அரசின் முதல்கட்ட உதவியாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக "மீனவ தொழில்நுட்பப் பயிற்சி நிலையம்–ஃபிட் (The Fisheries Institute of Technology and Training-FITT)" என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டு, 18.7.2008 அன்று தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சங்கத்தில் மத்திய, மாநில அரசு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மீன் உற்பத்தித் தொழில் முனைவோர்உறுப்பினர்களாகச் செயல்படுவர்.

நிலையத்தை அமைத்திட காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், முட்டுக்காடு கிராமத்தில் 1.16 எக்டேர் நிலத்தினை தமிழக அரசு இலவசமாக வழங்கியுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தினை அமைத்துச் செயல்படுத்தும் திட்டத்திற்கு இலாபநோக்கம் எதுவுமின்றி தொழில்நுட்ப உதவி முதலான அனைத்துவகை உதவிகளையும் நல்குவதற்கு டாடா குழுமம் முன்வந்துள்ளது.

டாடா குழுமத்தின் முழு ஒத்துழைப்புடன் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில்

அண்ணா 100



### திட்டமிட்டுச் செயலாற்றினால்

நம் நாடு வெப்பமுள்ள நாடு! இவ்வளவு வெப்பத்தையும் தாங்கிக்கொண்டு வேர்வை ஆறாகப் பெருகியோட உழைப்பவர்கள் இங்கு இருக்கிறார்கள்– இயற்கை வளத்தைப் பயன்படுத்தி, தொழில் திறனை உண்டாக்குபவர்கள் – தொழிற்சாலையை நடத்துபவர்கள் இருக்கிறார்கள்.

திட்டமிட்டுச் செயலாற்றினால் 15 ஆண்டுகளில் ஜப்பான் நாட்டைவிடச் சிறப்பாக நம் நாடு திகழும் என்பதில் ஐயப்பட வேண்டாம்.



ஃபிட் சங்கம் தமிழ்நாடு அரசு, மீன்துறை, டாடா நிறுவனம் ஆகியவற்றுக்கும், பயனாளிகளுக்கும் இடையில் ஒருங்கிணைப்பு நிறுவனமாகச் செயல்படும்.

இச்சங்கம், மீன் இறங்கு தளங்கள், மீன்பிடித் துறை முகங்கள், மீன் பதப்படுத்தும் நிலையங்கள் ஆகியவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளை நன்கு பயன்படுத்தவும், உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு நிதியினைப் பெற்றுத் தரவும் வழிவகை செய்கிறது.

முட்டுக்காடு கிராமத்தில் பயிற்சி நிலைய மாநில தலைமையகத்திற்குத் தகுதியான நிலத்தினை தேவையான அளவில் இலவசமாக வழங்கியும், கடலோர மாவட்டங்களில் சங்கத்தால் அடையாளம் காட்டப்படும் இடங்களில் மையங்களை நிறுவிட ஏற்பாடு செய்வதுடன், இந்தப் பயிற்சி நிலையம் சிறப்பாக இயங்கத் தேவையான நிதியுதவிகளையும் தமிழக அரசு வழங்கும்.

2.9.2008 அன்று நடைபெற்றது. இவ்வொப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் மீன்வளத்துறையின் முதன்மைச் செயலாளர் செல்வி லீனா நாயர், இ.ஆ.ப., அவர்களும், டாடா நிறுவனத்தின் சார்பாக திரு. கிருஷ்ணகுமார் அவர்களும் கையெழுத்திட்டனர்.

இத்திட்டத்தின் தொழில்நுட்பப் பங்களிப்பாளரான டாடா நிறுவனம் மீன்பிடித்தல், மீன் பதப்படுத்துதல், கடல்மீன் வளர்ப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றின்செயலாக்கச் செயல்பாடுகள் குறித்து இந்திய மற்றும் வெளிநாட்டுத்தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியோடு விரிவாக ஆய்வு செய்து திட்டத்தை வடிவமைக்கும்; ஃபிட் சங்கத்தின் செயல்திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும்; வலைக்கூண்டுகளை அண்மைக்கடல் பகுதிகளில் நிறுவி மீன் உற்பத்தியினை அதிகரிக்கவும், அதற்கான மீன் குஞ்சுகளைப் பொறிப்பகங்கள் மூலம் உற்பத்தி செய்தல், மீன் வளர்ப்பிற்கான மீன் உணவு தயாரித்தல், மீன் பதப்படுத்துதல் மற்றும் மீன் விற்பனை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

இத்திட்டத்தின் முதல் ஆறு மாத காலத்தில் அலுவலகக் கட்டட வாடகை; ஊர்தி மற்றும் சில்லறைச் செலவினங்கள்; இந்திய மற்றும் வெளிநாட்டு வல்லுநர்களிடமிருந்து தொழில்நுட்பங்களைப் பெறுவதற்கான செலவினங்கள்; இந்திய வல்லுநர்கள் வெளிநாடுகளில் மேற்கொள்ளும் பயிற்சிகளுக்கான செலவினங்கள் ஆகியவற்றை டாடா நிறுவனம் மேற்கொள்ளும்.


இத்திட்டத்தின் மூலம் டாடா நிறுவனம் உருவாக்கும் சொத்துக்கள், திட்டம் செயல்படுத்தப்படும்போது தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்கப்படும்.

தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக் கழகம், மீன்வளக் கல்லூரி, தூத்துக்குடி, வனத்துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், இந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத் தலைவர் டாக்டர் சக்திவேல் ஆகியோர் அடங்கிய குழு இந்தப் பயிற்சி நிலையத்தின் மூலம் வழங்கப்படும் பயிற்சித் திட்டங்கள் குறித்து முடிவு செய்யும்.

இந்த மீனவ தொழில்நுட்ப மற்றும் பயிற்சி நிலையத்தின் ஆரம்பகட்ட வளர்ச்சிப் பணிக்குரிய செலவினங்களை மேற்கொள்வதற்காக இந்த ஆண்டின் நிதிநிலைஅறிக்கையில் அறிவித்ததற்கேற்ப, முதற்கட்ட உதவி நிதியாக ஒரு கோடி ரூபாய்க்குரிய காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் இச்சங்கத்தின் கௌரவத் தலைவர் மற்றும் மீன்வளத் துறையின் முதன்மைச் செயலாளர் செல்வி லீனா நாயரிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி, திருமதி. கனிமொழி, எம்.பி., தலைமைச் செயலாளர் திரு. ஸ்ரீபதி, இ.ஆ.ப, நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., மீன்வளத்துறை ஆணையர் திரு. சம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ❖

அண்ணா 100



## பழக்கம்

எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி, அது இந்தக் காலத்திற்குப் பொருந்துகிறதா, வாழ்க்கைக்குத் தேவையானதுதானா, அறிவுக்கு ஏற்றதா என்றுதான் நாம் பின்பற்ற வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு எதையும் அர்த்தமற்றும் பொருத்தமல்லாமலும் பின்பற்றக்கூடாது.

# பள்ளிச் சிறார்கள் இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டத்தின்கீழ் அறுவைச் சிகிச்சை பெற்று குணம் அடைந்த பள்ளிச் சிறுவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வாழ்த்து



வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை நோயாளிகள், உயிர் காக்கும் அறுவைச் சிகிச்சைகளான இருதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, இடுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை, தண்டுவட அறுவைச் சிகிச்சை போன்ற அறுவைச் சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் செய்துகொள்ள தமிழ்நாடு மாநில நோயாளர் சங்க நிதியிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலமாக தலா 25 ஆயிரம் ரூபாய் நிதிஉதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 5 ஆயிரத்து 248 ஏழை நோயாளிகளுக்கு 13 கோடியே 55 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 2007 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 அன்று சுதந்திர தின விழா உரையில், ஏழை–எளிய குடும்பங்களைச் சார்ந்த சிறார்களை இருதய நோய்களிலிருந்து காத்திட, அவர்கள் தனியார் மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால், மூடிய இருதய அறுவைச் சிகிச்சைக்கு 10 ஆயிரம் ரூபாயும், சாதாரண திறந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு 30 ஆயிரம் ரூபாயும், கடினமான திறந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு 70 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கி ஏழை–எளிய குடும்பங்களைக் காத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது என்ற ஓர் அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

### 162 பள்ளிச் சிறார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது

அத்திட்டத்தின்படி, அரசு மருத்துவமனைகளில் இருதய அறுவைச் சிகிச்சைக்குப் பதிவு செய்து





## பாராட்டு!

பாராட்டுதல் என்பது ஜனநாயகத்திலே சாதாரணம்தான். ஆனால், அது அளவிற்கு அதிகமாகப் போய்விட்டால் ஆபத்து!

கொண்டுள்ள ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்கு, 17 தனியார் மருத்துவமனைகளின் மூலம் இருதய அறுவைச் சிகிச்சை செய்திடும் இளம் சிறார்கள் இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 21.11.2007 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக இதுவரை 294 சிறார்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஏறத்தாழ சுமார் 100 குழந்தைகள் அறுவைச் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 85ஆவது பிறந்த நாளான 3.6.2008ஆம் நாளன்று, பள்ளிச் சிறார்கள் இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டம் என்ற ஒரு சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த திட்டத்தின்கீழ், ஜுன் மாதம் முடிய சிறப்பு மருத்துவர்கள் அடங்கிய மருத்துவக் குழு பள்ளிகளுக்குச் சென்று சோதனைகள் நடத்தி 9 ஆயிரத்து 986 பள்ளி மாணவர்கள் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள விவரம் கண்டறிந்து, அவர்களில் 2 ஆயிரத்து 396 பள்ளி மாணவர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சை தேவை என பரிந்துரை செய்தது. இச்சிறார்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட 17 தனியார் மருத்துவமனைகளில் இருதய அறுவைச் சிகிச்சை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதுவரை 162 பள்ளிச் சிறார்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய பள்ளிச் சிறார்களுக்கும் இருதய அறுவைச் சிகிச்சை செய்ய தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**ஏழைக் குழந்தைகளின்**
**உயிர்காக்கும் மகத்தான திட்டம்**

பள்ளிகளில் பயிலும் ஏழைக் குழந்தைகளின் உயிர்காத்திடும் இந்த மகத்தான திட்டத்தை செயல்படுத்தப்படுவதில் திண்டுக்கல் மாவட்டம் இதுவரை 30 இளம் சிறார்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்து முன்னோடியாக விளங்குகிறது.

ஏழைச் சிறார்களுக்கான இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டம் மற்றும் பள்ளிச் சிறார்களுக்கான இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் மூலமாக இதுவரை 456 இளம் சிறார்களுக்கு இருதய அறுவைச் சிசிச்சைகள் வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் முன்னோடியாக விளங்கும் திண்டுக்கல் மாவட்டத்தில் இருதய அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட பள்ளிச் சிறார்களில் 11 பேர் தங்கள் பெற்றோருடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை தலைமைச் செயலகத்தில் 18.8.2008 அன்று சந்தித்து மகிழ்ச்சியுடன் தங்களது நன்றியைத் தெரிவித்தனர். அப்பொழுது இருதய மருத்துவச் சிகிச்சை செய்துகொண்டு குணம் அடைந்துள்ள சிறார்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி,இ.ஆ.ப., (ஓய்வு), தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆர். வாசுகி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., பொது சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர். இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தனர்.

❖ ❖ ❖


அண்ணா 100



## ஜனநாயகம்

“அரசாங்கம் என்பது வீடு – ஆளும் கட்சி அதை வாடகைக்கு எடுத்துக்கொள்கிறது; மக்களின் நல்லெண்ணம்தான் வாடகைப் பணம். ஜனநாயக உணர்வு அதை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கணக்குப் பார்க்கிறது”.

காலத்திற்கேற்ற கருத்து எது தேவை என்பதை அறிவிக்க வேண்டும். அதற்குத் தேவை துணிவு. அந்தத் துணிவு–தெளிவின் அடிப்படையில் பிறக்க வேண்டும். அந்தத் தெளிவுடைய கருத்தும் கனிவோடு எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.





டாக்டர் **இராதாகிருஷ்ணன்**

ஆசிரியராகப் பணி தொடங்கி, நம் இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவராக விளங்கி உலகப் புகழ் குவித்த தத்துவமேதை டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த செப்டம்பர் 5ஆம் நாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஆசிரியப் பெருமக்களின் நல்வாழ்வு கருதி உயர்கல்விக்கு ஊக்க ஊதியம்; 10 ஆண்டு பணி முடித்தால் தேர்வுநிலை ஊதியம்; 20 ஆண்டு பணி முடித்தால் சிறப்பு நிலை ஊதியம்; தமிழாசிரியர்களிடையே இருநிலை நீக்கம்; தமிழாசிரியர்களின் 'புலவர்' பட்டம், 'பி.லிட்' பட்டமாக மாற்றம்; தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்ட நல்லாசிரியர் விருதுகளை, உயர்நிலைப்பள்ளி, ஆங்கிலோ இந்தியன் பள்ளி உள்ளிட்ட பிற பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் வழங்கிட ஆணைகள்; நல்லாசிரியர் விருது– 'டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது' எனப் பெயர் மாற்றம்; விருதுத் தொகை 1,000 ரூபாயை, 1997இல் 2,000 ரூபாய் என்றும், 2006இல் 5,000 ரூபாய் என்றும் உயர்த்தியமை; மத்திய அரசு ஊழியர்களுக்கு நிகரான ஊதிய உயர்வுகள், அகவிலைப்படிகள் உட்பட அரசு ஊழியர்களுக்கான சலுகைகள் அனைத்தையும் ஆசிரியர் சமுதாயமும் பெற்றுப் பயனடையச் செய்கின்றமை, பதிவு மூப்பு அடிப்படையிலேயே பள்ளி ஆசிரியர்கள் நியமனம், தொகுப்பூதிய ஆசிரியர் நியமன முறை அடியோடு நீக்கம் எனச் சலுகைகளை வழங்கி, அவர்களைக் காத்து வருகின்றமை முதலான இந்த அரசு வழங்கும் ஆசிரியர் நலத்திட்டங்களை நினைவு கூர்ந்து, ஆசிரியர் சமுதாயம் தமது மக்கள் மனை, சுற்றம் சூழ, நலனும் வளனும் வாய்ந்து, மகிழ்வுடனும் மன நிறைவுடனும் பல்லாண்டு புகழுடன் வாழ என் இதயங்கனிந்த ஆசிரியர்தின நல்வாழ்த்துகளையும், இன்று மத்திய, மாநில அரசுகளின் விருதுகள் பெறும் ஆசிரியப் பெருமக்களுக்கு என் பாராட்டுகளையும் தெரிவித்து மகிழ்கிறேன்.


**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

# கலைஞர்

**அவர்களின் ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி**

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் பங்குபெறும் ஊனமுற்றவர்கள் இனி தேர்வுக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை!

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை!**



தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளுக்குத் தேவைப்படும் பணியாளர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகள் மூலம் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படுகின்றனர்.

ஊனமுற்றவர்களின் நலன்களை மேம்படுத்திடவும், அவர்களின் மதிப்பைச் சமுதாயத்தில் உயர்த்திடவும், ஒரு புதிய சலுகையாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் ஊனமுற்றவர்களுக்கு இனி தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

# அத்தியாவசியப் பொருள்களைச் சரியான எடையில் வழங்கிட 23 ஆயிரத்து 600 நியாயவிலைக் கடைகளில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன மின்னணுத் தராசுகள் நிறுவப்பட்டுள்ளன!

தமிழகத்தில் மொத்தம் 29 ஆயிரத்து 760 நியாயவிலைக் கடைகள் உள்ளன. இவற்றுள் 6 ஆயிரத்து 160 நியாயவிலைக் கடைகளில் ஏற்கெனவே நவீன மின்னணுத் தராசுகள் படிப்படியாக நிறுவப்பட்டிருந்தன.

அந்நிலையில், பொதுமக்கள் நலன் கருதி, நவீன மின்னணுத் தராசுகள் நிறுவப்படாமல் நிலுவையில் இருந்த எஞ்சிய 23 ஆயிரத்து 600 நியாயவிலைக் கடைகளிலும் நவீன மின்னணுத் தராசுகளை உடனடியாக நிறுவிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஆணையிடப்பட்டது.

அந்த ஆணையின்படி, மொத்தம் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன மின்னணுத் தராசுகள் கொள்முதல் செய்யப்பட்டு, 23 ஆயிரத்து 600 கூட்டுறவு நியாயவிலைக் கடைகளிலும் நிறுவப் பட்டுள்ளன.

இதன்மூலம் நவீன மின்னணுத் தராசுகள் இல்லாத நியாயவிலைக் கடைகளே தமிழகத்தில் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளதென்றும், மேலும் அத்தியாவசியப் பொருள்களைப் பொதுமக்களுக்கு எடைக்குறைவின்றி வழங்கிட வகை செய்யப்பட்டுள்ளது என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

அண்ணா 100



## மொழியும் வாழ்வும்

தமிழர்கள் தங்கள் மொழியையும் வாழ்வையும் ஒன்று இணைத்துக் கொண்டவர்கள்; மொழியைக் கருவி என்று நினைக்காமல், தங்களை வழி நடத்தும் துணைவன், வழிகாட்டும் வழிகாட்டி; பாடம் போதிக்கும் ஆசான்; உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடும் நண்பன் என்று நினைக்கிறார்கள்.

## சுமைதூக்கும் தொழிலாளர்களின் கையாளுதல் கூலி ஐந்து சதவீதத்திலிருந்து பத்து சதவீதமாக உயர்வு!

## இனி மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை கையாளுதல் கூலி உயர்த்தி வழங்கப்படும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆணை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், நேரடிக் கொள்முதல் நிலையங்கள், இரயில்வே சேமிப்பு மையங்கள் போன்றவைகளில் பணிபுரியும் சுமைதூக்கும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கையாளுதல் கூலி ஏற்கெனவே கழக ஆட்சியில் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்தி வழங்கப்பட்டு வந்தது. இந்த நடைமுறை அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் 21.9.2001 அன்று வெளியிடப்பட்ட அரசாணையின்மூலம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் உயர்த்தப்பட வேண்டும் என்று மாற்றி அமைக்கப்பட்டது.

சுமைதூக்கும் தொழிலாளர்களின் நலன்களைப் பரிவுடன் பரிசீலனை செய்து, தற்பொழுது நடைமுறையில் உள்ள **ஐந்து சதவீத கூலி உயர்வினைப் பத்து சதவீதமாக உயர்த்தி வழங்கிடவும்,** ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கையாளுதல் கூலி உயர்த்தப்படும் என்பதை மாற்றி, இனி மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்தி வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 26.7.2008 அன்று ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின் காரணமாக, ஏறத்தாழ 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுமைதூக்கும் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

❖ ❖ ❖

## பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஆதிதிராவிட, பழங்குடியின வகுப்புகளைச் சார்ந்த 310 மாணவ, மாணவியர் விரும்பும் மேல்நிலைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பில் சேர்ந்து பயில ஒரு கோடியே 73 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அனுமதி!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை

ஆதிதிராவிட, பழங்குடியின வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் அகில இந்தியப் பொதுத்தேர்வில் கலந்து கொள்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில், அவர்களைத் தயார்ப்படுத்துவதற்காக அரசுப் பள்ளிகள், அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பத்தாம் வகுப்புப் படித்து அரசுப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் இவ்வகுப்புகளைச் சேர்ந்த மாணவ, மாணவியரில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 மாணவ மாணவியரைத் தேர்வு செய்து, அவர்கள் அந்தந்த மாவட்டங்களிலோ, பிற மாவட்டங்களிலோ சிறந்து விளங்கும் தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பில் சேர்ந்து படிப்பதற்காக ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு 28 ஆயிரம் ரூபாய் வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு 56 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம் கடந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அத்திட்டத்தின்படி, இவ்வாண்டில் தமிழகத்தில் உள்ள 31 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 10 மாணவ, மாணவியர் என மொத்தம் 310 மாணவ, மாணவியரைத் தேர்வுசெய்து, அவர்கள் தாம் விரும்பும் சிறந்த தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்ந்து படிப்பதற்காக ஆண்டு ஒன்றுக்குத் தலா 28 ஆயிரம் ரூபாய் வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு 56 ஆயிரம் ரூபாய் என மொத்தம் ஒரு கோடியே 73 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அனுமதித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

# உலக தாய்ப்பால் வாரம்

பிறந்த சிலமணித் துளிகளிலேயே குழந்தைகளுக்குத் தாய்ப்பால் அளிக்கத் துவங்கிடவேண்டும். அதுதான் அது மட்டுமேதான் குழந்தைக்கு உன்னதமான வாழ்க்கைக்குச் சிறப்பான துவக்கமாக இருக்க முடியும். இதனை மறுப்பதற்கில்லை குழந்தைகளின் அனைத்து வளர்ச்சிகளும் முழுமையாக ஏற்படுவதற்குத் தேவையான தூண்டுதலை தாய்ப்பால் தருகின்றது. தாய்ப்பால் குழந்தைகளுக்கு ஒரு பரிபூரண உணவாக அமைகின்றது. தாயாரிடமிருந்து குழந்தை தாய்ப்பாலைப் பெறுவது அக்குழந்தையின் உரிமை எனக் கூறப்படுகிறது. இந்த உரிமை என்றும் எவராலும் பறிக்கப்படக்கூடாது. குழந்தைகளுக்குத் தாய்ப்பால் புகட்டுவது என்பது அக்குழந்தைக்குத் தங்கப்பரிசு அளிப்பதற்கு ஒப்பானது எனக்கருதலாம்.

தங்கம் நம் குடும்பத்திலும், சமுதாயத்திலும் ஒரு மதிப்பு வாய்ந்த பொருளாகக் கருதப்படுகிறது. பித்தளைக்கு இத்தகைய மதிப்பு இல்லை என ஒன்றுபோலக் கூறுவோம். இல்லையா ? அதுபோல்தான் குழந்தைக்குத் தாய்ப் பாலுக்குப் பதில் மாற்றுப் பால் பொருட்களைக் கொடுப்பது.

'தங்கம் இருக்க பித்தளைக்கு அலைவானேன்' ?

'குழந்தைக்குத் தாய்ப்பால் இருக்க மாற்றுப்பால் தருவானேன் ? (புட்டி பால்)

மாற்றுப்பால் பொருட்களைக் குழந்தைக்கு உணவாகக் கொடுப்பது மூலம் நாம் நம்மையும் நம் குழந்தையையும் குறைத்து மதிப்பிட்டுக்கொள்கின்றோம். குழந்தையின் ஆரோக்கியத்திற்கு ஊறுவிளைவிக்கக் காரணம் ஆகின்றோம்.

தாய்ப்பாலுக்கு நிகர் தாய்ப்பால்தான். இத்தகைய சிறப்பு அம்சம் கொண்ட தாய்ப்பாலினை தாய்மார்கள் அனைவரும் குழந்தைக்கு அளிப்பதற்குக் குடும்பத்தினர் சமுதாயத்தினர் பொறுப்பெடுத்துக்கொண்டு ஆதரவு தரவேண்டும் என்பதே இந்த வருடத்தின் தாய்ப்பால் வார காலத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய கருத்தாக எடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேகமான காலக்கட்டத்தில் பெண்களும் குடும்ப நலன் கருதி வேலைக்குச் செல்கின்றனர். வேலை நிமித்தத்தின் பேரில் காலதாமதமாக வீட்டிற்குத் திரும்பும் சூழ்நிலை நிலவுகின்றது. இருப்பினும் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தினை உணர்ந்து பாலூட்டும் தாய்மார்களுக்குப் பல்வேறு வகையில் ஆதரவு அளித்தால் அத்தாய் குழந்தைக்கு நிறைவாகவும், மனமகிழ்ச்சியுடனும் பால் புகட்ட ஏதுவாக இருக்கும் பாலூட்டும் தாய்க்கு, குடும்பம் மற்றும் சமுதாயம், வேலை மற்றும் வேலை இடம் ஆபத்து மற்றும் இக்கட்டான காலங்களில் உதவுதல், அரசு / சட்டம், சுகாதாரப் பராமரிப்பு ஆகிய வழிகளில் ஆதரவு தந்தோமானால் தங்கம் போன்ற மதிப்பு வாய்ந்த குழந்தையினை வளர்த்து பொறுப்புள்ள பிரஜையாக எதிர்காலத்தில் உருவாக்கிட முடியும். இதுதானே உண்மையில் ஒரு தாய் மற்றும் அவளைச்சார்ந்த குடும்பம், சமுதாயம் ஒரு குழந்தையின் மீது போடுகின்ற மூலதனம்,

இக்கருத்தினை வலியுறுத்திக் கூறும் வகையில்தான் ஆகஸ்ட் ஒன்றாம் தேதி முதல் ஏழாம் தேதி வரையில் சென்னை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் 1346 குழந்தைகள் மையங்கள் வாயிலாகத் தாய்மார்களுக்கும் அவர்களைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமுதாய மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அனைத்துக் குழந்தைகள் மையத்திலும் பாலூட்டும் தாய்மார்களுக்குத் தரப்பட வேண்டிய ஆதரவுகள் குறித்த கண்காட்சிகள் வைக்கப்பட்டிருந்தன. இது தவிர குழந்தைகளுக்கு முதல் ஆறு மாதம் வரையில் தாய்ப்பால் மட்டுமே போதுமான, பரிபூரணமான உணவு என்பதனை விளக்கும் கருத்துக்களையும் கண்காட்சியில் உணர்ந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

மைய அளவில் தாய்மார்களையும், புதுமணத் தம்பதிகளையும் வரவழைத்து, தாய்க்குப் பாலூட்டும் காலத்தில் தரப்படவேண்டிய ஆதரவுகள் குறித்து விளக்கப்பட்டன. குழந்தைகள், வளர் இளம் பெண்கள், தாய்மார்கள் ஆதரவுக் குழுவினர்களால் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பலருக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டது.

திட்ட அளவிலும் தாய்ப்பால் வாரம் சிறப்பான வகையில் அனுசரிக்கப்பட்டு நல்ல விழிப்புணர்வு, மக்களிடையே ஏற்படுத்தப்பட்டது. இயற்கையின் படைப்பாம் – தாய்ப்பாலின் அருமையினை உணர்ந்திருந்தாலும், வெளிப்புறச் சூழலில் தாக்கத்தினால் மாற்றுப்பாலுக்குச் சென்று குழந்தையின் ஆரோக்கியத்தினையும், பொருளாதாரச் சிக்கல்களிலும் மாட்டிக்கொள்ளும் தாய்மார்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் இவ்வார விழாமூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தியிருப்பது அவர்களிடத்தே நல்மாற்றத்தினை உண்டு பண்ணும் என்று நிச்சயமாகக் கூறலாம்.

மண் மீதும் பொன் மீதும் போடுவது வீணல்ல – என்ற பழமொழியைக் கேட்டுள்ளோம். அது போன்றே குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்கள் 6 மாதம் வரையில் அனைவரின் ஆதரவுடன் தாய்ப்பால் மட்டுமே அளித்து (தண்ணீர் கூட வேண்டாம்) வளர்த்தால், திருவள்ளுவரின்.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்ற குறள் உரைக்கும் சிறப்பினைத் தாய் அடையலாம்.

**பாலூட்டுவது தாயின் உரிமை – அதற்கு**
**துணை நிற்பது நமது கடமை**

★



## மொழிப்பற்று

மொழிப் பற்று இருப்பது எந்த வகையிலும் வருந்தத்தக்கதல்ல; போற்றத்தக்கது.

# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கொள்முதல் நிலையங்களில் டி.கே.எம்.-9 பொதுரக நெல் கொள்முதல் செய்யப்படும்

காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் நெல் ரகங்களில் ஒன்றான டி.கே.எம்.–9 பொது ரக நெல்லையும் அரசு நெல்கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யவேண்டும் என பல்வேறு விவசாய சங்கங்களும் விவசாயிகளும் வலியுறுத்தி வந்தனர்.

தமிழ்நாட்டில் டி.கே.எம்.–9 ரக நெல் கொள்முதல் செய்வது சில வருடங்களாக நிறுத்தப்பட்டது. எனினும், விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்றும், அவர்களுடைய நலன் புறக்கணிக்கப்படாமலும், அவர்களது நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச ஆதார விலையுடன் மாநில அரசு வழங்கும் கூடுதல் ஊக்கத் தொகையும் முழுவதுமாகக் கிடைத்திடும் வகையிலும் டி.கே.எம் – 9 ரக நெல்லை உடனடியாக அரசு நேரடிக் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் விவசாயிகள் பயிரிடும் அனைத்து ரக நெல்லும் அரசு நேரடிக் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் என்றும், விவசாயிகள் இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

புதிய முகவரியில்

## தமிழரசு

தமிழரசு இதழ்
அலுவலகம் மற்றும் அச்சகம்
தற்போது பின்வரும்
புதிய முகவரிக்கு
மாற்றப்பட்டுள்ளது
என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறோம்.

**தமிழரசு**

110, அண்ணா சாலை,
(அரசு எழுதுபொருள்
மற்றும் அச்சுத்துறை
ஆணையரக வளாகம்)
சென்னை - 600 002.
தொலைபேசி:28520407/
28520408


**100 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்**

TNSC BANK

**TNSC வங்கி**

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,**


233, என்.எஸ்.சி.போஸ் ரோடு, த.பெ.எண்.226,
சென்னை – 600 001.
தொலைபேசி : 2534 0301, 2534 0304
தொலைநகல் : 044-2534 0508
மின்னஞ்சல் : tnscbank@vsnl.com

- தமிழ்நாட்டில் உள்ள அட்டவணையிடப்பட்ட ஒரே கூட்டுறவு வங்கி
- சென்னை நகரில் 46 கிளைகள்
- வைப்பீடுகளுக்கு அதிக வட்டி
- அனைத்துக் கிளைகளிலும் கணினி மூலம் துரித சேவை
- 5 கிளைகளில் ஏ.டி.எம். வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- கூடுதல் சேவை நேரம்

வெளியீட்டு ஆணை எண்.1664/வரைகலை/விளம்பரம் 2007, நாள் : 11.10.2007

இணையதளம் : www.tnscbank.com

# கோ-ஆப்டெக்ஸின் கோலாகலம்
# பருத்தி பட்டின் கோடி அழகு



**கோ-ஆப்டெக்ஸ்**
வழங்குகிறது
**20%**
அரசுத் தள்ளுபடி

குளிர்ச்சியான கோ-ஆப்டெக்ஸ் வண்ணங்களால் உங்கள் வாழ்வை இன்பமயமாக்குங்கள்.

கோ-ஆப்டெக்ஸின் கண்கவர் பட்டு, பருத்தி, ஆடைகளுக்கான துணிவகைகள் 20% அரசுத் தள்ளுபடியுடன்.

வாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

**புதிய வருகை**

"அழகு மயில்" பட்டுப் புடவைகள் "மருதம்" கலப்பிழை பட்டுப் புடவைகள் "கோலங்கள்" கலப்பிழை பட்டுப் புடவைகள்
"மாந்துளிர்" பருத்திப் புடவைகள் "மலையரசி" பருத்திப் புடவைகள் "நாச்சியார்" பருத்திப் புடவைகள் "திருவரங்கம்" பருத்திப் புடவைகள்
"மல்லிகை" பருத்திப் புடவைகள் "கிரி" பருத்திப் புடவைகள் "அரோமா" நறுமண சட்டைகள்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

வெ.ஆ.எண்.219/வரைகலை/விளம்பரம்/2008 நாள் : 6.2.2008

Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08

